# பழி வாங்கும் புயல்!

லயன் காமிக்ஸ்



அடுத்த வெளியீடு

# மரண மாளிகை!




ரிப் கிர்பியின் புதிய சாகஸம்!

ரூ.3



பழிவாங்கும் புயல்!
டெக்ஸ் வில்லர் சாகஸம்!
ஏப்ரலில் ஓர் இனிய காலைப் பொழுது-வடக்குப் பிராந்தியத்தை நியூ மெக்ஸிகோவுடனும், அரிஸோனாவுடனும் இணைக்கும் புதிய இரயில்பாதையில் முதன் முதலாக அன்றுதான் இரயில்சர்வீஸ் துவக்கப்பட்டிருந்தது-
தங்களுடைய குடியிருப்புபிராந்தியத்தின் எல்லையோரத்தில் வேட்டையாட வந்திருந்த சில நவஜோ இளைஞர்கள் 'குப் குப்'என்று புகையை கக்கிக் கொண்டு விரைந்த ரயிலோடு ஒரு பந்தயம் மேற்கொள்ளத் தீர்மானித்தனர்-
நெருப்புவண்டி-
ஓவ்! நம்முடைய மஸ்டாங் குதிரைகளின் ஓட்டத்திறனை வெள்ளையர்களுக்கு புரிய வைப்போம்!
அப்பகுதியை சேர்ந்த இராணுவ வீரர்கள், கால்நடைப் பண்ணை முதலாளிகள், மொத்த வியாபாரிகள் அந்த இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்-
பார்! நவஜோ வீரர்கள்!
எப்போதும் நம் வழியில் குறுக்கிட்டு இடைஞ்சல் செய்யும் அற்ப புழுக்கள்!
நீசர்கள்! அவர்களுடைய குடியிருப்பு பகுதி மட்டும் இங்கில்லாவிட்டால் என் கால்நடைகளுக்கு மிகப் பரந்த புல் வெளி மேய்ச்சலுக்கு கிடைத்திருக்கும்.
அவர்களுடைய பிராந்தியத்தை தவிர்க்க என் வீரர்கள் இருபது மைல் சுற்று வழியில் செல்ல வேண்டிய அவஸ்தைக்கு உள்ளாகிறார்கள்-ஒவ்வொரு தடவையும்!
இப்போது அவர்களின் நோக்கம்தான் என்ன? இரயிலை நிறுத்த சொல்லுகிறான்களா?
சிறிய குழுதான்-ஏதோ வேடிக்கை செய்ய நினைக்கிறார்கள்!
சொறி நாய்கள்! அவர்களுக்கு வேடிக்கைதான் வேண்டுமென்றால்-
நல்ல யோசனை! நம் கைவரிசையை காட்டுவோம்!


தங்களை சூழ்ந்து வரும் அபாயத்தை அறியாத நவஜோ இளைஞர்கள் விரையும் இரயிலை விரட்டிப் பிடிக்க தங்களுடைய குதிரையை உச்ச வேகத்தில் செலுத்திச் சென்றனர். அவர்களுடைய உற்சாக ஆரவாரம் திடீரென்று எழுந்த முழக்கத்தை கேட்டதும் சட்டென்று அடங்கிப் போனது-
ஆ-!
?
டுமீல்
டுமீல்
?
பார்த்தாயா ஸாம்! பயல்களுக்கு தோட்டாவால்தான் பாடம் புகட்ட முடியும்!
ஆ-!
பட
பட
ஐயோ-!
முன்னாலிருந்த பெட்டியில்-
கடவுளே! இவர்களுக்கு என்ன சித்தம் பேதலித்துவிட்டதா?
ஓடிப்போய் உடனே நிறுத்தச் சொல் காப்டன்-
இடியட்ஸ்!
ஜாக்கிரதை! வில்லை எடுத்து குறி வைக்கிறார்கள்!
சண்டாளர்கள்
டுமீல்
யாஹீஈஈ-
ஆ-!
ஆவ் !



நிறுத்துங்கள்! அப்படியே- நிறுத்துங்கள்!
ராட்சஸர்கள்! காப்டனை தாக்கி விட்டார்கள் பார்!
செவ்விந்திய நாய்கள்- நாசமாகப் போக!
முட்டாள்களே: சுடுவதை நிறுத்தித் தொலையுங்கள்!
யாயாஹிஹி!
!
வாவ்! மூன்றங்குலம் தாழ்வாக வந்திருந்தால்-
அற்பப் பதர்களே! உங்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கிறேன்-
டுமீல்
வோவ்-
அசிங்கமான விவகாரம் இது கர்னல். அந்த செவ்விந்திய இளைஞர்கள் விளையாட்டாக இரயிலோடு போட்டி போட்டு வந்து கொண்டிருந்தார்கள்-
ஏய்-ப்ளாயிட்- மூடு வாயை!
இந்த சம்பவம் பற்றி பத்திரிக்கைகளில் நீ விஷமத்தனமாக ஏதாவது எழுதினால் தொல்லை வந்து சேரும் உனக்கு என்று எச்சரிக்கிறேன். சுடுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று அக்கணமே நான் உத்தரவிட்டதையும் நீ குறித்துக் கொள்!
சாட்சிக்கு நாங்கள் இருக்கிறோம்!


விஷமத்தனமாக எதையும் எழுதும் உத்தேசம் எனக்கு இல்லை-இங்கே நடந்ததை அப்படியே எழுதப் போகிறேன்!
உன்னை திருத்தவே முடியாது!
இதற்கிடையே, உயிர் தப்பிய ஒரே ஒரு இளைஞன் ஊற்றடித்த கண்ணீரை அடக்க முடியாமல் கதறிக்கொண்டிருந்தான்-
பாவிகளே-கொலைகாரப் பாவிகளே! நீங்கள் நாசமாகப் போவது நிச்சயம்!
என் நண்பர்களின் மரணத்திற்கு பழி வாங்கும் வரை உங்களை நிம்மதியாக வாழவிட மாட்டேன்-இது சத்தியம்!
அரை மணி நேரம் கழித்து-முதல் இரயிலை எதிர் பார்த்து ஜனங்கள் ஆவலோடு காத்துக்கிடந்த ஸாண்டர்ஸ் நகரைச் சென்றடைந்தது இரயில்-
அதோ-வந்து விட்டது!
ஒரு டாக்டரை வரவழையுங்கள்!
செவ்விந்தியர்கள் தாக்கினார்களா-என்ன!
டாக்டர் கான்ஸே-இங்கே ஓடி வாருங்கள்!
என்ன நடந்தது?
இரயிலின் பின்னால் குதிரையில் விரைந்து வந்த நவஜோ வீரர்களை குறி வைத்துச் சுட்டார்கள் இரண்டு பயணிகள்-
நீ சும்மா இரு! அவர்கள் எங்களை நோக்கி அம்பெய்யத் தொடங்கிய பிறகுதான் நானும், ஸாமும் துப்பாக்கியை கையில் எடுத்தோம்-இங்கே-பாருங்கள்-என் தொப்பி சொல்லும்-நடந்த உண்மையை!
பொய் சொல்லாதே-பார்லோ!


உங்களுடைய பெட்டியிலிருந்த மற்ற பயணிகளை விசாரித்தேன்-முதலில் நீங்கள் தான் சுட்டதாக சொன்னார்கள்!
உளறியிருக்கிறார்கள்!
அதுதான் நடந்தது!
உண்மை என்னவென்றால் அந்த சைத்தான்கள் வில்லை எடுத்து நாணேற்றுவதை கண்ட பிறகு தான் அவர்கள் எங்களை கொல்வதை தவிர்க்க நானும், ஸாமும் சுடத் தொடங்கினோம்!
கண் துடைப்பு!
அஹ்-!
வாவ்-!
ஸாம் ஹோம்பை புளுகன் என்று சொல்ல இதுவரை எவனுக்கும் துணிச்சல் வந்ததில்லை! செவ்விந்திய நாய்களுக்கு பரிந்து பேசும் துரோகியே-உன்க்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்!
அநியாயம்!
இன்னும் வேறு யாராவது உண்டா இங்கே-என்னை புளுகன் என்று சொல்லத் தைரியம் உள்ளவர்கள்?
அவன் கிடக்கிறான் விடு! வா போய் ஏதாவது பருகலாம்!
விஷயம் இத்தோடு முடிந்துவிடாது! நவஜோக்களின் தலைவர் டெக்ஸ் வில்லர்-தன் வீரர்கள் இப்படி படுகொலை செய்யப்பட்டதை கேட்டதும் கொதித்து எழுவது உறுதி!
சமவெளி பகுதியில்-
வோ-அங்கே பார்!
வெள்ளையர்களின் இரத்த வெறியாட்டம்-நவஜோ இளைஞர்கள் பலி!



செய்தியை 'இரவுக் கழுகு'க்கு உடனே தெரியப்படுத்தவும்-
ஒவ்வொரு மலையிலிருந்து அடுத்த மலைக்கு, டான்னர் ஸ்பிரிங்ஸ் முகட்டிலிருந்து மெஸா பள்ளத்தாக்குவரை என்று அடுத்தடுத்து எழுந்தது புகைச் சமிக்ஞை-இளைஞர்களுக்கு நேர்ந்த பரிதாப சாவை பறைசாற்றிக் கொண்டு!
என்ன வெள்ளையர்கள் நவஜோக்களை கொன்று விட்டனரா? என்ன வகையான அக்கிரமமோ?
செய்தி தென்பகுதி யிலிருந்து வருகிறது!
?
டைகர்-! குதிரையில் ஏறு!
ஓ...!
டெக்ஸ் வில்லர், அவருடைய மகன் கிட், டைகர்-மூவரும் தங்கள் குதிரையிலேறி தெற்கு நோக்கி விரைந்தனர்-
எத்தனை பேரை கொன்றார்களோ?
ஏன் என்றும் தெரியவில்லை!
அஸ்தமன வேளையில் கிரேட் ஸ்டாக்கின் கிராமத்தை சென்றடைந்தனர்-
வணக்கம் பல-கிரேட் ஸ்டாக்! கொல்லப் பட்டவர்கள் இந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்று செய்தி கிடைத்தது!
ஆமாம்-நிஜம் அதுதான் தலைவரே!
புனித சிலை அருகே வந்து அமருங்கள்-உங்கள் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையைப் பற்றி தெரிந்து கொள்வீர்கள்!


டெக்ஸும் மற்ற இருவ-ரும் புனித சிலை அருகே சென்று அம-ர்ந்ததும் ஸ்டாக் ஆணையிட ஐவரின் உடல்களும் வெளியே கொண்டு வரப்பட்டன
இளம் பிராயத்து சிறுவர்கள்!
உடல்களை கீழே கிடத்திவிட்டு, அதைச் சுமந்து வந்தவர்கள் எதுவும் பேசாமல் மண்டியிட்டு அமர்ந்தனர்-
அதைத் தொடர்ந்து கோபத்தினால் நடுங்கும் குரலில் டெக்ஸைப் பார்த்து பேசலானான் கிரேட் ஸ்டாக்.
இந்த பச்சிளம் பாலகர் களின் உயிரற்ற சடலங் களைப் பாருங்கள் தலைவரே-
மீசைகூட சரியாத அரும்பாத இளைஞர்கள்-விளையாட்டும், உல்லாச முமாக வாழ வேண்டிய வயது..... பெற்றோர்களின் எதிர்கால நம்பிக் கைச் சின்னங்கள்- இந்த வம்சத்தின் வாரிசுகள்-
-சலனமற்று பிணமாக கிடக்கிறார்கள்- ஈவு இரக்கமற்ற வெள்ளையர்களால் ஈனத்தனமாக வேட்டையாடப்பட்டு! இந்தச் சாவுக்கு பழி வாங்க வேண்டிய கடமை உருவாகியிருக் கிறது-தலைவரே!
காரணமின்றி இவர்கள் கொல்லப்பட் டிருந்தால் நிச்சயமாக பழி தீர்க்கப் படும் ஸ்டாக்! சரி இந்தக்கொடுமைஎப்படி நடந்தது?
இவர்களோடு அப்போது உடனி ருந்த என் மகன் லான்ஸ் உங்க ளுக்கு விளக்கமாக கூறுவான்.
கிரேட் ஸ்டாக் சைகை செய்ததும் லான்ஸ் முன்னால் வந்து நடந் ததை விவரிக்கலானான்-
இதுதான் உண்மையில் நடந்தது!
உன் கூற்றை அப்படி யே ஏற்றுக் கொள் கிறேன் லான்ஸ்-



போர் முரசை ஒலிக்கச் செய்யட்டுமா!
வேண்டாம்!
நான் உடனடியாக டெபியன்ஸ் கோட்டைக்குச் சென்று, அங்குள்ள தலைமை யதிகாரியை சந்திக்கிறேன், அவர் மூலமாக குற்றவாளியை பிடித்து சட்டப்படி தண்டனை பெறச் செய்யலாம்!
அவர்கள் தங்கள் இனத்தவர்களை பிடித்து உரிய தண்டனை வழங்குவார்கள் என்று நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா தலைவரே?
ஆம்-!
இராணுவப் பிரிவு தலைவர் நியாயவாதி! நியாயம் கேட்டுச் செல்கிற நானும் ஒரு வெள்ளையன்தானே! எனக்கு நீதி கிடைக்கச் செய்வதில் தயக்கம் காட்டமாட்டார் என்று நம்புகிறேன்!
அப்படியானால் தாங்கள் திரும்பி வருவதை எதிர் பார்த்து பொறுமையோடு காத்துக்கிடப்பான்! இந்த கிரேட் ஸ்டாக்!
மறுநாள்- டிபியன்ஸ் கோட்டையில்-
நில்லுங்கள்!
என்ன இது இல்லாத வழக்கமாக இருக்கிறது சார்ஜண்ட்?
நீங்களும் உங்கள் மகனும் உள்ளே போகலாம், ஆனால் அந்த செவ்விந்தியனுக்கு அனுமதி இல்லை
அவன் யாரென்று உனக்குத் தெரியாதா என்ன?
நன்றாகத் தெரியும். ஆனால் எந்த ஒரு செவ்விந்தியனும் உள்ளே காலடி எடுத்து வைக்கக் கூடாது என்பது கர்னலின் கடுமையான உத்தரவு!
கர்னலின் உத்தரவா-? சரி- இதுபற்றி நானே அவரிடம் பேசிக் கொள்கிறேன்!



கைதியான கர்னல்!
ஸாரி வில்லர்-! உத்தரவை அலட்சியப்படுத்துவதற் கில்லை-குறிப்பாக நேற்றைய நடப்புகளுக்கும் பிறகு!
நேற்று நடந்தது சம்பந்தமாகத்தான் நான் வந்திருக் கிறேன்!
கிட் நீ இங்கே டைகரோடு இரு-நான் போய் கர்னலை பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன்.
சரி- டாடி!
உங்கள் மகனும் உங்களோடு செல்லத் தடையில்லை-
அவனுடைய உடலிலும் நவஜோ இரத்தம் ஓடு கிறது சார்ஜண்ட்-! அது தெரியாதா உனக்கு?
ஐ ஆம் ஸாரி- ஆனல்-
அங்கே உருவாகி வரும் புயலைப் பற்றி புரிந்துகொள்ள உங்கள் கர்னலுக்கு புத்தி கொடுக்கச் சொல்லி ஆண்டவனை பிரார்த் தனை செய் சார்ஜண்ட்!
ஆமாம்-! அப்பா மட்டும் தலையிட்டுத் தடுத்திராவிடில் இந்நேரம் செவ்விந்தியப் படையினருக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியிருப்பீர்கள்-
ம்ம்-
அவர்களை தேக்கி நிறுத்த உன் தந்தைக்கு சாத்தியம் தான்-இல்லையா?
அப்படித்தான் நானும் நம்புகிறேன்-சார்ஜண்ட்!
ஆனல் செவ்விந்திய இளைஞர்கள் ஐவரைக் கொன்ற பாதகர்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்து உருவாகி வருகிறது என்பதை புரிந்து கொண்டீர்களா?
நல்லவேளை-இங்கே பொறுப்பதிகாரி நானில்லை!



அப்போது உள்ளே-
உட்கார் அப்படி-வில்லர்! உன்னை எதிர்பார்த்தேன் -ஆனால் இத்தனை சீக்கிரத்தில் அல்ல!
நாசத்தை தவிர்க்க என்று வருகையில் எல்லாமே விரைவாகத்தான் நடக்க வேண்டும்-இல்லையா?
நாசமா ? என்ன பெரியவார்த்தைபேசுகிறாய்-! ஏதோ துரதிர்ஷ்டவசமாக நடந்துவிட்டது -அதை போய் பெரிதுபடுத்திக் கொண்டு!
உங்களுக்கு விஷயமே தெரியாது போலிருக்கிறது!
தவறு! அந்த இரயிலில் நானும்தான் இருந்தேன்!
நிஜமாகவா!
அப்படியானால் என்ன தான் நடந்தது சொல்லுங்கள்!
அற்ப விஷயம்! சில செவ்விந்திய இளைஞர்கள் இரயிலை விடாமல் துரத்தி வந்ததைக் கண்டு இரு பயணிகள் வழிப்பறி விவகாரமோ என்று மிரண்டு போயினர்-
அவர்கள் கையில் விற்கள் தயார் நிலையில் இருந்ததைக் கண்டு, முந்திக்கொண்டு அவர்களை சுட்டுவிட்டனர்-காப்டன் ராஸ்வெல் அம்பு பாய்ந்து காயமடைந்துவிட்டது தெரியுமா உனக்கு!
யார் அந்த இரு பயணிகள்?
நியாயமான தற்காப்புக்காக துப்பாக்கியை பயன்படுத்தியவர்கள் ஸாம் ஹோப்பும், பார்ட் பார்லோவும் இப்பகுதியில் செல்வாக்குமிக்க பிரமுகர்கள்-
நன்றி,
அந்த இரு பன்றிகளும் இப்போது எங்கே இருக்கிறார்கள்-இங்கேயுள்ள சிறையிலா-அல்லது கால்லப் நகரிலா?
ஜோக் அடிக்கிறாயா?
நான் எதற்காக கௌரவம் மிக்க பிரமுகர்களை கைது செய்ய வேண்டும்-
பிரமுகர்களாம்-பிரமுகர்கள் முகரை-! நிறுத்துங்கள் இத்தோடு கர்னல் ஸ்டீவர்ட்!


அவர்களுக்கோ, இரயிலுக்கோ எந்தக் கேடும் நினைக்காத அப்பாவி இளைஞர்களை அநியாயமாக கொன்ற பாதகர்கள்-
ஒரு நிமிடம்-
?
மூடுங்கள் வாயை! சொல்ல வந்ததை சொல்லி முடித்துக்கொள்கிறேன்! அரசுக்கும் நவஜோக்களுக்குமிடையே கையெழுத்தான ஒப்பந்தத்தை அவர்கள் ஒருபோதும் மீறியதில்லை-நான் இப்போது கேட்பதெல்லாம் அரசு அந்த ஒப்பந்தப்படி தன் கடமையை செய்யவேண்டும் என்பதைத்தான்.
?
'நவஜோக்கள்' தங்கள் பகுதியில் அமைதியாக வாழும் பட்சத்தில், அங்கே நியாயமும் சமாதானமும் உறுதி செய்யப்படும் என்று சொல்லும் நிபந்தனை இப்போது காற்றில் பறக்கவிடப்பட்டிருப்பதை தட்டிக் கேட்கத்தான்!
அவர்களின் தலைவன் என்ற முறையிலும், அப்பகுதிவாழ் மக்களின் பிரதி நிதியாகவும் வந்திருக்கிறேன்! -அந்த இரு கொலை வெறியர்களும் உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டும்
சரியான பிதற்றல்!
நடந்ததை உள்ளது உள்ளபடி சொல்லிவிட்டேன்-இருந்தும்-
பொய்-! உங்கள் வசதிக்கேற்ப இட்டுக் கட்டிய கதை-
அவர்கள் இருவரும் செய்தது ஈனத்தனமான படுகொலை- இந்த உண்மை, வழக்கு விசாரணைக்கு வரும்போது-
வழக்கு விசாரணைக்கு வராது-
என்ன சொல்கிறீர்கள் நீங்கள்-? விசாரணையே கிடையாதா?
கிடையாது!
இராணுவ, சிவில் அதிகாரிகள் இப்பகுதி குடிமக்களின் அதிருப்தியை-சம்பாதித்துக் கொள்ள விரும்பவில்லை இந்த விவகாரம் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக மறந்துபோக வேண்டிய தன் அவசியம் உனக்கும் புரிந்திருக்குமே!


சீரியஸாகத்தான் சொல்கிறீர்களா?
பின்னே-உன்னோடு விளையாட நானென்ன சின்னப்பிள்ளையா?
ஆல்ரைட்-! கவர்னருக்கு தெரிவித்து அவருடைய அபிப்ராயத்தை கேட்டறிவோம்.
நீ உன் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறாய் என்பது என் எண்ணம். கவர்னருக்கு ஏற்கனவே நிலவரம் சொல்லப்பட்டு விட்டது!
ஆனால் நீ இன்னமும் உண்மை நிலவரத்தை சரிவர புரிந்துகொள்ளவில்லை என்று தோன்றுகிறது-நேற்று நான் அனுப்பிய அறிக்கைக்கு அவரிடமிருந்து வந்து சேர்ந்த பதில் இதோ-
நீயே படித்துப் பார்
?
கர்னல் ஸ்டீவர்ட்/டெபியன்ஸ் கோட்டை:
நேற்றைய சம்பவம் துரதிர்ஷ்டவசமானது. உடனடியாக செவ்விந்திய பிரதிநிதியோடு தொடர்பு கொண்டு அவருடைய செல்வாக்கை பயன்படுத்துமாறு கூறவும். செத்துப் போனவர்களின் உறவினர்களுக்கு ஏதாவது பணம் கொடுக்கவும். செவ்விந்தியர்களுக்கும், வெள்ளையர்களுக்குமிடையே எந்த தொடர்பும் இல்லாமல் விலக்கியே வைத்திருக்கவும்.
கவர்னர் பிலிஸ்டர்.
போதுமா?
ம்ம்-நீ ஒருத்தன்தான் இங்கே அடிமடையன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். என் கணிப்பு தவறு என்று இப்போது புரிகிறது!
சொந்த புத்தி இல்லாத கவர்னர், அப்பாவிகளை அநியாயமாக கொன்ற கிராதகர்கள், நெஞ்சில் ஈரமில்லாத நீ-உங்களில் யாரும் யாருக்குமே சளைத்தவர்களில்லை!
?
ஏய்ய்-என்ன இது-யாரங்கே ஓடி வாருங்கள்!
கைகளை தூக்குடா-கோமாளி!
எதையும் ஒருமுறைக்கு இருமுறை நன்றாக யோசித்துவிட்டு பிறகு பேசு-இங்கேயுள்ள எவரும் விஷமத்தனமாக எதையாவது செய்ய முயன்றால் பாதிக்கப்படுகிறவன் நீயாகத்தான் இருக்கும்-ஜாக்கிரதை!
?



கோட்டையை விட்டு நீ சாமர்த்தியமாக வெளியேறினாலும், தப்பிச் சென்று விட முடியாது-!
என்னைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம்!
நாம் இப்போது என்ன செய்யலாம்?
எதுவுமே-யில்லை!
அடுத்து-
சார்ஜண்ட்! கர்னல் என்னோடு கொஞ்ச தூரம் வரப்போகிறார். அவரை யாரும் பின்தொடர்வதை அவர் விரும்பவில்லை-அப்படித்தானே கர்னல்?
?
துப்பாக்கியின் சுடு வரம்புக்கு அப்பால் நாம் விலகிச் செல்லும்வரை யாரும் ஓர் அடிகூட எடுத்து வைக்கக்கூடாது என்று சொல்லுங்கள் கர்னல்!
ஆமாம்-அது என் உத்தரவு!
சரி-ஏறிக் கொள்ளுங்கள்!
சண்டாளன்!
எல்லோரும் செய்வதறியாது பார்த்துக் கொண்டிருக்க, டெக்ஸ், கிட் டைகர் மூவரும் கர்னலை உடனழைத்துக் கொண்டு அங்கிருந்து அகன்றனர்.
உங்களை இப்படி விட்டுப்போக எனக்கு சம்மதமேயில்லை கர்னல்!
ஆனால் நாங்கள் போகுமிடத்தில் உங்களுக்கு முறையான வரவேற்பு கிடைக்கும் என்று தோன்றவில்லை எனக்கு! அதனால்தான்-
இந்த அக்கிரமத்திற்குரிய விலையை நீ சீக்கிரமே கொடுக்க வேண்டி வரும் வில்லர்!



உங்களை மீண்டும் நான் பார்த்தால் உங்களுக்கு கிடைக்கும் மரியாதையை விடவா? போங்கள்-போய்ச் சேர்ந்து கொள்ளுங்கள் உங்கள் சோற்றுப் பட்டாளத்தோடு!
இதற்கிடையே-
அதோ-!கர்னலை இறக்கிவிடுகிறார்கள்-
சரி-ஏறுங்கள்-குதிரை மீது!
கர்னலின் குதிரையையும் கொண்டு போக வேண்டும்...ம்-சீக்கிரம்!
இதோ-
என்னதான் நடந்தது அங்கே! கர்னலின் முதுகில் துப்பாக்கியை அழுத்தியவாறு நீங்கள் வெளியே வந்ததைக் கண்டதும் எனக்கு மயக்கமே வந்துவிட்டது!
விபரமாக பிறகு சொல்கிறேன்!
இப்போது நம்முடைய ஒரே கவலை, இங்கிருந்து பத்திரமாக விலகிச் செல்வதுதான்! அந்த கிழட்டு கர்னல் தன் ஆட்களை ஏவி நம்மை விரட்டிப்பிடிக்க முயற்சிக்கலாம்!
அவர்கள் தங்கள் நேரத்தை வீணடிக்கப் போகிறார்கள் - வேறென்ன!
அடுத்த முப்பதாவது நிமிடம் நாம் பியூப்லோஸ் கோர்ஜில் இருப்போம் - அதன் பிறகு நம்மைபின் தொடர யாருக்குமே சாத்தியப் படாது!
உண்மைதான்!
ஆனால் இந்த முப்பது நிமிடங்களில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்-அதை தவிர்த்துக்கொள்ள விரும்புகிறேன் நான்!
ஓவ்!
அங்கே-
வேகமாக-இன்னும் ... வாருங்கள்!



வந்து விட்டோம் ஸார்!
போங்கள்-போய் அந்த நாய்களை எப்படியாவது விரட்டிப்பிடியுங்கள். அவர்களை கொண்டு வராமல் நீங்கள் திரும்பவே கூடாது!
உயிரோடு-அல்லது பிணமாக அவர்களை கோட்டைக்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.
உயிரோடு அல்லது பிணமாக-ஓ. கே. கர்னல்!
முடிந்தவரை உச்ச வேகத்தில் வாருங்கள்!
பிணமாக கொண்டு வந்தார்கள் என்றால் சந்தோஷம் எனக்கு இரட்டிப்பாக இருக்கும்!
பதினைந்து நிமிடம் கழித்து-
நெருங்கிவிட்டார்களா?
இல்லை! இடைவெளி இரண்டு மைல் இருக்கலாம்!
நல்லது! நாம் இங்கே பிரிந்து கொள்வோம். இருவரும் நேராகச் செல்லுங்கள். பியூப்லோவில் நாம் ஒன்று சேருவோம்!
?
இரண்டுமணி நேரமாகியும் நான் அங்கு வந்து சேரத்தவறினால் கிரேட் ஸ்டாக்கிடம் ஓடிச்சென்று போர் முரசை கொட்டச் சொல்!
யுத்தத்தை தொடங்குகிறோமா?
ஆமாம் ! அதிகாரிகள் நம் கோரிக்கையை ஏற்று, விசாரணை நடத்தி குற்றவாளிகளை தண்டிக்கத் தவறினால் நாம் வேறென்ன செய்வதாம்?
புரிகிறது!


போர்முரசு கொட்டுவது சும்மா மிரட்ட-அப்படித்தானே டாடி?
ஆமாம்!
சரி பேச்சு போதும்-! உன் கைவசமுள்ள சுருக்கு கயிற்றை கொடுத்துவிட்டுப் போ-!
சுருக்கு கயிறை வாங்கிக் கொண்ட டெக்ஸ் பின்னர் அவர்கள் மேட்டுப் பகுதியை சென்றடைந்ததும் குதிரை யை விட்டு கீழே குதித்தார்-
குதிரையை மறைவில் நிறுத்தி விட்டு, எதிரிகளை வீழ்த்த தந்திரம் பண்ணினார்-
ஆயிற்று ! வருகிறவர்களில் எவனும் கீழே பாதையில் கவனமாக வரக்கூடாது!
கமான்-! சீக்கிரம்! அவர்கள் பியூப் லோஸ் சென்றுவிட்டால் பிறகு அவர்களை தேடிப் பிடிப்பது கஷ்ட மாகிவிடும்.
நிஜமாகவே அவர்களை துரத்தி பிடிக்க விரும்பு கிறீர்களா-ஸார்?
அதில் உனக்கு ஏன் சந்தேகம்? கர்னலின் கடுமை யான உத்தரவை நீயும்தானே கேட்டாய்-! உயிருடனோ, பிணமாகவோ அவர்களை கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்!
முட்டாள்தனமான உத்தரவு அது என்பது என் தாழ்மையான கருத்து!

# மலைகளில் ஒரு மோதல்!


உளறாதே சார்ஜண்ட்! இராணுவத்தில் எந்த உத்தரவுமே முட்டாள்தனமானது கிடையாது!
ஆல்ரைட்-! அப்படியானால், உயிரோடு கோட்டைக்குத் திரும்ப வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வதை தவிர உயிர் பிழைக்க வேறு வழி ஏதும் தெரியவில்லை எனக்கு!


அங்கே-டெக்ஸ்-
சுமார் இருபது பேர்-இதோ வருகிறார்கள் என் வலையை நோக்கி!
குதிரைகளும் படுகாயமடையப் போகின்றன பாவம். ஆனால்-என்ன செய்வது-முட்டையை உடைக்காமல் ஆம்லெட் பண்ண முடியுமா?
சில விநாடிகளுக்குப் பின்-
இதோ வந்து விட்டார்கள்!
கயிறு தடுக்கி குதிரைகள் தடுமாறி சரிந்தன-
ஆவ்-!
ஐ யோ!
ஹீ..ஹீ—ஹீ
அவர்கள் சுதாரித்து எழுந்து பயணத்தை தொடர ஏகப்பட்ட அவகாசம் தேவைப்படும்!



கணமும் தாமதியாமல் சரேலென்று குதிரை மீது பாய்ந்து ஏறி வடக்கு நோக்கி பறந்தார் டெக்ஸ்-
ஓடு-சீக்கிரம்!
எங்கேஓடறே?
பதுங்குங்கள்!
அந்த பாறைக்கு இடப்பக்கம் பார்-
?
வில்லர்!
அவனுடைய சேஷ்டையாகத் தானிருக்கும்!
சண்டாளன்!
-ஸார்-அடி பலமா?
அதிர்ஷ்டவசமாக தப்பித்துக் கொண்டு விட்டேன்!
லெப்டினெண்ட்! வில்லர் தப்பியோடுகிறான்- நமக்கும் அவனுக்குமிடையே அரைமைல் தொலைவுதான்-
ஏறுங்கள் குதிரை மீது-! எனக்கு யாராவது ஒரு குதிரை தாருங்கள்!
காயமடைந்தவைகளை என்ன செய்வது ஸார்?
யாராவது இருவர் இங்கே இருந்து அவற்றை கவனித்துக் கொள்ளட்டும் ம்-புறப்படுங்கள்!
மறு நிமிடம் பத்துப் பேர் உடன் வர புயல் வேகத்தில் பயணத்தை தொடர்ந்தார் அந்த அதிகாரி.


அனல் ரைபிளின் சுடும் வரம்புக்கும் அப்பால் போய்க்கொண்டிருந்தார் டெக்ஸ்-
இந்த இடைவெளி தொடர்ந்து இருக்குமாறு நான் பார்த்துக் கொண்டாலே போதுமானது!
கால் மணி நேரம் கழித்து-
அதோ வருகிறார்!
ஓவ்!
எதிரிகள் அவரை துரத்தி வருகிறார்கள்!
எழுகிறபுழுதியை வைத்துக்கணித்தால் எதிரிகளின் எண்ணிக்கை குறைந்து விட்டமாதிரி தோன்றுகிறது-
நம்மில் ஒருவர் இங்கே இருக்க, மற்றவர் ப்யூமா நீரூற்றுக்குச் சென்று அங்கே காத்திருப்பது நல்லது என்று நினைக்கிறேன்.
நான் இங்கே நிற்கிறேன்!
என்னுடைய குதிரையையும் கூட்டிச் செல். நான் குறுக்குப் பாதை வழியாக நடந்தே வந்து விடுகிறேன்.
சரி!
இதற்கிடையே-
நெருங்கி விட்டோம்- ஸார்!
ஆனாலும் அவன் பள்ளத்தாக்கு பகுதி யினுள் நுழைந்து கொள்ளுமுன் பிடிக்க இயலாது!
பள்ளத்தாக்கினுள் நுழைந்தோமேயானால் வழி தெரியாமல் திண்டாடிப் போவோம்!
ஆபத்தாகி விடும்!
அது ஒரு புதிர் பிரதேசம். வில்லர் அங்கே இஷ்டத்திற்கு தந்திரம் பண்ண முடியும்!
ஆனால் உத்தரவுப்படி நாம் பின் வாங்க முடியாதே!


ரைபிளை எடுத்து அவனுடைய குதிரையை குறி வைக்க முடியுமா பார்!
டுமீல் டுமீல் டுமீல்
நெருங்கி வந்து விட்டார் கள்-ஓடு வேகமா!
டுமீல்
டுமீல்
இன்னும் கொஞ்ச தூரம் தான்-பிறகு நீ நிதானமாக மூச்சு விடலாம்.
சுடு-விடாதே!
டுமீல்
தோட்டா பாயும் வரம்பிற்குள் வந்துவிட்டார்கள்-
டுமீல்
டுமீல்
?
டுமீல்
ஐயோ-!
ஹீ ஹீ ஹீ...
டுமீல்
டுமீல்


ஸார்! மலைமுகட்டிலிருந்து யாரோ சுடுகிறார்கள்!
சண்டாளர்கள்-நாசமாகப் போக!
வில்லரை விரட்டிச்செல்லும் நம்மை தடுத்து நிறுத்துவது அவர்களுடைய நோக்கம் என்றால் ஏமாந்து போகப்போகிறார்கள் - ம் - புறப்படு!
டுமீல்
ஜாக்கிரதை!
ஐயோ-!
ஆவ் வ்!
டுமீல்
டுமீல்
அங்கே என்னதான் நடக்கிறது-?
இங்கிருந்து கவனித்தால் விவகாரம் என்ன என்று தெரியக்கூடும்!



துப்பாக்கி முழக்கம் கேட்டு கிட்டும் சுறுசுறுப்படைந் தான்-
டைகர்தான் வெளுத்துக் கட்டுகிறான் என்று நினைக்கிறேன்.
சில நிமிடங்களுக்குப் பின் டெக்ஸின் குதிரை தனியே நிற்பதைக் கண்டான் கிட்...
டாடியை எதிரிகள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களோ?
ஆனால்-அப்போது-
டுமீல்
அஹ்-!
துப்பாக்கியை கீழே எறிந்துவிட்டு அப்படியே நில்லுங்கள்-
ம்-ம் சீக்கிரம்! இல்லையேல் அடுத்த தோட்டா லெப்ட்டினென்ட்டின் மண்டையோட்டில் துளைபோடும்?
சே-படு தோல்வி
வெரிகுட்! உங்களில் யாருக்குமே அவசரமாக பரலோகம் போக விருப்பமில்லை அல்லவா?
அது-டாடியின் குரல்!
குதிரையிலிருந்து இறங்கி, கைகளை உயர்த்தி எதிரே தெரியும் முகட்டை பார்த்த வாறு நில்லுங்கள்.
அவர் சொல்லுகிறமாதிரி செய்யுங் கள்-உயிர்மீது ஆசையிருந்தால்!



நன்றி கிட்! இவர்களை நீ கவனித்துக் கொண்டிரு. நான் போய் டைகருக்குஎன்ன ஆயிற்றுஎன்று பார்த்துவிட்டு வருகிறேன்.
கமான் லெப்டினென்ட்! துப்பாக்கியில் கைவைக்க நினைக்க வேண்டாம்!
?
இதற்கிடையே கால்லப்பில்-
ஹே-பார்லோ! இதை படித்துப் பார்-
அந்த முட்டாள் பத்திரிக்கையாசிரியர் ஏதாவது விஷமத்தனமாக எழுதியிருக்கிருன?
இன்னும் மை உலரவில்லை- ஆனால் பிய்த்துக் கொண்டு போகிறது விற்பனை?
!
?
!
சனிப்பயல்!
நகர முரசு
உள்ளூர் பிரமுகர்களின் வெறிச் செயல்!
ஒரு நேரடி ரிப்போர்ட்!
மான நஷ்ட விவகாரம் இது! பயலுக்கு மறைகழன்று விட்டதென்று நினைக்கிறேன்- படித்துப்பார் நான் சொல்வது புரியும்;
!
இவன் என்ன வேண்டுமானலும் எழுதிவிட்டும் போகட்டும்- ஜனங்களின் அபிப்ராயம்தான் உனக்குத் தெரியுமே!
என்னுடைய கவலை ஜனங்கள் என்ன நினைக்கிருர்கள் என்பதைப்பற்றி இல்லை!
ஆமாம் கிறிஸ்! இந்த பத்திரிக்கைச் செய்தி கவர்னரை எட்டுமேயானல், ஒரு விசாரணைக்கு அவர் உத்தரவிடலாம். இந்த குற்றச்சாட்டை ப்ளாயிட் நிரூபிக்க முடியும் பட்சத்தில் பார்லோவின் நிலைக்கு ஆபத்து வரக்கூடும்!


அவன் நாசமாகப் போக- இப்போதே அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்கிறேன்-
நெஞ்சில் கொலை வெறியோடு பார்மேனிடம் சென்ற பார்லோ விஷயத்தை அவனிடம் சொன்னான்-
காலடரிம் சொல்-என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியும்-
நான் பார்த்துக் கொள்கிறேன்-பாஸ்!
அரைமணி நேரம் கழித்து-
யோக்கியமான இரு பிரமுகர்களைப் பற்றி திட்டமிட்டு அவதூறாக எழுதப்பட்டிருக்கிறது- ஆதாரமே இல்லாத குற்றச்சாட்டு-
-இதைப் படிக்கும் பிற ஜனங்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் இது நம் மானப் பிரச்னை-
ஆமாம்-இதை விடக்கூடாது!
இதற்கிடையே-
ஷெரீப்-! பிரதானதெருவில் நவஹோ விவகாரம் பற்றி காரசாரமாக விவாதம் பண்ணிக் கொண்டிருக்கிறது ஒரு கும்பல்-
பேசட்டுமே- அதனால் என்ன?
இப்போதுதான் அந்த பத்திரிக்கைச் செய்தியைப் படித்தேன்-மக்களிடையே சலசலப்பு ஏற்படத்தான் செய்யும்-ஆனால் விபரீதமாக எதுவும் நடக்க காரணமே இல்லை!
ஓ.கே!
ஆனால் ஷெரீப்பின் கணிப்பு தவறு! அந்த வினாடியில் ஒரு கூட்டம் ஆங்காரத்தோடு காலலப் செய்திப் பத்திரிக்கை அலுவலகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது-
தீ வைப்போம்!
நகரை விட்டு துரத்தியடிப்போம்!


ரௌடிக் கும்பல்!
பத்திரிக்கை அலுவலகம் முதல் மாடியில் இருந்தது-
சார்- இங்கே இருக்காதீர்கள் ஒரு கும்பல் ஆவேசத்தோடு வந்து கொண்டிருக் கிறது இங்கே.
வரட்டும் கத்திவிட்டு அலுத்துப்போய் வீடு திரும்ப போகிறார்கள்- அவ்வளவுதானே
சும்மா கத்திவிட்டுப் போகிறவர்களாக இல்லை சார்- அவர்கள் வன்முறையை கையாளக்கூடும்!
அதற்கு அவர்களுக்கு துணிவிருக்குமா என்ன? இது ஒரு ஒழுக்கமான நகரம்.
ப்ளாயிட் அடுத்த வார்த்தையை கூறுமுன் ஜன்னல் கண்ணாடி படீர் என்று உடைந்து தூள்தூளானது-
சுடுகிறார்கள்!
?
க்ராஷ்
வெளியே வாடா- போக்கிரி நாயே!
டுமீல் டுமீல்
அடுத்து
தாழிட்டிருக்கிறது!
உடைத்து திறங்கள்!
DISPATCH
நொறுக்குங்கள்!
க்ராஷ்
சார்- நம்மை கொன்று விடுவார்கள்!
நீபோ டாம்!- சீக்கிரம்! பால்கனி வழியே வெளியேறி மேல் தளம் வழியாக போய்விடு!


நீங்கள்?
என்னைப்பற்றி கவலைப்படாதே டாம்!- என் மீது கைவைக்க அவன்களுக்கு துணிவு வராது!
ப்ளாயிட் தப்பியோடிட்டான்!
தீயிட்டு கொளுத்துங்கள்!
தேடிப் பாருங்கள்!
ஹுவ்வ்ய்-
க்ரா!!ஷ்
ஷெரீப்- சீக்கிரம் புறப்படுங்கள்- ப்ளாயிடின் இடத்தை துவம்சம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்!
அறிவுகெட்ட கிறுக்குப்பயல்கள்! ருபும், ஸ்டட்டும் எங்கே?
வெளியே காத்திருக்கிறார்கள்- உங்களுக்காக.
வா...போகலாம்!
பத்திரிக்கையாசிரியரின் கூற்றை நாம் ஒப்புக்கொள்வதில்லை- ஆனால் இப்படியொரு ஆராஜகம் நம் நகரில் நடப்பதை நான் சகித்துக் கொள்ள முடியாது! வாருங்கள்- போவோம்!
இதற்கிடையே-
க்ராஷ்
கதவை உடைத்துத் திறக்க என்ன அவசியம் வந்தது- அது பூட்டாமல் தானே கிடந்தது!
தப்பியோட அவகாசம் கிடைக்கவில்லையோ?


தப்பியோடவா-? நானா-? எதற்கு-?
செய்வதையும் செய்துவிட்டு என்ன திமிராகப் பேசுகிறார் பார்-
ஆத்திரம் உன் கண்ணை மறைக்கிறது!
என்ன காரணத்திற்காக நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்களோ-அதில்- அஹ-!
டமார்
விலகி வழியை விடுங்கள்-
எல்லோரும் வந்த வழியை பார்த்துக்கொண்டு திரும்பி ஓடுங்கள் முட்டாள்களே! யாராவது முரண்டினால் தயங்காமல் சுட்டு விடுவேன் - ஜாக்கிரதை!
சீக்கிரம்- பற்ற வை!
ஷெரீப் வந்து விட்டார்!
டாம் நீ இங்கேயே நில்-எவனாவது உள்ளே நுழைய முயன்றால் சுடு!
சரி!
மறுவினாடி ஷெரீப்பும் அவருடைய உதவியாளர்களும் புயலென உள்ளே புகுந்தனர்-
கைகளை உயர்த்துங்கள்!


தீயை யாராவது அணையுங்கள்!
டமில்
இறங்கி நடடா- பன்றிப் பயலே!
மெள்ள-! அவனை ஒரேயடியாக கொன்று விடாதே பில்!
மூர்ச்சையடைந்து விட்டான்!
தீப்பற்றிய விபரம் பயலுக்குதெரியப் போவதில்லை!
ஆனால் அவர்கள் கீழ் தளத்தை வந்தடைந்தபோது
நில்லுங்கள் அப்படியே- கைகளை தூக்குங்கள் மேலே!
யாராவது விஷமத்தனமாக எதை யாவது செய்ய முற்பட்டால் உடனடி யாக கல்லறை வாசம்தான்
அடச்-சே!
ஸ்டட்-அவர்களிடமிருந்து துப்பாக்கி களை பிடுங்கு! முரண்டினால் சுடத் தயங்காதே!
நீங்கள் ரொம்பவும்தான் அலட்டிக் கொள்கிறீர்கள் ஷெரீப்!
இங்கிருப்போர் அனைவரையும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்-!
மூடு வாயை!
தெரியும் உங்களை- உதவாக்கரை போக்கிரி கள் என்று உங்களை எல்லோரையும் கம்பிகளின் பின்னே தள்ளினால்தான் இந்த நகரம் உருப்படும்!


சில நிமிடங்களுக்குப் பின் அவர்கள் கைதிகளாககொண்டு செல்லப் பட்டனர்...
மற்றவர்கள் அவரவர் வீட்டிற்கு போகலாம்!
ஒதுங்கி வழிவிடுங்கள்! வேடிக்கை அவ்வளவுதான்!
உள்ளே
எப்படி இருக்கிறுய் ப்ளாயிட்?
டாக்டரை வரவழைக்கட்டுமா?
அவசியமில்லை!
ரணமாக வலிக்கிறது-ஆனல் எதுவும் முறிந்து போகவில்லை!
நன்ருக ஊற்றிக்கொண்டு உறங்கி எழுந்தால் எல்லாம் சரியாகி விடும்!
ஹூம்!
நீ எழுதிய செய்தியறிக்கை வம்பை வளர்க்கும் என்று உனக்குத் தெரியாதா என்ன?
தெரியும் ஷெரீப்-
ஆனல் இந்த அளவுக்கு இல்லை! பாருங்கள்!
எல்லாமே நாசமாகி விட்டது-நாங்கள் தருணத்தில் வந்து சேர்ந்திராவிடில் மேலும் மோசமாக ஏதாவது நேர்ந்திருக்கலாம்!
சர்வ நாசமாகிவிட்டது-இனி பத்திரிக்கையை தொடர்ந்து நடத்த முடியாது!
ஸாரி-ப்ளாயிட்!
நஷ்ட ஈடு கோரிப்பெற்று பத்திரிக்கையை தொடரலாமே?
இல்லை. அதற்கு காரணங்கள் இரண்டு-


முதலாவதாக, உங்களுக்கும் தெரியும்- வந்த போக்கிரிகளிடம் பணமே கிடையாது!
ம்ம்...
இரண்டாவதாக, உண்மையை எடுத் துரைத்தவனுக்கு இதுதான் கதி என் கிற அளவுக்கு தரம் இறங்கிப் போய் விட்ட இந்த சமுதாயத்திற்காக நான் பேப்பரையும், மசியையும் வீணடிக்கத் தயாரில்லை.
அன்றிரவு- டிபியன்ஸ் கோட்டையில்-
?
யாரங்கே போவது?
லெப்டினென்ட் ஜோர்டன் வந்திருக்கிறேன்- கதவை திறங்கள்!
ஏய் காவலாளி- கதவை திற... அப்படியே கர்னலிடம் சென்று மிஸ்டர் ஜோர்டன் தன் ஆட்களு டன் திரும்பி வந்து சேர்ந்திருப்பதாகச் சொல்!
அதையடுத்து-
டாக்டரை வரவழையுங்கள்! ஒவ்வொருத்தருக்கும் பலத்த காயம், எலும்பு முறிவு - ம் - சீக்கிரம்!
?
கால்மணி நேரம் கழித்து-
வாவ்-! ஆயுதங்களை இழந்துவிட்டு, கால்நடையாக- ஹூம்!
கர்னலின் முன் இப்படிப்போய்நிற்க வேண்டிய பரிதாப நிலை நமக்கு வரவில்லையே என்று சந்தோஷப்படு!
நோ- நீ கையாலாகாதவன்! இப்படித் தானா எதிரி விரித்த வலையில் கண்- மூடித்தனமாகப் போய் விழுவது- அறிவு வேண்டாம்?
ஸாரி- ஸார்!


ஸாரி சொல்லிவிட்டால் ஆயிற்று? உன் நடத்தைப் பற்றி மிலிட்டரி டிரிப்யூனலுக்கு தெரிவிக்கப்படும்-! பிறகு வருவதை நீ அனுபவிக்கத் தான் வேண்டும்!
போய்த் தொலை! அப்படியே தந்தி குமாஸ்தாவை இங்கே வரச் சொல்லிவிட்டுப் போ!
யெஸ்-கர்னல்!
ஆனால் கோட்டைக்கு தென் கிழக்கில் சுமார் பத்து மைல் தொலைவில்-
தந்திக் கம்பங்களின் வரிசை இங்கேதான் சற்றுத் தொலைவில் இருக்கின்றன
லோபோஸ் மெஸா அருகே இருப்பதாக தலைவர் சொன்னார்-
நெருங்கி விட்டோம்!
சில நிமிடங்களுக்குப் பின்-
யாயாஹீஹீ-அதோ!
ஓவ்!
சுருக்கு கயிற்றை வீசுங்கள்!
வின்கேட் கோட்டையில்
அட-அநியாயமே!
உஷ்ஷ்...
டெபியன்ஸ் கோட்டையிலிருந்து வின்கேட் கோட்டை தலைமையகத்திற்கு அவசரச்செய்தி: கர்னல் ஸ்டீவர்ட்டை கடத்திச்செல்ல முயன்றான் டெக்ஸ் வில்லர். விரட்டிச் சென்ற படைபிரிவு அதிரடியாக தாக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல விபரீத விளைவுகளை தொடரலாம் என்று அஞ்சுகிறோம்.
நவஜோக்களின் தாக்குதலை தேக்கி நிறுத்த இங்குள்ள படைப்பிரிவுக்கு இயலாத நெருக்கடி உருவாகி,


டமார்
ஓவ்!
ம்ம் வயரை துண்டியுங்
கள் சீக்கிரம்!
ஓவ்!
டக்
ஏன் எழுதுவதை
நிறுத்தி விட்டாய்?
செய்தி வருவது
நின்று விட்டது-
-டெபியன்ஸ் கோட்டை
யிலிருப்போர் பேச்சை
நிறுத்தியதால் ஏற்பட்ட
தடங்கல் இல்லே இது
என்று உறுதியாக
சொல்லலாம்.
நவஜோஸ் கோட்டை
யை தாக்கினர்களா
என்ன?
அப்படித்தான்
தோன்றுகிறது-
கடைசி வரியை
மீண்டும்
படியுங்கள்!
அதை இப்படிக்கொடு-காப்டன் நார்போக்
கிடம் கொண்டுபோய் கொடுப்போம்!
நான் இங்கேயே இருக்கிறேன்-தடங்கல்
தற்காலிகமானதாக இருந்து, தொடர்ந்து
செய்தி வந்தாலும் வரலாம் இல்லேயா?
அதே சமயம்-கால்லப்பிலிருந்து
அரை மைல் தொலேவில்..-
அதோ-! இத்தனே ஆர்ப்பாட்டங்
களுக்கும் மூலகாரணமான எத்தர்கள்
இருவரில் ஒருவனே நேரில் சந்
திக்கப் போகிறேன் வெகு
சீக்கிரத்தில்!



நள்ளிரவு மோதல்!
நள்ளிரவு நெருங்கிவிட்ட அந்த அகால வேளையிலும் சாலையில் ஜன நடமாட்டம் இருக்கக் கண்டார் டெக்ஸ்-
இங்கே ஏதோ வித்தியாசமாக சம்பவித்திருக்க வேண்டும்!
அது நிஜம் இல்லை-! அந்த விவகாரத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது!
நான் கைது செய்தவர்களில் ஒருவன் தனக்கு பணம் கொடுத்தனுப்பியது பில் கால்ட்டர் என்று சொன்னான்!
பில் கால்ட்டர் உன்னுடைய கையாள் என்ற விஷயம் ஊரறிந்த உண்மை!
அதற்காக-?
நான் சொல்லித்தான் கால்ட்டர் அந்த கும்பலை அனுப்பி வைத்தான் என்று நிரூபிக்க முடியுமா- உங்களால்?
பார்லோ-! நான் தேடி வந்த ஆசாமி!
நிரூபித்துக் காட்டுகிறேன பார்லோ.
எதையுமே நிரூபிக்க முடியாது ஷெரீப்-அனாவசியமாக என் விஷயத்தில் தலையிடுகிறீர்கள் நீங்கள்!
என்ன அச்சுறுத்துகிறாயா?
இல்லை-எச்சரிக்கிறேன்! தேர்தல் சமீபத்தில் நடக்கவிருப்பதை மறந்துவிட்டீர்கள்-! நாற்றமடிக்கும் செவ்விந்திய கும்பலுக்கு துணை போகிற மனிதரை தேர்ந்தெடுக்க இந்நகர மக்கள் முடாகள் அல்ல!
பதவி ஆசை பிடித்தவனல்ல நான-
உண்மையை உள்ளபடி எழுதிய பத்திரிக்கை ஆசிரியரை நிர்மூலமாக்கிய அடாவடி கும்பலை தட்டிக் கேட்பது தவறு என்று ஜனங்கள் நினைத்தால் இந்நகரை விட்டு வெளியேறுவதில் எனக்கு சந்தோஷம்தான் ஏற்படும்!
சரியாக சொன்னீர் ஷெரீ



கோபாவேச மாக குரல் வந்த திசை யில் திரும்பிய பார்லோ, தன்னை ஒரு நபர் முறைத் துக் கொண்டு நிற்பதைக் கண்டான்-
அந்நியன் நீ-இதில் அனாவசியமாக மூக்கை நுழைக் காதே!
அடக்கடவுளே. வில்லர்!
டெக்ஸின் பதில்-
சதக்
அஹ்-!
ஐயோ!
டம்
எனக்கும் பார்லோவுக்கும் தனிப்பட்ட விவகாரம் இது-வேறு யாரும் குறுக்கிட வேண்டாம்!
யாராவது துப்பாக்கியில் கைவைக்க நினைக்க வேண்டாம்-நான் உங்களை கவனித்துக்கொண் டிருப்பேன்!
தாங்க்ஸ் ஷெரீப்!
அடேய்- சோமாறி! நீ செய்த இமாலயத் தவறு இது! கிடைக்கப் போகும் பதிலடியை தாங்க முடியாது உன்னால்!
அப்படியா!
நவஹோ இளைஞர் குழுவை ஒட்டு மொத் தமாக பலிகொண்ட அரக்கன் பார்லோ நீதான் என்றால் எனக்கு பெருத்த ஏமாற்றம்தான் ஏற்படுகிறது.
?
உன்னைப் போன்ற அசகாய சூரன் முகரையில் இப்படி குத்து வாங்கிய பின்னும் வாய் வார்த்தையாக பேசிக்கொண்டு நின்றால் எப்படி?
அடச் சீ!


என்னை சீண்டிப் பார்க்கிறாயா? உன் சூழ்ச்சி வலைக்குப் பலி யாகிற ஏமாளி நானில்லை?
நான் எப்படிப்பட்டவன் என்று இந்நகர மக்களுக்குத் தெரியும்- உன்னோடு இப்போது சண்டையிட மறுத்தாலும்!
தாடையில் மேலும் சில குத்துக்களை வாங்கிக் கொண்டு நீ போகத் தீர்மானித்தால் எனக்கு ஆட்சேபணை இல்லைதான்!
நிராயுதபாணியான சிறுவர்களை பிரமாத மாகச் சுட்டுத் தள்ளும் உன் போன்ற ''வீரர்களுக்கு'' மேலிடத்திலிருந்து மெடல் கொடுப்பார்கள்!
பொய்- அப்பட்ட மான பொய் அது!
கும்!
ஜாக்கிரதை பார்லோ!
டெக்ஸ்வில்லரை பொய்யன் என்று சொன்ன எவனும் மறுநிமிடம் உயிரோடு இருந்ததில்லை!
உன் வார்த்தை களை கேட்கும் நிலையில் அவன் இல்லை வில்லர்!
உங்களில் யாராவது இவனை தூக்கிக் கொண்டு போங்கள்!
?
வில்லர்!
வில்லர் நீ என்னோடு வா- சில விஷயங்களை கலந் தாலோசிக்க வேண்டும்.
அதையடுத்து-
நீ இப்போது இல்லா விட்டாலும் சீக்கிரமே ஒருநாள் இங்கே வருவாய் என்று எதிர்பார்த்தேன் வில்லர்-
அர்த்தமுள்
கணிப்புத்தா



அப்பாவி இளைஞர்களைக் கொன்ற இரு கயவர்களின் பெயர்களை கேட்டமாத்திரத்திலேயே, இங்கே நடப்பு என்ன என்று தெரிந்து கொள்ள விரும்பினேன்.
உண்மையில் என்ன தான் நடந்தது?
ஏன் உங்களுக்குத் தெரியாதா?
பேப்பரில் படித்துத்தான் தெரிந்து கொண்டேன்!
இதோ இருக்கிறது- நீயே படித்துப் பார்!
கால்லப் நாளிதழில் வெளியாகியிருந்த செய்தியை சட்டென்று படித்து முடித்தார் டெக்ஸ்-
இதுதான் உண்மையில் நடந்ததா?
ஏறத்தாழ இதுதான்-முடிவு மட்டும் சற்று தவறுதலாக இருக்கிறது
எப்படி?
அவர்கள் கொன்றது ஐவரைத்தான்! ஆறாமவன் விழுந்தது, அவனுடைய குதிரையை இவர்கள் சுட்டுவிட்டதால்!
அந்த இளைஞன்தான் நடந்ததை கிரேட் ஸ்டாக்கிடம் போய் தெரிவித்தவன்
கிரேட் ஸ்டாக்கை நான் அறிவேன்- சாந்தமான மனிதன்-
செத்துப்போன இளைஞர்கள் அவருடைய ஜாதியினர் என்றால் பிரச்னையை சுமுகமாக முடித்துவிட வாய்ப்புண்டு-
அவரை நீங்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது இதிலிருந்து!
SHERIFF
அவர் சாந்தமானவர் தான்- ஆனால் ரோஷத்தில் யாருக்கும் சளைத்தவரில்லை!
நவஹோக்கள் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்று மட்டும் சொல்லிவிடாதே!


ஸாரி-சூரிய அஸ்தமனத்திற்கு சற்றுக் கழித்து போர் முரசு ஒலித்தது அங்கே-
எ-என்ன?
விளைவு என்னவாகும் என்று தெரியாதா உனக்கு? சட்டத்தை பரிபாலனம் பண்ணும் அதிகாரி நீ, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக தலைவனும்கூட! நீ ஏன் அவர்களை தடுக்கவில்லை?
நேற்றிரவு அவர்களை தேக்கி வைத்தேன் ஷெரீப்!
கவர்னரிடம் நியாயம் கோரிப் பெற முடியும் என்கிற உறுதி மொழியை தந்துவிட்டு, டெபியன்ஸ் கோட்டைக்குச் சென்றேன்-
ஆனால் என் உறுதிமொழியின் படி சாதிக்க இயலவில்லை!
கோட்டையில் நடந்ததை விபரமாக எடுத்துரைத்தார் டெக்ஸ்!
நான் என்ன செய்வது? சொல்லுங்கள்!
மடையர்கள்!
அவர்கள் தங்களை உடனடியாக திருத்திக் கொள்ளத் தவறினால் இப்பகுதியில் இரத்த ஆறு ஓடுவதை தவர்க்க முடியாது போய்விடும்!
மடையர்களுக்கு இது புரிந்தால்தானே!
மேலிடத்தில் இருப்பவர்களுக்கு நீதி, நியாயங்களைவிட தங்களுடைய கௌரவம்தான் பெரிதாக தோன்றுகிறது.
ம்ம்...
அடுத்த சில நிமிடங்களுக்கு அவர்களிருவரும் மௌனம் சாதித்தனர்-பிறகு ஷெரீப் பேசலானார்-
நீ இங்கே வந்த காரணம்?
கொலைகாரனைப்பற்றி முழு விபரம் சேகரிக்க?
அதோடு அரசாங்க விசாரணைக்கு அவர்களை சரணடையச் செய்ய முடியுமா என்றும் பார்க்க நினைத்தேன்!
நடக்காது வில்லர்!



நீதான் பார்லோவை சந்தித்தாயே! குற்றத் தை ஒப்புக்கொள்ளும் மனச்சாட்சி இல்லாத கல்நெஞ்சன்!
அதே போல பார்லோவின் தோஸ்தான ஸாம் ஹோப் பும் ஒண்ணும் நம்பர் திருடன்!
கால்நடை மந்தை உரிமையாளன் தானே?
ஆமாம்! பிறை நிலா பண்ணை அவனுக்குச் சொந்தம்!
அவன் ஒரு முக்கியபுள்ளிதான்-! வின்கேட் கோட்டைக்கும் டெபியன்ஸ் கோட்டைக் கும் அவன்தான் இறைச்சி சப்ளை செய்து வருகிறான். குபேர சுரங்கத்திற்கு ஏகபோக அதிபதி.
போதும்-!
விஷயத்தை அப்படியே அமுக்கிட ஏன் கவர்னர் விரும்புகிறார் என்று இப்போது புரிகிறது!
அடுத்து நீ என்ன செய்வதாக உத்தேசம்!
ஒளிவு மறைவின்றி அப்படியே சொல்லிவிடட்டுமா?
ம்ம்... வேண்டாம்!
உண்மைக்கு இது காலமில்லை!
'உண்மையை எழுதுகிறேன் பேர்வழி' என்று வகையாக வாங்கிக்கட்டிக் கொண்டார் ப்ளாயிடு!
ப்ளாயிட்? பத்திரிக்கை ஆசிரியரா?
ஆமாம்! அவருடைய அலுவலகத்தை தவிடு பொடியாக்கி விட்டார்கள். நல்ல வேளை நான் போய்ச் சேர்ந்தேன். இல்லையேல் அவரையும் கொன்னு போட்டிருப்பார்கள்.
பார்லோ?
மறுக்கிறான்! ஆனால் நான் கைது செய்த ஆசாமிகள் எல்லோரும் பில் கால்ட்டரின் ஆட்கள். பில் கால்ட்டர் பார்லோவின் கையாள்!
புரிகிறது!


ப்ளாயிடை நான் எங்கே சந்திக்க முடியும்?
அடிபட்டதால் ஒய்ந்து போய் படுத் துக் கிடக்கிறார்! வா-நான் அழைத் துப் போகிறேன் அவரிடம்.
நன்றி! ப்ளாயிட் ஒத்தாசையாக இருப்பார் என்று நம்புகிறேன்!
டுமீல்
ஆவ்!
!
யாரவன்?
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல்
அஹ்!
டுமீல்
வீழ்த்திவிட்டாயா அவனை ? அவன் நாசமாகப் போக!


நீங்கள் அங்கேயே இருங்கள்-நான் போய் பயலுக்கு உயிர் இருக்கிறதா என்று பார்க்கிறேன்!
தோளில் காயம்-அவ்வளவு தான்! பயல் யாரென்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை கட்டுப்படுத்த முடியவில்லை-நானும் வருகிறேன்!
துப்பாக்கி முழக்கம் கேட்டு உதவியாளர்கள் சிலரும் ஓடிவந்தனர்-
முதலில் நெருங்கி சென்று பார்த்த உதவியாளர் உதட்டைப் பிதுக்கினார்-
பில் கால்ட்டர்!
பார்லோவின் கையாள்?
ஆமாம். எனக்கு ஒரு கேள்விக்கு பதில் தெரிய வேண்டும்!
நம்மில் யாரைக் கொல்வது கால்ட்டரின் நோக்கம்?
ம்ம்-
நம் இருவரையும்தான்! இல்லாவிடில நாம் வெளியேறிய கணத்திலேயே துப்பாக்கியை முழக்கியிருக்க மாட்டான்!
ஆமாம்! நீ சொல்வது சரிதான்!
வாருங்கள் ஷெரீப்-டாக்டரிடம் போவோம்!
கால்ட்டரின் உடலை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்!
நீங்கள் போங்கள்-நான் கவனித்துக்கொள்கிறேன்.


தற்கொலைப் படை!
டாக்டரின் வீட்டை நோக்கி அவர்கள் நடக்கலாயினர்-
கால்ட்டரின் இடத்தில் பார்லோ இல்லாமல் போனானே என்ற வருத்தம் தான் எனக்கு.
பார்லோ மாதிரி ஆட்கள் வெளிப் படையாக எதையும் செய்து மாட்டிக்கொள்ள மாட்டார்கள்.
உண்மை தான்!
பின்னணியில் இருந்துகொண்டு தூண்டிவிடுகிறவன் அவன்தான் என்று தெளிவாக தெரிந்த போதிலும் அவன் மீது நம்மால் கைவைக்க வகை கிடையாது!
வேறு உபாயம் இருக்கிறது- ஷெரீப்!
உங்களைப் போல் என் கைகள் கட்டப் பட்டிருக்கவில்லை ஷெரீப்-! இவ்வுண் மையை அவன் விரைவிலேயே புரிந்து கொள்வான்!
வேண்டாம்- அப்படி எதையும் செய்து விடாதே!
ஏற்கனவே ஏகப்பட்ட பிரச்னை உனக்கு, அந்த ஈனப் பிறவியைக்கொன்று மேலும் சிக்கலை வரவழைத்துக் கொள்வது உனக்கு நல்லதில்லை!
கொல்வதா? ஊஹூம்...நான் அப்படித் தீர்மானிக்கவில்லை!
அவனைப் போன்ற அயோக்கியர்கள் அவ்வளவு சுலபமாக செத்துப் போய்விடக் கூடாது!
டக் டக்
டாக்டர் கதவைத் திறந்தார்...
இன்னும் வேறென்ன நடந்தது? இப்போதுதான் ப்ளாயிடுக்கு கட்டுப் போட்டு முடித்தேன்!
ப்ளாயிட் எப்படி இருக்கிறான்?



தோளில் பலத்த காயம்-விலா எலும்புகள இரண்டில் சிறு கீரல் போன்ற முறிவு- கவலைப்படும்படியாக எதுவுமில்லை... இரண்டு வாரங்களுக்கு கட்டுப்போட்டுக் கொண்டால் சரியாகி விடும்.
ம்ம்
ஷெரீப்-! நீங்களா?
பார்லோவின் வெறுப்புக்கு ஆளானது நீ மட்டுமில்லை ப்ளாயிட்!
நீ சந்திக்க விரும்பிய பத்திரிக்கை ஆசிரியர் இதோ-
?
ஹலோ-! நான்- டெக்ஸ் வில்லர்!
ஹோப், பார்லோ இருவர் மீதும் குற்றச்சாட்டு தாக்கல் செய்யும் நோக்கத்தோடு வந்திருக்கிறீர்களா!
இல்லை! அவர்களைப் பற்றி மேற் கொண்டு பேசுமுன் சில முக்கிய விபரங்களை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்!
?
கோட்டையில் போய் கர்னலை சந்தித்ததுபற்றியும், பின்னர் தன்னை துரத்தி வந்த படைப் பிரிவை அதிரடியாக தாக்கியது பற்றியும் விவரித்தார் டெக்ஸ்-
சட்ட, ஒழுங்கு பற்றி வாய் வார்த்தையாக பேசிக்கொண் டிருப்பதில் அர்த்தமில்லை என்பது இப்போது புரிகிறதல்லவா?
அடக் கடவுளே! அப்படியானால் யுத்தம் வரப்போகிறதா?
ஆமாம்! இப்பகுதியை ஒழுங்காக, நேர் மையாக ஆளத் தவறிய மேலிடத்தார் தான் விளைவுக்கு பொறுப் பேற்க வேண்டியவர்கள்!
நினைத்துப் பார்க்கவே முடியவில்லை!
ஹோப்பும், பார்லோவும் விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டால் இரத்த ஆறு ஓடுவதை தவிர்த்து விடலாம்!
ஆமாம்! இல்லையேல் அநியாயமாக அப்பாவிகள் பலர் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாவார்கள்!



ப்ளாயிட்-நீ ஒரு நேர்மையான பத்திரிக்கையாளன்-நான் ஒன்று கேட்பேன்-ஒத்துக் கொள்வாயா?
?
செவ்விந்திய குடியிருப்பு பகுதிக்கு என்னோடு வா. அங்கே நீ காண்பதை தொடர் அறிக்கையாக எழுது!
ஹூய்ய்!
போர்க்கால ரிப்போர்டர் போலவா?
அப்படித்தான்!
இந்த விவகாரம் இப்படியே நெடுங்காலம் நீடிக்காது என்பது என் கணிப்பு. வாஷிங்டன் விரைவிலேயே ஒரு விசாரணை கமிஷனை ஏற்பாடு செய்யும். ஒரு தன்னிச்சையான சாட்சி என் பக்கம் இருந்தால்-
புரிகிறது!
உனக்குப் பணிபுரியத் தயார் வில்லர்!
பணி புரியப் போவது எனக்கல்ல- சத்தியத்திற்கு!
இதற்கிடையே- வின்கேட் கோட்டையில், டெபியன்ஸ் கோட்டையை நோக்கிப் பயணமாக ஒரு குதிரைப் படை தயாராகிக் கொண்டிருந்தது.
சீக்கிரம்... சீக்கிரம்- ஏய்- விலகு!
ஏறுங்கள்-இன்னும் என்ன தாமதம்?
குட்லக் காப்டன்! முடிந்த வரை தாமதமின்றி உங்களுடைய அறிக்கையை அனுப்பி வையுங்கள்!
ஓ. கே... ஸார்!
ஸ்கவுட் பிரிவு முன்னால் விரையட்டும்! மற்றவர்கள் இரண்டிரண்டு பேராக வரிசையில் வரவும்!


ம்ம்-புறப்படுங்கள்!
இப்படிச் சொல்வதால் கோழை என்று என்னை எண்ணிவிடாதீர்கள் ஸார்-! நவஹோக்கள் போரிட தீர்மானித்து விட்டால் நம் பாடு திண்டாட்டமாகி விடும்!
நீ சொல்லாமலே தெரியும் எனக்கு!
நமக்கு பெரும் தலைவலி அந்த டெக்ஸ் வில்லர்தான். நவஹோக்களின் தலைவர் என்பதால் மட்டுமல்ல-பொதுவாகவே அவர் ஒரு ஆபத்தான மனிதர்!
வில்லர் ஒரு ரேஞ்சர் இல்லையா?
ரேஞ்சர்தான்!
கிட் கார்ஸனை விட பிரபல மானவர்!
அப்படியிருக்க இந்த வம்பில் அவர் எப்படி நுழைந்தார்?
அதுவா-?
கர்னல் ஸ்டீவார்ட்டை உயிரோடு பார்க்க முடிந்தால் அவரிடமிருந்து விளக்கம் கிடைக்கலாம்!
ஹம்ம்!
அங்கங்கே நின்று சற்று இளைப்பாறியதை தவிர அந்த படைப்பிரிவு இரவெல்லாம் பயணத்தை தொடர்ந்தது, முடிவில்-விடிகாலை பொழுதில்-
செவ்விந்திய தாக்குதலுக்கான அறிகுறி எதுவுமே கண்ணில் படக்காணோம்!


வின்கேட்டிலிருந்த தந்தி குமாஸ்தா ஒருவேளை செய்தியை பிழையாக வாங்கியிருக்கலாம்!
நோ.
அம்மாதிரி தவறு செய்யும் கற்றுக்குட்டி அல்ல அந்த குமாஸ்தா.
செவ்விந்தியர்களை வில்லர் ஒருவேளை தேக்கி நிறுத்தியிருக்கக் கூடும்!
ம்ம்.
பத்து நிமிடநிகளுக்குப் பின் அந்த படைப்பிரிவு டெபியன்ஸ் கோட்டையினுள் பிரவேசித்தது-
நேராக கர்னலை சென்று சந்தித்தார் காப்டன் நார்போக்-
வணக்கம்... கர்னல்!
வாருங்கள் காப்டன்!
உண்மையை சொல்வதானால், உங்களுடைய செய்தியைப் படித்ததும் நீங்கள் பயங்கர ஆபத்தில் இருப்பதாக எண்ணிவிட்டோம்!
என் செய்தி உங்களுக்கு கிடைத்ததா?
ஒரு பகுதிதான் கிடைத்தது. அதில் கடைசி வரிகள் நவஹோ தாக்குதல் பற்றி இருந்தது.
அந்த அற்ப பதர்கள் கோட்டையை தாக்குவதாக முடிவு கட்டி விட்டீர்களாக்கும்!
வயர்கள் திடீரென்று துண்டிக்கப்பட்ட பின் வேறெப்படி யூகிக்க முடியும்?
வாஸ்தவம் தான்!
ஆனால் அதிர்ஷ்டவசமாக நிலைமை அவ்வளவு தூரம் மோசமடைந்து விடவில்லை. இருந்தாலும், அந்தச் செங்குரங்குகளினால் பெருந் தொல்லை வரத்தான் போகிறது!
நடப்பு என்ன என்று எனக்கு சொல்லுங்களேன்!


செவ்விந்திய இளைஞர்கள் சுடப்பட்டது முதல் அந்த நிமிடம் வரை நடந்தசம்பவங்களை விரிவாக எடுத்துரைத்தார் கர்னல்·
அந்த ஆணவக்காரனுக்கு ஒரு பாடம் புகட்டியாக வேண்டும்!
எப்படி என்பதுதான் கேள்வி·
போரை தவிர்க்க, நவஹோக்கள் விரும்பிய வழியில் கவர்னர் மனம் மாறிச்சென்றுவிடமாட்டார் என்று உறுதியாக நம்புகிறீர்களா?
என்ன சொல்கிறாய் நீ!
ஹோப்பையும், பார்லோவையும் அவர் விசாரணைக்கு உட்படுத்தினால், வரவிருக்கும் தேர்தலில் ஒரு வோட்டுக்கூட விழாது அவருக்கு.
கவர்னரின் நிலைமை எனக்குப் புரியாமலில்லை. ஆனாலும் நாம் ஒரு முழு அளவிலான யுத்தத்தில் ஈடுபட வேண்டிய நெருக்கடி ஏற்படத்தான் போகிறது!
ஆமாம்· அதனால்தான் அவ்வாறு செய்தியனுப்பினேன்...
நவஹோக்களின் பிரதேசம் இங்கே சின்லேபள்ளத்தாக்குக்கும் டி-என்-டா மெஸாவுக்குமிடையே உள்ளது·
TE-EN-TA MESA
CREEK
ACENDE
CARRIZO MOUNTS
CHINLE VALLEY
MARSH PASS
ZIN-LI-JINI MESA
KISH CANYON
CANYON DE CHELLY
நாம் பல முனை தாக்குதல் நடத்தினால், அவர்கள் தம் வாழ்நாளில் மறக்க முடியாத வகையில் ஒரு பாடம் புகட்ட முடியும்!
ம்ம்· அப்படியொரு நடவடிக்கையில் இறங்க எனக்கு என் மேலதிகாரி கர்னலின் அங்கீகாரம் அவசியப்படும்!
இந்த நெருக்கடி நிலைமையில் என் உத்தரவு போதுமானது!
தெரியும்! என்றாலும், வின்கேட் கோட்டைக்கு ஒரு ஆளை அனுப்பி வைக்க வேண்டியதுஅத்யாவசியம்!
எப்படியிருந்தாலும், இங்கே நிலவரம் என்ன என்று உடனடியாக அறிந்து கொள்ள கார்னல் பெல்டன் விரும்புகிறார்.
நல்லது! ஒரு ஆளை அனுப்பு! நிலைமை வேகமாக சீர்கெட்டு வருவதால், அவன் கணமும் தாமதியாமல் இங்கே திரும்பி வர வேண்டியது அவசியம்!



சற்று நேரம் கழித்து-
ஒரு இராணுவ வீரன்-
வா... கீழே விரைவோம்!
நார்போக் அனுப்பி வைத்த தூதுவன் அப்படியொரு இடையூறை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!
ஆவ்...வ்!
இரண்டு மணி நேரம் கழித்து கிரேட் ஸ்டாக்கின் கிராமத்தில்-
!
சுவாரஸ்யமான தகவல்-
கர்னலிடம் வேறு ஏதாவது தெரிவிப்பதாக இருந்தாயா? சொல்!
இல்லை ஸார்... அந்த கடிதம் மட்டும்தான்!
அப்படியானால் உன் பயணம் இங்கேயே முடிவடைகிறது நண்பரே!
?
சுமார் மூன்று மணி நேரம் கழித்து டெபியன்ஸ் கோட்டையில்-
ஹே அது கீனின் குதிரை அல்லவா?
பிடித்து நிறுத்து-அதை!
சேணத்தில் ஒரு குறிப்பு செருகப் பட்டிருக்கிறது பார்-
காப்டனை கூப்பிடு!
சில நிமிடங்களுக்குப் பின் கர்னல் ஸ்டீவர்டின் அலுவல் அறையில்-
சே-அவமானம்-பெருத்த அவமானம்!
அவர்களை அதிரடியாக நாம் தாக்குவது என்பதும் கனவாகி விட்டது!


இப்படி நம்மை கேவலப்படுத்திய திமிருக்கு உரிய விலையை அவர்கள் விரைவிலேயே கொடுக்கவேண்டி யிருக்கும்!
நவஹோ பிராந்தியத்தினுள் காலடி வைக்கும் எண்ணத்தை விட்டொழித்து மரியாதையாக கோட்டைக்குள்ளேயே முடங்கிக் கிடப்பது தான் உங்களுக்கு நல்லது. இல்லையேல், வின்கேட் கோட்டைக்கு நீங்கள் அனுப்பிவைத்த தூதனுக்குக் கிடைத்த மரியாதைதான் உங்களுக்கு!
T.W.
-டெக்ஸ் வில்லர்.
இனியும் நேரத்தை வீணடிப்பது தவறு என்று இப்போதாவது புரிகிறதா?
ஆம்! அதிரடித் தாக்குதல் என்பது அர்த்த மற்றுப் போனாலும், உடனடியாக நாம் செயலில் இறங்க வேண்டியது அவசியமாகி விட்டது!
ம்ம்... எழுந்திரு போவோம்!
ஆண்டவன் நமக்கு அருள் புரிவாராக!
ஒரு மணி நேரம் கழித்து, மிகச் சிலரை மட்டும் கோட்டையில் நிறுத்திவிட்டு, இரு குதிரைப்படைகளுக்கு தலைமை தாங்கி, நவஹோ பிராந்தியத்தை நோக்கி விரைய லானார், கர்னல் ஸ்டீவார்ட்!
FORT DEFIANCE
அதே சமயம்.
நான் சொன்னேனில்லையா ப்ளாயீட்? நான் அனுப்பிய எச்சரிக்கைக் குறிப்பு, எருது வாலில் கட்டிய சிவப்பு துணி போல் அவர்களை வெறிகொள்ளச் செய்து விட்டது.
கூடவே வாகன்களும் வருவது ஏன்?
உணவும், யுத்த தளவாடங்களும் ஏற்றி வருகின்றன! கர்னல் ஸ்டீவார்ட் பழங்காலத்து ஆசாமி. தனிப்பாணியில் எதையும் செய்யக் கூடியவர்!
நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?
இப்போதைக்கு எதுவுமில்லை! ஆனால், இருட்டத் தொடங்கியதும் கர்னல் பலத்த அதிர்ச்சிக்குள்ளாகப் போகிறார்.
?
நவஹோக்களோடு மோதுவது என்பது பேய், பிசாசுகளோடு மோதுவதற்கு ஒப்பாகும் என்ற உண்மையை உணரப் போகிறார்!


புல் வெளியில் பயங்கரம்!
தங்களுடைய நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதை அறியாத அந்தப் படை டெபியன்ஸ் கோட்டையை விட்டு விலகி வெகு தொலைவு வந்துவிட்டது-
அவர்களோடு போகாததைப் பற்றி உங்களுக்கு வருத்தமா காப்டன்?
ஆம் சார்ஜண்ட்!
எனக்கு நவஹோக்களைப் பற்றியும், டெக்ஸ் வில்லரின் செல்வாக்கு பற்றியும் நன்றாகத் தெரியும். கானலின் படை எக்கச் சக்கமாக வாங்கிக் கட்டிக் கொள்ளப்போகிறது!
ஆனாலும் உங்களுக்கு இவ்வளவு அவநம்பிக்கை கூடாது காப்டன!
நவஹோக்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்துவிட்டாலும், நம் படையினர் வசம் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் இருப்பதால் முடிவில் அவர்கள் பின்னடையத் தானே வேண்டும்?
ம்ம்...பார்ப்போம்!
இறுதி வெற்றி நமக்குத்தான் என்று வைத்துக் கொண்டாலும் நவஹோக்கள் கடுமையாகத் தான் போர்புரிவார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்கத் தவறிய கவர்னர் எடுத்த முடிவு, ஆற்றல் மிக்க இளைஞர்கள் பலரை அநியாயமாக் பலிகொள்ளப் போகிறது!
சில மணி நேரம் கழித்து-
நன்றாக மாட்டிக் கொண்டுவிட்டதா?



ஒரு சிறுத்தையின் லாவகத்தோடு, கோட்டையின் சுற்றுச் சுவர் மீது வேகமாக ஏறினார் டெக்ஸ்-
கண் எட்டிய மட்டும் யாரையும் காணோம்!
இருட்டின் துணையோடு பதுங்கிப் பதுங்கி முன்னேறினார்-
உன் இனிய கனவுகளை கலைக்க எனக்கு இஷ்டமில்லைதான்- ஆனால்-வேறு வழியில்லை!
ஏய்...எழுந்திரு!
யே...நீ-யா யார் நீ?
?
அசையாதே-! கத்தாதே-! உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன்!
இதற்கிடையே-
பத்து நவஹோக்கள் மதில் மீது ஏறி எதிர்ப்பட்ட காவலாளிகளை அதிரடியாக தாக்கி வீழ்த்தினர்-
ணங்!
சில நிமிடங்களுக்குப் பின்-
ப்ளாயிட்- இங்கே வா!


காவலாளிகள்?
அவர்களை கவனித்தாயிற்று!
அடித்துப் போட்டு விட்டீர்களா என்ன?
இல்லை-நகர முடியாதபடி முடக்கிப் போட்டிருக்கிறோம்-மற்றபடி நல்ல ஆரோக்கிய மாகத்தான் இருக்கிறார்கள்.
சுமார் பதினைந்து காவலாளிகளையும் கண் சிமிட்டும் நேரத்தில் கட்டிப் போட்டுவிட்ட பின்னா ஆபீஸர் களின் குடியிருப்பு பக்கமாக விரைந் தார் டெக்ஸ்-
இடப் பக்ககம் இரண்டாவது கதவு என்று அந்த சார்ஜண்ட் சொன்னான்-
இதோ- இதுதான்!
ஹலோ-நான் உள்ளே வரலாமா?
க்ராஷ்
ஏய்-என்ன இது?
அடாவடித்தனமாக உன்னை எழுப்பி விட்டேன் என்று நினைக்கிறேன்-ஸாரி-காப்டன்! ஆனால் வேறு வழியில்லாமல் போய்விட்டது எனக்கு
வில்லர்!
ஆமாம்- காப்டன்!
சென்ற ஆண்டு சுமுகமான தொரு சூழலில் நாம் சந்தித்துக் கொண் டோம்-ஆனால் நிலவரம் இப்போது தலைகீழாக மாறிவிட்டது.
நிறுத்து!
எப்படி கோட்டையினுள் புகுந்தாயோ-தெரியவில்லை வில்லர்! ஆனால் சுலபத்தில் நீ வெளியேறிவிட முடியாது! துப்பாக் கியை நீ நீட்டினாலும் நான் அபாய எச்சரிக்கை ஒலியை எழுப்பத் தான் போகிறேன்-
செய்யேன்!


ஆனல் வீணுக கத்தி நீ உன தொண்டையை புண்ணுக்கிக் கொள்ளுமுன,
இந்த கோட்டையினுள் இருக்கும் எந்த ஒரு நபரும் விரலைக்கூட அசைக்கும் நிலையில் இல்லை என்று உனக்கு தெரிவிக்க விரும்புகிறேன்!
நம்ப மாட்டேன!
வேண்டாம்! எழுந்து வா என்னேடு!- உன் ஆட்களின் கதியையும், நவஹோக்களின் ஆதிக்கத்தையும் காட்டுகிறேன்!
சண்டாளன்!
என்னை என்ன செய்யப் போகிருய்?
நவஹோக்களின் இடத்திற்கு பத்திரமாக கொண்டு போகிறேன.
அங்கே நல்ல முறையில் நடத்தப் படுவீர்கள் என்று உறுதி கூறுகிறேன். உனக்குத் தெரிந்த சில கனவான்களைப் போல் நிராயுதபாணிகளை சுட்டு வீழ்த்தும் நீசர்கள் அல்ல என் நவஹோக்கள்!
ஒரு மணி நேரம் கழித்து, தீப்பிழம்புகள் வானேக்கி எழும்பிய வேளையில் நவஹோக்கள் தாங்கள் வசப்படுத்திய கைதிகளோடு கோட்டையை விட்டு விலகி விரைந்தனர்-
சுற்று வேலியையும் விட்டு வைக்கா தீர்கள்!
ஓ!
இதற்கெல்லாம் நீ பதில் சொல்ல வேண்டியிருக்கும் வில்லர்-
இருக்கலாம்!
நவஹோக்களுக்கு நியாயம் வழங்கத் தவறினல் என்ன விபரீதங்கள் எல்லாம் காத்திருக்கின்றன என்று இப்போதாவது கவர்னர் புரிந்து கொண்டால் சரி-!


மறுநாள்-சின்லே பள்ளத்தாக்கிற்கு மூன்று மைல் தொலைவில்...
நில்லுங்கள்!
ஒற்றர் குழுவின் அறிக்கை வந்த பிறகு பயணத்தை தொடருவோம்.
நல்லது ஸார்!
இரண்டு மணி நேரம் இங்கே ஓய்வெடுத்துக் கொள்ளலாம் காப்டன்-வீரர்கள் களைத்துப் போயிருக்கின்றனர்-
குதிரைகளும் தான்-ஸார்!
பத்து நிமிடங்களுக்கு பின்-
ஒற்றர் குழு வருகிறது ஸார்!
செவ்விந்தியன் எவனாவது தென்பட்டானா!
பார்வை எட்டிய மட்டும் தென்படவில்லை!
சார்ஜண்ட் ப்ராடி ரிப்போர்ட்டிங் ஸார்!
சொல்!
செவ்விந்தியர்கள் போன தடங்கள் ஏராளமாக தென்படுகின்றன ஸார்- ஆனால் யாருமே தென்படவில்லை,
ஹூம்ம்!
நான் என்ன நினைக்கிறேன் என்று சொல்லட்டுமா ஸார்?
சொல்...!
வடக்கே உள்ள மேட்டு சமவெளியை நோக்கி அவர்கள் அவசரமாக பின் வாங்கிச் சென்றிருக்கக் கூடும்!
சாதகமான சங்கதி!


ஆனால், மலைப் பிராந்தியத்தினுள் ஓடிப் போவதன் மூலம் நம்மிடமிருந்து தப்பித் துக் கொள்ளலாம் என்று அவர்கள் நினைத்தால் சீக்கிரமே தங்களுடைய தப்பை உணர நேரிடும் தாங்க் யூ சார்ஜண்ட்!
தாங்க் யூ ஸார்!
ஆனால் அதே சமயம் அந்தப் படைப் பிரிவின் பின்னால்-
காற்று சாதகமாக வீசிக் கொண்டிருக்கிறது!
சரி-வேலையை ஆரம்பிப்போம்!
அவர்களைச் சுற்றி அரை வட்டமாக நாம் பரவிய பின் புல்லை பற்ற வைக்க வேண்டும்.
ஓ...,
ஓ...
பத்து நிமிடங்களுக்குப் பின்-
நாசமாகப் போயிற்று-பார் அங்கே!
புல் வெளி பற்றி எரிகிறது- ஐயோ!
ஜாக்கிரதை-பின்னாலும் தீ பரவுகிறது!
செவ்விந்திய நாய்களின் விஷமமாகத்தானிருக்கும்!
தீ நம்மை சுற்றி வளைக்கிறது!
குதிரையிலேறி விரைவோம்-வாருங்கள்!
தட்டி எழுப்புங்கள் குதிரைகளை..
கஷ்ட காலம்!
நன்றாக பரவிவிட்டது!
ஏறுங்கள் குதிரைகளில்! கிரேட் ஸ்டாக்கின் கிராமத்தை நோக்கி நாம் விரைய வேண்டும்!


ஹை-எழுந்திரு!
ம்ம்-கிளம்புங்கள் சீக்கிரம்!
வாகனங்களை நாம் இழுத்துக் கொண்டு போக முற்பட்டால் தீ நம்மை விரட்டிப் பிடித்து விடக் கூடும்!
காற்று சாதகமாக வீசியதால் தீ வேகமாக பரவியது-
உயிர் பிழைத்தால் போதும் என்று தலை தெறிக்க ஓடியது கர்னலின் படை-
ஓடு- சீக்கிரம்
இன்னும் வேகமாகப் போ-!
ஊஹூம் முடியும் என்று தோன்றவில்லை!
பில்-! தீ நெருங்கி வரும் வேகத்திற்கு களைத்துப் போயிருக்கும் குதிரைகளால் ஈடு கொடுக்க முடியவில்லை!
யூயூ...!
உயிர் பிழைக்க வேண்டுமானால் வாகனை அங்கேயே கழற்றி விட்டால் தான் உண்டு என்ற உண்மை தெளிவாகப் புரிந்தது
குதிரைகளை அவிழ்த்து விடு-!
ஆண்டவன் துணை புரிவாராக!
வாகனை அங்கேயே நிறுத்தி விட்டு குதிரைகளின் மீது ஏறி தப்பியோடினர்-
யா...ஹூய்ய்!



பிற வாகனங்களும் இதே மாதிரியான நெருக்கடியில் கைவிடப்பட்டன...
சற்றைக்கெல்லாம் முதல் வாகன் தீக்கு இரையாகத் தொடங்கியது-
அடுத்து சில விநாடிகளில் உள்ளே இருந்த வெடி மருந்து தீப்பற்றிக் கொள்ளவே வாகன் வெடித்துச் சிதறியது-
டமார்
ஒரு வாகன் வெடித்து விட்டது!
வாகன்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டும் நாம் உயிர் பிழைக்கும் வழியைப் பார்ப்போம்!
அடுத்தடுத்து மேலும் இரு வெடி முழக்கங்கள் அந்தப் பிராந்தியத்தில் எதிரொலித்தது-
டமார்
டமார்
அதிர்ஷ்டவசமாக சின்லே கணவாய் அருகிலேயே இருந்துவிட்டதால கர்னல் ஸ்டீவர்ட்டின் படை அதனுள்ளே நுழைந்து எவ்வித உயிர் சேதமும் இன்றி தப்பித்துக் கொண்டு விட்டது-
இறங்குங்கள்! பாறைகளின் பின்னால் மறைவாக ஒதுங்குங்கள்! நவஹோக்கள் அதிரடியாக தாக்கும் அபாயம் உண்டு!
ஆமாம்!
நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!



பிசாசு யுத்தம்
தாக்குதல் எந்த விஞடியிலும் நிகழக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் அங்கே பதட்டம் நிலவியது
நமக்கு நேர் மேலே எச்சரிக்கையோடு கவனித்துக் கொண்டிரு!
யாராவது தென்பட்டால் தயங்காமல் சுட்டுத் தள்ளு!
தீப்பற்றி எரியும் ஓசை தவிர அங்கே வேறு எந்தச் சப்தமும் இல்லை·
கால் மணி நேரம் கழித்து, புகை மூட்டம் விலகியதும்·
யாரும் நம்மை தாக்குவார்கள் என்று தோன்றவில்லை-கர்னல்! நம் வாகனங்களை தீக்கிரையாக்கியதோடு திருப்தி யடைந்து விட்டார்கள் போலிருக்கிறது!
ம்ம்!
நம்மைப் பார்த்து நவஹோக்கள் பீதியடைந்து விட்டது உறுதி!
அப்படித்தான் தோன்றுகிறது!
சந்தேகமேயில்லை· காப்டன்!
நம்மீது தாக்குதல் நடத்தாததற்கு வேறு என்ன காரணம் இருகக முடியும்!
இன்னும் ஆழமாக அவர்கள் பகுதிக்குள் நாம் ஊடுருவி வந்த பின் தாக்கலாம் என்று காத்திருக்கலாம்!
நோ! இந்த கணவாய் பகுதியை கடந்து விட்டால் பிறகு திறந்த சமவெளி பிரதேசம்தான்-குதிரைப் படைக்கு ஏற்ற சுற்றுச் சூழல் அது-நம் கைதான ஓங்கி நிற்கும்!
வாஸ்தவம்தான் ஸார்!
ஆனல் இன்னமும் நாம் கணவாய் பகுதியினுள்ளேதான் இருக்கிறோம் என்பதை மறந்து விட்டீர்கள் ஸார்!
சீக்கிரம் வெளியேறப் போகிறோம்!



ஏறுங்கள் குதிரைகளில்-ஒற்றர்படை முன்னால் செல்லட்டும்!
ஜாக்கிரதை! எந்த ஒரு பாறைக்குப் பின்னாலும் எதிரி பதுங்கிக் கிடக்கக் கூடும்!
ஆனால் நவஹோக்கள் கணவாயின் மேல் பகுதி வழியே சென்று கொண்டிருந்தனர்-
இரண்டு மணி நேரம் கழித்து-
வந்துவிட்டீர்களா-? எனக்கு கவலையாகி விட்டது!
எதற்காக?
கர்னலின் அலட்சியப் போக்கை என்னவென்பது! முன்னால் மூன்று ஒற்றர்களை அனுப்பி வைத்தாரே தவிர பின்னால் எந்த பாதுகாப்பு ஏற்பாடும் செய்து கொள்ளவில்லை!
குட்!
இவர்-மார்ட்டின் ப்ளாயிட்! நம்முடைய யுத்த நிருபராக இருப்பார்!
ஹாய்ய் !
நல்வரவு மிஸ்டர் ப்ளாயிட்
அங்கே நடந்ததை விபரமாகச் சொல்!
சொல்கிறேன்!
படை வீரர்களிடம் தாங்கள் செய்த சூழ்ச்சியை விளக்கமாகக் கூறினான் கிட்-
அருமை! கையோடு எடுத்து வரும் வெடி மருந்து மட்டும் தான் அவர்கள் வசம் இப்போது-இல்லையா?
அங்கே கோட்டையில் நீங்கள் என்ன சாதித்தீர்கள்?


அங்கே இப்போது கோட்டை என்று எதுவுமே இல்லை கிட்-! சாம்பல் மேடுதான் மிச்சம்!
கேட்கவே கொடூரமாக இருக்கிறது!
நீ நினைக்கிற மாதிரி இல்லை-! உயிர் சேதமின்றி செய்து முடித்தோம்!
கோட்டை காவலாளிகளை மூன் பள்ளத்தாக்கிற்கு துணையோடு அனுப்பி வைத்திருக்கிறோம்!
நல்ல ஏற்பாடு!
இரத்தம் சிந்துவதை தவிர்ப்பது நல்லது என்று கருதுகிறேன் டாடி!
ஒத்துக் கொள்கிறேன்!
இவ்வளவு நடந்த பின்னும் நம்மைப் பற்றி இன்னமும் தெரிந்து கொள்ளாத ஒரு முக்கிய பிரமுகர் உண்டு-ஸாம் ஹோப்பை குறிப்பிடுகிறேன்!
அவனுக்கு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறீர்களா?
ஆம்! எல்லாமே திட்டப்படி நடந்தால், மூன் பள்ளத்தாக்கில் நெரிசல் அதிகமாகிவிடும். போதுமான உணவுப் பொருட்களை அங்கே அனுப்பி வைப்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்!
புரிகிறது!
ஹோப்பின் கால்நடைகளை இறைச்சியாக அனுப்ப வேண்டும்-இல்லையா?
ஆமாம்! இந்த கிராமத்தை அழித்துவிட்டு நீங்கள் டீ-என்-டா மெஸாவில் இருப்பவர்களோடுசேர்ந்து கொள்ள கிளம்புங்கள்! நான் போய் ஸாம் ஹோப்பை சந்திக்க எண்ணியுள்ளேன்.
இல்லை! பத்து வீரர்களை உடனழைத்துச் செல்லப்போகிறேன்!
தனியாகவா?
இங்குள்ள அனைத்தையுமே எரித்து விடுங்கள்-வருகிற படைவீரர்கள் வறண்ட காடாக இப்பகுதியை காண வேண்டும்!
அவர்களுடைய குதிரைகளுக்கு ஒரு புல்கூட மிஞ்சாது!


இதற்கிடையே சின்லே கணவாயின் வெளிப் புறத்தில்-
செவ்விந்தியன் எவனையுமே காணோம்!
இப்போது தான் கொஞ்சம் நிம்மதியாக மூச்சு வருகிறது எனக்கு!
எனக்கு உதறல் எடுக்குது!
எதற்காக? அவர்கள் தாக்க வில்லை என்றால் பயந்து ஓடிப் போய் விட்டார்கள் என்று அர்த்தம்!
ஹே-சார்ஜண்ட்! அங்கே பார்-புகை சமிக்ஞை!
!
?
இல்லை-அது புகை சமிக்ஞை அல்ல-அந்த புகை மண்டலம் கிரேட் ஸ்டாக்கின் கிராமத்திலிருந்து எழுகிறது-எதற்காகவோ பெரிய அளவில் தீ மூட்டியிருக்கிறார்கள்!
?
இங்கேயே இருங்கள்-நான் போய் கர்னலிடம் உத்தரவு பெற்று வருகிறேன்-
குதிரைகள் தாக்குப் பிடிக்குமேயானால் நெருங்கிச் சென்று நோட்டமிடலாம்!
அதையடுத்து-
அதை சமிக்ஞை அல்ல என்பது நிச்சயம்தானே?
சந்தேகமே வேண்டாம்-ஸார்!
ஹ்ம்ம்-இந்தப் பிராந்தியம் உனக்கு அத்துப்படிதானே சார்ஜண்ட்?
யெஸ்... ஸார்!
அப்படியானால் சொல் இங்கே அருகில் செவ்விந்தியர்கள் திரளாக பதுங்கிக்கிடந்து அதிரடியாக நம்மைத் தாக்க ஏதாவது மறைவிடம் இருக்கிறதா?
இல்லை ஸார்! இது எவ்வித மறைவும் இல்லாத திறந்த வெளி!


குட்! எதற்கும் ஸ்கவுட் குழு ஒன்று முன்னல் செல்லட்டும்!
சரி-ஸார்!
காப்டன் நார்போக்! உன்னுடைய படைப் பிரிவை அந்த மேட்டுக்கு கிழக்காக கொண்டு சென்று, ஒற்றை வரிசையில் பரவலாக்கி நகர்த்து-நான் அதே போல் மேல் திசை வழியாக வருகிறேன். நாம் இணையும் போது அந்த வட்டத்திற்குள் சிக்கிக்கொள்ளும் செவ்விந்திய பன்றிகளில் எவனுமே தப்ப முடியாது!
இதற்கிடையே-
ஆ..ஆ...
ஆ..ஆ...
எல்லாவற்றையும் எரியுங்கள்!
ஆக, மூன்று மணி நேரம் கழித்து இரு படைப் பிரிவுகளும் ஒன்றையொன்று சந்தித்தபோது-
சைத்தான்கள்-எல்லாவற்றையும் எரித்து விட்டுப் போயிருக்கிறார்கள்-
மார்பி, டொனேவன்-வாருங்கள் என்னோடு!
மூவரும் கிராமத்தை சென்றடைந்த போது சாம்பல் மேடுதான் கண்ணில்பட்டது-
கிராமம் தரைமட்டமாகிக் கிடக்கிறது!


வா-திரும்பிவிடலாம்! இந்த இடம் அச்சமூட்டுகிறது!
ஆமாம்...வா-போவோம்!
சற்றைக் கெல்லாம்-
ஏதாவது தென்பட்டதா?
கரியும், சாம்பலேயும் தவிர அங்கே வேற எதுவுமே இல்லே ஸார்!
அவர்களுடைய நோக்கம் புரியவில்லேயே!
பிடிபட்ட படை வீரர்களின் கதி என்னவாயிற்றோ?
ஆமாம்! அவர்கள் படுகொலே செய்யப்பட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லே!
நவஹோக்களின் தலேவர் டெக்ஸ் வில்லர் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள்-
அப்படியொரு ஈனத்தனமாக காரியத்தை அவர் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் என்று சாவ நிச்சயமாகச் சொல்வேன்!
அதெப்படி சொல்ல முடியும்?
தன் இனத்தாரை அந்நியர்களாக பாவிக்கும் துரோகி அவன்-எதையும் செய்யத் தயங்க மாட்டான்! ஆல்ரைட்-கிளம்புங்கள்-போவோம்!
அன்று அந்திப் பொழுதில் ஸாம் ஹோப்பின் பண்ணேயின் அருகே-
அதோ-ப்ளாக் ஸெர்ப்பண்ட் வருகிருன் ! விஷயம் என்னவென்று கேட்டறிந்து கொள்ளலாம்!
சொல்!
ஆறு வெள்ளேயர்களும் ஒரு மஞ்சள் நிற முகத்தையுடைய குள்ளனும்-


சைனாக்காரனா? சரி- நான் உன்னிடம்விவரித்தபடியே கருவியை ஒலிக்கச் செய்தானா?
ஓ!
ஆமாம்-நீங்கள் சொன்ன மாதிரியே ஒலிக்கச் செய்தான்!
டன்
டன்டன்
சரி. ஒருவர் மட்டும் இங்கிருந்து குதிரைகளை பார்த்துக் கொள்ளட்டும்- மற்றவர்கள் கிளம்புங்கள்-போவோம்
சைனாக்காரனின் சமிக்ஞைக்கு என்ன அர்த்தம்?
பண்ணையாட்களை இரவு உணவுக்கு வரச் சொல்லியிருக்கும் அழைப்பு அது!
இரவு உணவு வேளைதான் அதிரடியாக அவர்களைத் தாக்க அருமையான சந்தர்ப்பம்!
ஓ!
பதுங்கி முன்னேறுங்கள் - லாயத்தின் பக்கம் போகாதீர்கள்-குதிரைகள் கனைத்து நம் வரவை காட்டிக் கொடுத்து விடக்கூடும்!
ஓ...!
பூனைகளைப் போல் பதுங்கிப் பதுங்கி பண்ணை வீட்டை நெருங்கினார்கள்-
அக்கம் பக்கத்தில் பண்ணையாட்கள் வேறு யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டபின் சாப்பாட்டு அறையினுள் புயலென பிரவேசித்தனர்-
குட் ஈவ்னிங் தோழர்களே!
கல்லறைக்கு அவசரமாக போக விரும்பினாலன்றி துப்பாக்கியில் கை வைக்கத் துணியாதீர்கள்-
ஆ-வ்!
?
?
?



சைத்தான்களே என்னதான் வேண்டும் உங்களுக்கு?
பணம் என்றால் உங்களுக்கு அதிர்ஷ்டம் போதாது. இன்னமும் ஹோப் திரும்பி வந்து சேரவில்லை!
வாயை மூடுடா முட்டாள்!
சம்பளப் பணத்தை பாங்கிலிருந்து எடுத்து வர ஹோப் நகருக்கு போயிருக்கிறான் - இல்லையா?
ஆமாம் அதனால் என்ன?
அவரோடு ஆயுதமேந்திய நான்கு காவலாளிகள் போயிருக்கிறார்கள்! பணத்தை பிடுங்க நினைத்தால் உயிருக்கு உத்தரவாதம் இருக்காது!
நீ சொல்வது சரியாக இருக்கலாம் ஆனால் என் நோக்கம் அதுவல்ல இப்போதைக்கு!
நோ-டாய்! கே-வான்! அவர்களுக்குப் பின்னால் சென்று துப்பாக்கிகளை பறியுங்கள்!
ஓ!
சில நிமிடங்களுக்குப் பின், அந்த ஆட்கள் தங்களுடைய சொந்த பெட்டி படுக்கைகளை அள்ளி வந்து லாயத்தில் குவித்தனர்.
எங்களை என்ன செய்யப் போகிறாய்!
ஒன்றுமில்லை! ஹோப்பின் பண்ணையை தீக்கிரையாக்கி அவனை நொந்து போகச் செய்யப் போகிறோம்!
அதே வேளையில்-
களைப்பான பயணம்!
இன்னும் கொஞ்ச தூரம்தானே?


வில்லரைத் தேடி.....!
அதிர்ஷ்டவசமாக வில்லரின் ஆட்களில் ஒருவன் அவர்கள் வருவதை பார்த்து விட்டான்-
-ஹோப் வகையருவாகத் தானிருக்கும்!
ம்-சீக்கிரம்! எல்லோரும் லா றுள ஒளிந்து கொள்ளுங்கள்... உங்கலில் யாரா வது முனகினாலும் தொண்டையில் தோட்டா ஓட்டை போட்டு விடும் ஜ க்கிரதை!
அதே சமயம்-பண்ணை வீட்டினுள் இருந்த நவஹோக்கள் நரியின் ஊளையை ஒத்த ச ்தம் மும் றை ஒலிக்கக் கேட்டனர்.
ஊளஊளஊள...
ஊளஊளஊள...
ஊளஊளஊள...
ஆபத்துக்கான சமிக்ஞை!
யாரோ வருகிறார்கள்!
வெளியே வேண்டாம்-ஜன்னலருகே நிற்போம்-தீ இன்னமும் பரவவில்லை!
அங்கே-
பாஸ் பண்ணையில் தீ!
ஐயோ-
ம்ம்..சீக்கிரம்!



ஆனல் அவர்கள் குதிரையிலிருந்து கீழே குதித்த கணத்தில் அதிகாரக் குரல் ஒன்று எழுந்தது-
பிடியுங்கள்- அவர்களை!
கொள்ள முயற்
பார்த்தால் யும்- உங்களுடைய தலைகளை குறி வைத்துக் கொண்டிருப்பது எங்களுடைய துப்பா க்கிகள் மட்டுமல்ல என்று!
வகையாக வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிருய் நீ!
கனவு காணுதே!
உன் மென்னி என்ருவது ஒரு நாள் முறிக காமல் விடமாட்டேன்.
டெக்ஸ் வில்லர் மீது கை வைப்பது என்பது அப்பாவி இளைஞர்களை படுகொலைசெய்கிற மாதிரியான சங்கதி இல்லை அப்பனே!
இப்போது புரிகிறது- நீ ஒரு ஈனப்
அஹ்!
சதக்
இன்னெரு முறை சொல்- அவை தான் உன கடைசி வார்த்தைகளாக இருக்கும்!



அடுத்து என்ன நடக்குமோ என்ற எதிர் பார்ப்பில் சுற்றி யிருந்தோர் ஆடாமல், அசையாமல் மௌனமாக இறுகிப்போய் கிடந்தனர்-
அப்பாவிகளின் இரத்தக்கரை படிந்த கைகள் உன்னுடையவை-தண்டனை இல்லாமல் தப்பித்துக் கொண்டு விடலாம் என்று மனப்பால் குடிக்காதே.
அந்த இளைஞர்களுக்கு நீ இழைத்த கொடுமையை எண்ணி நீ கண்ணீர் வடிக்கப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை!
இதற்கிடையே, தீப்பிழம்புகள் பண்ணை வீட்டையும் அக்கம் பக்கத்து கட்டிடங்களையும் கபளீகரம் பண்ணிக் கொண்டிருந்தது-
விலகி ஓடுங்கள்!
பின் வாங்கிச் செல்ல உத்தரவிட்டார் டெக்ஸ்-
ஆல்ரைட்-! குதிரைகள் அனைத்தையும் கொண்டு போவோம்-கிளம்புங்கள்!
வருகிறோம் ஹோப்! உன் தோழன் பார்லோவை சந்திக்கும் போது விரைவிலேயே அவனுக்கும் இப்படி ஒரு வேடிக்கை நடக்கும் என்று சொல்!
யீயீ…ஈஈஈ!
யீயீ…ஈஈஈ!
குதிரைகளை காவல் காத்து நின்ற செவ்விந்தியனை சந்தித்து அவனையும் உடன் அழைத்துக் கொண்டு வடக்கு நோக்கி விரைந்தனர்-
வடக்கு எல்லையோரம் ஏராளமாக தென்பட்ட கால்நடை மந்தையை குறி வைத்துச் செல்வோம்-மேய்ப்பர்களை மிரட்டி நமக்கு தேவையான கால் நடைகளை தேர்ந்தெடுத்து கவர்ந்து கொள்வோம்-! க்ரோவாஸ் வழியாக செல்லலாம்!


மூன் பள்ளத்தாக்கிற்கு அது சுற்று வழியாயிற்றே!
ஆனுல் பாதுகாப்பான பாதை அது!
அங்கே-இராணுவத்தினர்-
நில்லுங்கள்!
படை நிற்கட்டும்!
ஆனுல் அக்கம் பக்கத்தில் தண்ணீர் இல்லேயே!
இன்றிரவு இங்கே முகாமிடுவோம்!
ட்ளெட் சுனே இங்கிருந்து பதினேந்தாவது மைலில் இருப்பதாக சார்ஜண்ட் சொன்னதை நீ கேட்கவில்லேயா? இன்றிரவு அவ்வளவு தூரத்தை கடக்க இந்த பிராணிகளுக்கு சக்தி கிடையாது!
அவர்களுடைய நடவடிக்கைகள் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வந்தது-
முகாமிடுகிருர்கள்!
நல்லது!
இன்றிரவு அவர்களே இன்னும் ஒரு கலக்கு கலக்குவதற்கு இது நல்ல வாய்ப்பு!
எப்படி?
இரண்டு மணி நேரம் கழித்து பயணக் களேப்பால் படை வீரர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில் அவர்களே நோக்கி சில நிழலுருவங்கள் நைச்சியமாக பதுங்கிப் பதுங்கி முன்னேறின-
அவர்கள் வசமுள்ள குதிரைகளின் எண்ணிக்கையையும் ரைபிள்களின் சுமையையும் கணிசமாக குறைக்க ஒரு திட்டம் இருக்கிறது-
சொல்!


காவல் நின்ற வீரர்களை அதிரடி யாக தாக்கி வீழ்த்தினர்-
ஓரமாக படுத்து உறங்கிக் கொண்டிருந்த வீரர்களின் வசம் இருந்த ரைபிள்கள் காணுமற்போயின-
உத்தரவுக்காக காத்துக்கொண் டிருந்த மேலும் நான்கு நவஹோ வீரர்கள், குரல் கேட்டதும் புலிப் பாய்ச்சலாக செயலில் இறங்கினர்-
முளையோடு பிணைக்கப்பட்டிருந்த கயிறுகள் அறுபட்டதும் குதிரை கள் சுதந்திரம் பெற்று இஷ்டத் திற்கு ஓட்டம் பிடித்தன
படைவீரர்கள் சந்தடி கேட்டு திடுக்கிட்டு விழிப்புற்று எழுந்தபோது செவ்விந்திய குழு வெகு தொலைவு விலகிச் சென்று விட்டிருந்தது-
யாஹீ ஹீ-
ஓ!
எழுந்திருங்கள்-! தாக்குதல் நடை பெறப் போகிறது!
செவ்விந்தியர்கள்!
நீசப் பயல்கள்!
அபாய எச்சரிக்கை ஒலியை எழுப்பு!
ஹோ-! என் ரைபிள்-எங்கே?
ஐயோ-என்னுடை யதையும் காணும்!
சதுர வியூகமாக நின்று துப்பாக்கிகளை தயார் நிலையில் பிடியுங்கள்!
இருபது பேர் குதிரைகளுக்கு காவல் நில்லுங்கள்!


ஏகப்பட்ட உத்தரவுகள் அவசர அவசர மாக பிறப்பிக் கப்பட்டன- எதிரிகளை எதிர் பார்த்து அனை வரும் விழிப் போடுகாத்திருந் தனர்- ஆனால் எதிரிகள்தான் வரக்காணோம்!
ஏன் அவர்கள் நெருங்கி வந்து தாக்கவில்லை!
தாக்குதல் நடத்த அவர் கள் வரவே மாட்டார்கள் என்று தோன்றுகிறது.
அவர்கள் வரவில்லை யெனில் அது நம் துரதிர்ஷ்டமே!
வந்தார்கள் எனில் ஒரு பாடம் கற்பித்து அனுப்பலாம்!
அவர்கள் வராத தற்கு அதுவே காரணமாகவே இருக்கக்கூடும்!
இப்படி நேரடி மோதலில் ஈடுபடும் அளவுக்கு டெக்ஸ் வில்லா ஒன்றும் அடிமடையனல்ல என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்!
வாஸ்தவம்தான்!
அரைமணி நேரம் எவ்வித சம்பவ மும் இன்றி கழிந்த பின், பாதி நபர் களை காவலாக நிற்கச் சொல்லி விட்டு மற்றவர் களை கலைந்து செல்ல அனுமதித் தார் ஸ்டீவர்ட்?
லெப்டினெண்ட் பெக், ஸார்!
என்ன விஷயம்?
சார்ஜண்ட் கானர்ஸின் படைப்பிரிவினரின் குதிரை களும், பத்து ரைபிள்களும் காணாமற் போய்விட்டன ஸார்.
இது என்ன புது விவகாரம்!
மறுநாள் கால்லப் நகரில்-
ஆக, அவர்களின் நோக்கம் குதிரை களையும், ரைபிள்களையும் திருடிச் செல்வதேயன்றி நம்மை தாக்குவது அல்ல-
நாசமாகப் போக-
உடனடியாக நீங்கள் ஏதாவது செய்தாக வேண்டும் ஷெரீப்-வில்லரின் அக்கிரமம் வரம்பு மீறிப் போய்க்கொண்டிருக்கிறது-
சரி-ஏழெட்டுப் பேரை கூட்டிக்கொண்டு போகி றேன்-ஆனால் ஜனங்கள் அக்கறை காட்டுவார் களா என்றுதான் சந்தேகமாக இருக்கிறது-



வில்லர் ஓர் ஆபத்தான பேர்வழி என்று ஊர் அறியும்-அத்தோடு நவஹோக்களும் கொதிப்படைந்து போயிருக்கிறார்கள். இந்நிலையில் ஜனங்கள் வீட்டிற்குள் அடைந்து கிடைக்கவே விரும்புவார்கள்.
என் வசம் பத்துப் பேர் இருக்கிறார்கள்.
வில்லரைக் கண்டு அஞ்சாத மேலும் பத்துப் பேரை நான் திரட்ட முடியும்.
மொத்தம் இருபது பேர்!-போதுமே!
வில்லரைத் தேடிச் செல்லும் வழியில் நாம் டெபியன்ஸ் கோட்டைக்கு விஜயம் செய்ய வேண்டும்-என்ன இருந்தாலும் இது இராணுவ விவகாரமில்லையா?
நல்ல யோசனை!
கர்னல் எனக்கு மிகவும் வேண்டியவர்-நிலவரம் மோசமடைந்து வருவதை நான் தெரிவித்தால், நிச்சயமாக ஒரு படைப் பிரிவை உடனடியாக அனுப்பி வைப்பார்!
சில நிமிடங்களுக்குப் பின் ஷெரீப்பும், மற்றவர்களும் கால்லப் நகரைவிட்டு புறப்பட்டனர்.
அன்றைக்கு இரவு நீங்கள் வில்லருக்கு அனுசரணையாக நடந்து கொண்டதாக பார்லோ சொன்னான்-! வில்லர் உங்கள் நண்பனா?
...மடத்தனமான கற்பனை!
ஆனால் அந்த விஷயத்தில் என் சொந்தக்கருத்தை நீ கேட்டறிய விரும்பினால் சொல்கிறேன்!
ஒரு ஷெரீப் என்ற முறையில், உன் சொத்துக்களை தீக்கிரையாக்கிய வில்லருக்கு எதிராகநான் செயல் படத்தான் வேண்டும்-
ஆனால், ஒரு மனிதன் என்ற முறையில், நீ, வில்லர் . இருவரில் ஒருவர் பக்கம் நான் இருக்கவேண்டிய நெருக்கடி ஏற்பட்டால் முடிவெடுப்பதில் கொஞ்சம் கூட தயக்கமே காட்டமாட்டேன்!


கேட்டாயா...ஸாம்!
ம்ம்...ம்!
அடுத்த தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறதை மறந்து விட்டீர்களா-ஷெரீப்?
உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் என்றால் இப்போதே தான் பதவியை இராஜினாமா செய்ய . தயாராக இருக்கிறேன்!
பொறுப்பை தட்டிக்கழிக்கிற பேச்சு இது-
ராஸ்கல்!
கடமை என்று வந்துவிட்டால் நண்பன் என்றும் பார்க்கலாகாது...ஷெரீப்!
நான்கு மணி நேரம் கழித்து-
ஹே. .ஹோப் கோட்டை எங்கே போய்த் தொலைந்தது?
ஆமாம் இங்கிருந்தே தென்படுமே!
ஒரு இழவும் புரியவில்லை. அந்த வழி காட்டி மரத்திலிருந்து கோட்டை அரை மைல் தொலைவுதான்!
பில்லி சூனிய விவகாரம் மாதிரி அல்லவா இருக்கிறது.
கோட்டை ஏன் தென்படவில்லை என்று விரைவிலேயே புரிந்தது ஹோப்புக்கும் பார்லோவுக்கும்!
குட்டிச்சுவராகி விட்டது எப்படி?


நடுநிசியில் களேபரம்!
அந்த சண்டாளன் வில்லரின் வேலேயாகத்தானிருக்கும்!
ஆனுல் எப்படி இது நடந்திருக்கும்!
இங்கிருந்த படை என்ன வாயிற்று?
சண்டை நடந்த தடயமே இல்லேயே?
நம்ப முடியாத புதிராக இருக்கிறதே!
படைப் பிரிவினரே கோட்டையை தீக் கிரையாக்கி அழித்துவிட்டு வேருேரிடம் போய்விட்டார்களோ என்னவோ!
உள்ருதே!
வேறு எப்படி இருக்க முடியும்-நீயே சொல்!
எனக்கு சொல்லத் தெரியவில்லே!
ஏதாவது சாட்சியம் கிடைத்ததா என்று துருவித்துருவி ஆராய்ந்து அலுத்துப் போயினர்-
?
ஷெரீப் ஏதாவது தென்பட்டதா?
லாடம் பொருத்திய குளம்பு தடங்களும், லாடம் பொருத்தாத குளம்பு தடங்களும் நிறைய காணப்படுகின்றன.
இவை பதிந்திருக்கும் விதத்தைப் பார்த்தால் படைகளும், செவ்விந்தியர்களும் சேர்ந்தே பயணமாகியிருக்கக்கூடும்!
அப்படியா?


ஆமாம்! லாடம் பொருத்தாத குளம்பு தடங்களின் மீது லாடம் பொருத்திய குளம்பு தடங்கள் பதிந்திருந்தால் படையினர் செவ்விந்தியர்களை துரத்திச் சென்றதாக கொள்ளலாம்.
ஆனால் தடங்கள் அப்படி பதியவில்லை-நவஹோக்கள் கோட்டையை தீக்கிரையாக்கி விட்டு, எல்லா வீரர்களையும் தங்களோடு கொண்டு போயிருப்பார்கள் என்பது என் யூகம்!
நடக்கவே முடியாத சங்கதி!
அப்படியானால் என்னதான் நடந்திருக்கும் என்று நீதான் சொல்லேன்-!
இப்போது நாம் என்ன செய்வது?
இந்தத் தடங்களை பின் பற்றிச் செல்வோம்!
நவஹோ பிராந்தியத்தினுள் நம்மை அது இட்டுச் செல்லுமே!
பீதியா...ஷெரீப்?
வார்த்தைகளை அளந்து பேசு-ஹோப்!
ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்-என் அதிகார வரம்பு செல்லே கணவாய்க்கு தெற்கே ஐந்து மைல் தொலைவு வரை தான்- அதை தாண்டிச் செல்லும் பொறுப்பு எனக்கு இல்லை!
அத்தோடு இங்கே நான் பார்த்து தெரிந்து கொண்ட உண்மைகளை உடனடியாக வின்கேட் கோட்டைக்கு தெரிவிக்கும் கடமையும் எனக்கு உண்டு.
என் ஆட்களில் ஒருவனை அனுப்பி வைக்கலாம்!
நீயும் உன் ஆட்களும்-! சரி-ஏறுங்கள், முடிந்த தொலைவுவரை தடத்தின் வழி போய்ப் பார்ப்போம்!
ம்ம்.
போறாத காலம்!



அன்று -அஸ்தமன வேளையில்-
அட- அநியாயமே!
?!
இது நிச்சயமாக நவஹோக்க ளின் சேஷ்டை தான்! இதன்பின் னரும் மேலே தொடர்ந்து போ கத்தான் விரும்புகிறாயா-ஹோப்?
ஷெரீப் கேட்பதில் அர்த்தமிருக் கிறது ஸாம்! பயணத்தை தொட ருவது தற்கொலை முயற்சிக்கு ஒப்பாகும்!
சரி- அப்படியானால் திரும்பி விடுவோம்!
ஆனால் விரைவிலேயே வில்லரை நான் தேடிப் பிடித்து ஒரு பாடம் கற்பிக்காமல் விடப் போவதில்லை!
அதே வேளையில் அங்கே-
இங்கேயும் எல்லாவற் றையும் கொளுத்தி யிருக்கிறார்கள்- ஆனால் குதிரைகள் தான் கொலைப் பட்டினி!
பரவாயில்லை- இங்கேயே நாம் முகாமிடுவோம்!
போதுமான தண்ணீர் இப்போது நம் கைவசம் உள்ளது!
குதிரைகள் எக்கேடும் கெட்டுப் போகட்டும்! அந்தச் சண்டாளர்கள் புல்வெளியை பாக்கியில்லாமல் சாம் பலாக்கிவிட்டுப் போயிருக்கிறார்கள் இந்நிலையில் நாம் என்னதான் செய்ய முடியும்!
திரும்பிவிடலாமே?
உனக்கு ஏதாவது மூளை கோளாறு? எதிரிகளை விரட்டிப் பிடிக்க வந்திருக்கிறோம் நாம்! அவர்- களோடு கண்ணாமூச்சி ஆடுவதற்கல்ல! திரும்பிப் போவது என்ற பேச்சிற்கே இடமில்லை! புரிகிறதா?


குதிரைகளுக்கு தண்ணீர் காட்டுங்கள்-கைவசம் இருக்கிற கொஞ்சநஞ்ச தீனியை பகிர்ந்து அளியுங்கள்-அவரவர் குதிரையை கண்காணிக்கும் பொறுப்பு அவரவரை சார்ந்தது-
கேட்டாயா?
கிழவனுக்கு புத்தி தடுமாறுது!
இரண்டு நாட்களாக குதிரைகள் தீனி எதுவுமே தின்னவில்லை. நாளைக்காவது புல்வெளி தென்பட்டால்தான் உண்டு-இல்லையேல் இவை அனைத்தும் பட்டினியால் செத்து விழப் போவது நிச்சயம்!
அப்புறம்?
அடுத்து நமக்கும் அதேகதிதான்! நம்மை ஒழித்துக்கட்ட நவஹோக்களுக்கு ஒரு தோட்டா கூட அவசியப்படாமல் போகும்!
நீர்ச்சுனை அருகே முகாமிட்டிருக்கிறார்கள்
வா-போகலாம்.
இராணுவ வீரர்களின் இரத்தம் ஒரு சொட்டுகூட சிந்தலாகாது என்று தலைவர் வற்புறுத்திக் கூறியிருக்காவிட்டால் இன்றிரவே இவர்களை கூண்டோடு கைலாசம் அனுப்பி விட முடியும்!
அவர் அனுபவம் மிகுந்த புத்திமான்-எல்லா அம்சங்களையும் அலசி ஆராய்ந்த பின்னர்தான் அப்படியொரு கட்டுப்பாட்டை விதித்திருப்பார்.
ஓ!
அரை மணி நேரம் கழித்து-
அதோ வருகிறார்கள் நம் ஒற்றர்கள்-



முகாமிட்டு தங்கி விட்டனரா?
ஆமாம்-ட்ரவுட் நீர்ச்சுனை அருகே!
வீரர்களும், குதிரைகளும் மிகவும் களைப்படைந்து போயிருக்கின்றன.
நான் ஏற்கனவே கணித்ததுதான்!
உண்ண போதுமான உணவின்றி பசியால் சோர்ந்து போயிருப்பது உறுதி-இன்னமும் திரும்பிச் செல்லும் எண்ணம் அவர்களுக்கு தோன்றுததுதான் ஆச்சரியம்!
ஒருவேளை நாளை அவர்கள் திரும்பிவிடக் கூடும்.
காலம் கடந்த செயல்! நூற்றைம்பது மைல்களை கடந்து வந்திருக்கிறார்கள்-! வழியில் புல், பூண்டு இல்லாமல் தீக்கிரையாக்கி விட்டோம்-! யாருமே உயிரோடு ஊர்போய்ச் சேர முடியாது!
இன்றிரவு அவர்களை நாம் தாக்குகிறோமா?
ஆமாம்!
நாம் பல குழுக்களாக பிரிந்து சென்று அவர்களை தூங்கவிடாமல் பண்ணுவோம்-மொத்த திட்டத்தையும் விபரமாக கூறுகிறேன்-கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள்.
இரண்டு மணி நேரம் கழித்து, ஐந்து, ஐந்து பேராக மூன்று குழுக்கள் அங்கிருந்து கிளம்பின-
ஆபத்தான காரியம் எதையும் செய்யத் துணிய வேண்டாம் டைகர்!
ஓ! காரணமே இல்லாமல் உயிரை பணயம் வைக்க நாங்கள் முட்டாள்களல்ல-! வருகிறோம்!


ரைபிளின் சுடும் வரம்புக்குள் நெருங்கிச் சென்றதும் மூன்று குழுக்களும் பிரிந்து விலகிச் சென்றன.
தன் குதிரையை பத்திரமான தொலைவில் நிறுத்திவிட்டு எதிரிகளின் முகாமை நோக்கி பதுங்கிப் பதுங்கி முன்னேறினான் டைகர்.
சில நிமிடங்களுக்குப் பின்.
சார்ஜண்ட்! யாரோ நம்மை நோக்கி வரும் அரவம் கேட்கிறது.
நிஜமாகவா?
எல்லோரும் எழுந்திருங்கள். நவஹோக்கள் வருகிறார்கள்!
குதிரைகள் ஜாக்கிரதை!
தீயை அணையுங்கள்!
நாசமாகப் போக!
தாக்குதல் உறுதியாகி விட்டது. கர்னல்!
வியூகமாக நிற்கச் சொல். எல்லோரையும்!
யாயா-ஹூஈ.
டுமீல்
டுமீல்
யாஹூஈ.
வருகிறார்களோ?
இந்த திசையிலிருந்துதான்!
சுடுங்கள்!
டுமீல்
அடுத்த சில நிமிடங்களில் தோட்டா முழக்கங்கள் அந்த பிராந்தியம் முழுக்க எதிரொலித்தன. யுத்த அறைகூவல் கேட்ட திசையை நோக்கி சரமாரியாக 'இலக்கின்றி தோட்டாக்களை அனுப்பி வைத்தார்கள் களைத்துச் சோர்ந்து போயிருந்த படை வீரர்கள்.
யாஹூஈஈஈ....
டுமீல்
டுமீல் டுமீல்



தங்கள் எதிரிகள் வானோக்கி ஒரு முறை சுட்டதும் மறுகணமே அங்கிருந்து புயலென ஓடிப்போன உண்மையை அவர்கள் அறியவில்லை-
எதிர்பார்த்த மாதிரி நவஹோக்கள் தங்களை நோக்கி ஆவேசத்தோடு பாய்ந்தோடி வரவில்லை எனபதை விரைவிலேயே கண்டு கொண்ட வீரர்கள் சுடுவதை நிறுத்தினர்- ஆனால் அதே கணத்தில் வேறொரு திசையிலிருந்து இன்னொரு கும்பல் ஆக்ரோஷமாக கத்திக்கொண்டு தங்களை நோக்கி நெருங்கி வருவதை உணர்ந்து திகைத்தனர்-
யாஹீஈஈ-
டுமீல்
டுமீல்
இந்தப் பக்கமிருந்து தான்
சுடுங்கள்!
கிட்டின் யுக்தி பலித்துவிட்டது-எதிரிகள் தோட்டாக்களை வீணடிக்கிறார்கள்-
டும்ல்
டுமீல்
நிறைய சாவா-காப்டன்?
இல்லை-இதுவரை அதிர்ஷ்டம் நம் பக்கமதான்.
செவ்விந்திய நாய்களுக்கு குறிவைக்கவே தெரியாது.
நானும் கேள்விப் பட்டிருக்கிறேன் காப்டன்?
நானும் ஆட்டத்தில் கலந்து கொள்ள இதுவே தருணம்!
மறுகணம் ஒரு தீ அம்பு இருளை கிழித்துக் கொண்டு மேலெழும்பிப் பறந்தது.
தீ அம்பு!
நாசமாகப் போக


அந்த திசையில்-
தாழ்வாக சுடு!
டுமீல் டுமீல்
குதிரைகள்-ஜாக்கிரதை!
ஹீ-ஹீ!
கிட்டின் யோசனைப்படி இந்த அம்புகளின் முனை முறிக்கப் பட்டிருப்பது நல்ல யுக்தி!
டுமீல் டுமீல்
ஹே- ஜாக்கிரதை!
அஹ்!
அடக் கடவுளே!
ஆனால் அந்த ஆதிகாரியின் முதுகை ஊடுருவிச்சென்று நெஞ்சைக் கிளிக்காமல் தெறித்து விழுந்தது அந்த அம்பு-
நீ கவச உள்ளாடை அணிந்திருக்கிறாயா என்ன?
இல்லையே!
அப்படியானால் அந்த அம்பு உன்னைக் கொல்லத் தவறியது ஏன்?
எனக்கு எப்படித் தெரியும்?
?
வலுவான அடி ஒன்றை உணர்ந்தேன்- அவ்வளவுதான்!


ஒரு பிடிவாதப் படலம்!
நார்போக் அந்த அம்பை எடுத்து தீப்பந்த சுருணையை அகற்றிவிட்டு கவனித்தபோது முனை முறிக்கப்பட்டிருப்பதை கண்டார்-
இது என்ன சேஷ்டை!
ஒரு இழவும் புரிய வில்லையே!
முனையை எதற்காக முறித்திருப் பார்கள்?
இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?
தன் ஆயுதங்களின் மீது செவ்விந்தியர்கள் எவ்வளவு சிரத்தை காட்டுவார்கள் என்று அறியாததால் நீ இப்படிக் கேட்கிறாய்- இப்படியொரு அம்பை எந்த ஒரு வீரனும் பயன்படுத்த மாட்டான்.
ஒரு வேளை இருட்டில் முனை முறிந்திருப்பதை கவனிக்கத் தவறியிருக்கலாம் இல்லையா?
ஜாக்கிரதை இன்னொன்று வருகிறது!
?
தட்
இதுவும் தெறித்து விழுவதைப் பார்த் தால் இதன் முனை-யும் முறிந்துதா னிருக்கக் கூடும்!
இந்த யுக்தி ஏனென்று விளங்க வில்லையே!
கையில் எடுத் துப் பார்த்தது மே அதுதான் நிஜம் என்று தெளிவாகி விட்டது!
அற்ப விஷயங்களில் பொன் னான நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன்!
எந்த வினாடியிலும் முழு அள-விலான தாக்குதல் தொடங் கக் கூடும்!
ம்ம்-!


தீ அம்பு வந்த திசையை நோக்கி தொடர்ந்து சுடுங்கள்-
டுமீல்
நான் தலையை உயர்த்திபார்க்கக்கூட அவகாசம் கொடுக்காமல் தொடர்ந்து தோட்டாக்கள் சீறிக்கொண்டு வருகின்றன.
அரை மணி நேரம் இம் மாதிரி ஒரு ஆரவாரம் நீடித்த பின்னர் சட்டென்று ஓய்ந்து போனது.
அவர்கள் போய்விட்டனர்!
அங்கே ஏகப்பட்ட செவ் விந்திய பிணங்களை நாளை காலை காணலாம்!
அப்பாடா- ஒருவழியாக ஓய்ந்தது!
அந்தப் பன்றிகளுக்கு சரியான பாடம் கற்பித்து விட்டோம் என்று நினைக்கிறேன்!
ம்ம்-அப்படித்தான் தோன்றுகிறது.
காயம் பட்டவர்களை முகாமின் மத்திய பகுதிக்கு கொண்டு வரச் சொல்-அப்படியே முகாமைச் சுற்றி காவல் நிற்க ஆட்களை ஏற்பாடு செய்!
சரி ஸார்!
தோட்டாக்களின் இன்னிசை முழக்கம் ஓய்ந்துவிட்டது! அவர்கள் இன்னும் சில தோட்டாக்களை வீணடிக்கச் செய்யப் போகிறேன் இப்போது!
மறு விநாடி, இருளைக் கிழித்துக் கொண்டு வந்த கடைசித் தீ அம்பு மீண்டும் வீரர்களை திடுக்கிட வைத்தது.
அங்கே பார்!
மறுபடியும் தீ அம்பு!


டுமீல் டுமீல் டுமீல்
இதற்கிடையே-
அடேயப்பா-எத்தனை தோட்டாக்கள் சீறிக் கொண்டு வருகின்றன! இந்த ஆர்ப்பாட்டம் ஓய்ந்ததும் நான் வந்த மாதிரியே நைஸாக திரும்பிச் சென்றுவிட வேண்டும்!
டுமீல்
முகாம் முழுக்க சுற்றி வந்துவிட்டேன்! ஸார்-யாருக்கும் எந்தக் காயமும் ஏற்படவில்லை ஸார்!
நிஜம்தானா நீ சொல்வது?
நம்பவே முடியாத சங்கதி' இவ்வளவு ஆர்ப்பாட்டத்திற்குப் பின் நான் வேறு மாதிரியான அறிக்கையை அல்லவா எதிர்பார்த்தேன்!
ஆர்ப்பாட்டம் முழுக்க நாம் பண்ணியதுதான் ஸார்!
நவஹோக்களை நெருங்க விடாமல் பண்ணியதுவரை நாம் செய்தது சரி தான்! காவலுக்கு ஏற்பாடு செய்தாயிற்றா?
யெஸ்-ஸார்!
இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை ஆள் மாற்றம் செய்துகொள்ள உத்தரவிட்டிருக்கிறேன்.
நல்லது ! நீயும் போய் நன்றாக ஓய்வெடுத்துக் கொள் நார்போக்!
செவ்விந்தியர்களின் நோக்கம் நம்மை தாக்குதல்ல என்று நிச்சயமாகப் படுகிறது எனக்கு.
ஏய்-! என்ன யோசனை?
வந்து-
தப்பு! தாக்குவதற்குத்தான் வந்திருப்பார்கள். ஆனால் நாம் சட்டென்று பதிலடி கொடுக்கத் தொடங்கியதைக் கண்டு மிரண்டு ஓடிப்போய் விட்டனர்-



முகாமை சுற்றி விழுந்துகிடக் கும் செவ்விந்திய பிணங்களை காலையில் பார்த்த பிறகு புரியும் உனக்கு-என் கூற்றுத்தான் சரி என்று!
ம்ம்-அப்படியிருந்து விட்டால் சரிதான்-!
அப்படித்தான் இருக்கமுடியும்! ஆல்ரைட் ! தூக்கம் கண்ணை சுழற்றுகிறது-குட்நைட்!
குட் நைட்-கர்னல்.
இதற்கிடையே-
ரொம்ப தடபுடல் போலிருக்கிறது!
மோசமில்லை!
முழு அளவிலான யுத்தம் நடப்பதுபோல் ஓய்வின்றி துப்பாக்கி முழக்கம் கேட்டதே!
ஆமாம்-நிஜமாகவே நாங்கள் அவர்களை தாக்கப் போவதாக பயந்து விட்டார்கள்!
அடேயப்பா-எத்தனை தோட்டாக்கள்!
நாம் எதிர்பார்த்ததும் அதைத்தானே!
அரைமணி நேர இடைவெளி கொடுத்து மீண்டும் அந்த நாடகத்தை அரங் கேற்றுவோம்!
ஆனால் முகாமை நெருங்கிச் சென்று விடலாகாது! வீரர்கள் எவ்வளவுதான் மிரட்சியடைந்தாலும் குறி வைப்பதில் பிழை செய்ய மாட்டார்கள்!
அரைமணி நேரம் கழித்து-
யாஹீஈஈஈ-
மறுபடியுமா?
ஆமாம் அப்படித்தான் தோன்றுகிறது!
டுமீல்
யாஹீஈஈ



மீண்டும் தாக்குகிறார்கள்!
சண்டாளப் பாவிகள்!
முகாம் முழுக்க அதிகார உத்தரவுகள் எதிரொலித்தன-அதைத் தொடர்ந்து மீண்டும் சரமாரியாக தோட்டாக்கள் சீறிப் பறக்கலாயின-
டுமீல் டுமீல்
படு பயங்கரமான சண்டையாக தோன்றிய அந்த ஆரவாரம் அரை மணி நேரம் கழித்து அடங்கிப் போன பின் இம்முறையும் கொஞ்சமும் நம்ப முடியாத ஓர் அறிக்கை கிடைக்கப் பெற்றார் கர்னல்-
என்ன இம்முறையும் காயம் பட்டவர் எவருமில்லையா?
இல்லை ஸார்! வீரர்கள் சோர்ந்து தளர்ந்து போயிருக்கிறார்களே தவிர எவருக்கும் எந்தக் காயமும் இல்லை-!
செவ்விந்தியர்களுக்கு குறி வைக்கத் தெரியாது என்பது உண்மையாக இருந்தாலும்-இந்த அளவுக்கு மோசமாக இருப்பார்கள் என்று நினைக்கவே யில்லை!
உங்கள் கணிப்பு தவறு ஸார்!
தவறு? நீ என்ன சொல்கிறாய்?
முகாமை சுற்றுப்பார்த்த போது ஓர் உண்மை உறைத்தது-
இம்முறையும் யாருக்குமே காயம்படவில்லை என்ற உண்மை இந்த தாக்குதல் செவ்விந்தியர்கள் நடத்திய ஒரு ஏமாற்று நாடகம் என்று கூறுகிறது!
உளறாதே!
தாக்க வந்தவர்கள்தான் நாம் முனைப்பாக பதிலடி கொடுத்ததும் பயந்து பின்வாங்கி ஓடிப்போய் விட்டனர் என்கிறேன் நான்-
என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை!
நம் வசமுள்ள தோட்டாக்களை வீணடிக்கச் செய்வதே அவர்கள் நோக்கம் என்பது என் கணிப்பு. அதில் அவர்கள் முழு வெற்றி ஈட்டி விட்டார்கள்.
அர்த்தமற்ற பிதற்றல்!


நார்போக் சொல்வதுதான் சரி என்று எனக்குப்படுகிறது ஸார்!
மூடு வாயை! உன் கருத்தை இங்கே யாரும் கேட்கவில்லை!
என் இத்தனை வருட சர்வீஸில் இப்படியொரு பித்துக்குளித் தனமான வியாக்கியானத்தை நான் கேட்டதேயில்லை! ஆல்ரைட்- அவரவர் நிலைக்குச் செல்லுங்கள்!
அதன் பிறகு இரவுப் பொழுது அமைதியாகவே கழிந்தது. விடிகாலையில் கண்காணிப்புப்படை ஒன்று வெளியேறியது!
செவ்விந்திய பிணம் எதுவும் கண்ணில் படக்காணோமே?
ஒருவேளை அவர்கள் தூக்கிக் கொண்டு போயிருக்கக்கூடும்!
முகாமில்-
சார்ஜண்ட்-நிலவரம் எப்படியிருக்கிறது?
கைவசம் தோட்டாக்கள் ரொம்ப குறைச்சலாக உள்ளன ஸார்!
எவ்வளவுதான் இருக்கிறது?
ஆளுக்கு இரண்டு ரவுண்டு வரும். அவ்வளவுதான்!
இருப்பதை எல்லோரும் சமமாக பங்கிட்டுக் கொள்ளட்டும். இனி சுட நேர்ந்தால் குறிப்பிட்ட இலக்கை குறிவைத்து மட்டுமே சுடவேண்டும் என்று எல்லோரையும் எச்சரித்து வை!
சரி-ஸார்!
கண்காணிப்புப் படை திரும்பி வந்து சேர்ந்தது-
கானர்ஸ் ரிப்போர்ட்டிங் ஸார்!
ஏதாவது கண்ணில் பட்டதா?


அவர்களுடைய தடங்களை தவிர வேறு எதுவும் தென் படவில்லை ஸார்!
ம்ம்!
இப்போதாவது என் கூற்றை ஏற்றுக் கொள் கிறீர்களா கர்னல் ஸார்!
நோ!
பயந்து ஓடிப்போய் விட்டார்கள் என்பதுமுன்னைவிட உறுதிப்படு கிறது!
அவர்களுடைய பீதியை நமக்கு சாதக மாக்கிக் கொண்டால் வெற்றி நமக்கு தான்-
ஆனால் வீரர்களும் குதிரைகளும் கடந்த இரு நாட்களாக போதுமான உணவு அளிக் கப்படாததால் சோர்ந்து, தளர்ந்து போயிருக் கிறார்கள் என்பதை நினைவூட்ட கட்மைப் பட்டிருக்கிறேன்.
மேலதிகாரியை எதிர்த்துப் பேசுவது முறையல்ல என்பதை உனக்கு நான நினைவூட்டுகிறேன்.
சாரி ஸார்!
ஆல்ரைட்! ஏறுங்கள் குதிரைகளில்! விரலவிட்டு எண்ணக்கூடிய செவ்விந் திய நாய்களை எதிர்த்து அழிக்க பாரம் பரிய பெருமையுடைய அமெரிக்க குதிரைப் படையினருக்கு வயிறு முட்ட உணவு அவசியமில்லை!
!
கிழட்டு முண்டம்!
அங்கே வின்கேட் கோட்டையில்-
சாத்தியமேயில்லை-ஷெரீப்!
ஆனால் நிஜம் அதுதான்!
மைகாட்-!இப்படி ஒரு விபரீதம் எப்படி நடந்திருக்க முடியும்?
டெபியன்ஸ் கோட்டை தரைமட்ட மாகி விட்டதா? படைப்பிரிவு மொத்தமும் மாயமாக மறைந்து விட்டதா?- எப்படி?
ஒருவேளை இந்தக் கேள்விகளுக்கு டெக்ஸ வில்லரிடமிருந்து பதில கிடைக்கலாம்.
சைத்தான்-! அவனும் நவஹோக்களும் நாசமாகப் போக!



தந்திக் குமாஸ்தாவை இங்கே அனுப்பு. உடனே கிளம்ப தன் படைப்பிரிவை தயார்படுத்துமாறு ரெனால்டிடம் சொல்.
யெஸ்-ஸார்!
நகரைச் சுற்றி ரோந்து வரக் கூட யாரையும் விட்டுச் செல்ல முடியாத இக்கட்டு-ஷெரீப்!
அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம் ஸார்-
வில்லரை நானறிவேன். அவரிடமிருந்தோ நவஹோக்களிடமிருந்தோ ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று ஜனங்கள் அஞ்சத் தேவையில்லை.
ஒகே!
ஹோப்பின் பண்ணையை அவன்தான் தாக்கி அழித்ததாக சற்று முன் சொன்னீர்கள்-
அது வித்தியாசமான விவகாரம் கர்னல்-! நவஹோ இளைஞர்களை அநியாயமாக சுட்டு வீழ்த்திய இருவரில் ஹோப்பும் ஒருவன்.
ம்ம்-அதை நான் மறந்துவிட்டேன்!
ஆனால் என்ன இருந்தாலும், டெக்ஸ் வில்லர் மீது எனக்கு நம்பிக்கையில்லை!
நான் வேறுவிதமாக நினைக்கிறேன்!
ஆல்ரைட்! முடிவில் என்ன தான் நடக்கிறதுஎன்று பார்த்துவிடலாம்!
ஆனால்- வில்லரை தூக்கில் தொங்கவிடும் நோக்கில்தான் என் வழிமுறை இருக்கும் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்-
குட்லக்-கர்னல்!
அதையடுத்து ஒரு படைப்பிரிவு கோட்டையை விட்டு வேகமாக வெளியேறியது-அதே சமயம் கம்பிகளின் வழியே-
கர்னல் வில்ஸன்- நவஹோக்கள் புரட்சி செய்கிறார்கள். டெபியன்ஸ் கோட்டை அழிக்கப்பட்டு விட்டது-ஒரு படைப்பிரிவு நவஹோ எல்லைப் பகுதியினுள் சென்றிருக்கிறது. உடனடியாக கூடுதல்படைபலத்தை அனுப்பி வைக்கவும். விப்பின் கோட்டைக்கும் க்ராஸ்பை கோட்டைக்கும் தகவல் தெரிவிக்கவும்.



தண்ணீர்...! தண்ணீர்...!
அதே வேளையில் வில்லரும் நவஹோக்களும் ஹோப்பின் கால்நடைகளை முன் புள்ளத் தாக்கு நோக்கி ஓட்டிச் சென்று கொண்டிருந்தனர்-
உணவு வருகிறது என்று நினைக்கிறேன்!
நிம்மதியளிக்கும் விஷயம்தான் - இல்லையா?
ஹலோ ப்ளாயிட்! ஹலோ காப்டன்!
வாக்குத் தவறாத ஆள் நீ வில்லர்!
கைதிகளை பட்டினி போட்டு வதைக்கும் கிராதகனல்ல நான்!
நான்- அப்படி நினைக்கவில்லை!
ஆனால் இவ்வளவு சுலபமாக கால் நடைகளை சேகரித்து வந்துவிட முடியும் என்று நான் நினைக்கவில்லை!
உண்மையில் மிகமிக சுலபமாக சாதிக்க முடிந்தது!
தான் செய்த அக்கிரமத்திற்கு நஷ்டஈடாக இவற்றை ஹோப் தானாகவே கொடுக்க முன் வரக்கூடும் என்றொரு எண்ணம் எனக்கு இருந்தது-
?
எனவே, அவனை சந்தித்துப் பேச சென்றேன்-
சுமூகமான சந்திப்பாக இருந்ததா?


ஆமாம்·! நாங்கள் விடைபெற்றுப் பிரிந்த போது அவன் கண்ணில் நீர் ஆறாக பெருக்கெடுத்து வழிந்தது என்றால் பார்த்துக் கொள்ளேன.
அப்படியா?
ஆமாம்·! ஆனால் கண்ணீருக்குக்காரணம் பிரிவாற்றாமையால் அல்ல-அவனுடைய பண்ணை பற்றி எரிந்தபோது எழுந்த புகை காரணமாக!
கதறி அழுதானா என்ன?
ஓ!
ஆனால் என் கருத்தை நீ கேட்பதானால் சொல்கிறேன்-
சொல்லுங்கள்-கேட்கிறேன்!
இந்த அடாவடித் தனங்கள் அனைத்துக்கும் ஒரு நாள் நீ கோர்ட்டில் பதில் சொல்ல வேண்டி வரும். ஒரு முழு இராணுவ படைப் பிரிவை எதிரித்து நின்றுவிட முடியும் என்று முட்டாள்தனமாக எண்ணாதே!
ஊஹூம்-அப்படியொரு எண்ணம் கிடையாது எனக்கு!
என் நவஹோ வீரர்கள் வீரத்தில் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்றாலும் அவர்களால் இராணுவத்திற்கு எதிராக தாக்குப் பிடிக்க முடியாது என்று அறிவேன்!
பின்னே?
ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தற்காலிக போர் நிறுத்த ஏற்பாடு வர வகை இருக்கலாமில்லையா?
நீ சொல்வது புரிகிறது!
அதற்கு முதல் முயற்சியை மேலிடம் மேற்கொள்ளும் என்று நினைக்கிறாயா?
ஏன் மாட்டார்கள்?
மேலும் சில தோல்விகள் ஏற்பட்டால்! சிறு ரகளையாக தொடங்கிய விவகாரம் முழு அளவிலான ஒரு செவ்விந்திய போராக மாறும் அபாயம் உருவானால்!
?!



பின்னணியில் உள்ள உண்மை பொது மக்களின் மனச்சாட்சிக்கு உரமிட்டால்! கொந்தளிப்பை அடக்க மேலிடம் தானாகவே முன வரவேண்டியது அவசியம் என்று ஆகாதோ?
அவர்களை நீ சரியாக புரிந்து கொள்ளவில்லை!
இல்லை-! நான் அவர்களை தெளிவாக புரிந்து வைத்திருக்கிறேன்-அதனால் தான் நாளைப் பொழுதைப்பற்றி நம்பிக்கையோடிருக்கிறேன்-
இராணுவ மேலிடத்தார் அனைவருமே கர்னல் ஸ்டீவர்ட் மாதிரி அடிமுட்டாள் கள் இல்லையே?
நிச்சயமாக இல்லை!
ஜெனரல் ஆண்டர்ஸ் மற்றும் ஸ்டோன் இருவரையும் நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் நியாய வாதிகள்.
குட்-! நான் அம்மாதிரி அதிகாரிகளை நம்பித்தான் இப்படி திட்டமிட்டேன்!
ஒரு இராணுவ நடவடிக்கை என்பது வெறும் கேலிக்கூத்து விவகாரம் அல்ல-அதற்கு ஆள்பலம், ஆயுதங்கள், உணவு சப்ளை இப்படி நிறைய தேவை!
அத்தோடு நிறைய பணமும், தியாக சித்தங்களும் தேவை! யுத்த மந்திரி யின் அனுமதியின்றி பணத்தை செலவிட முடியாது!
ம்ம்-
விவகாரத்தைப் பற்றி தெளிவாக நீ சிந்தித்து முடிவெடுத்திருப்பது புரிகிறது-
விளைவு பற்றி சிந்திக்காமல் வீணே உயிரை பலிகொடுக்க நான் மூடனல்ல-
ஒன்று சொல்வேன் காப்டன்-! யாரோ செய்த அக்கிரமத்திற்கு அப்பாவிகள் இரத்தம் சிந்துகிற மாதிரி யுத்தத்தை திட்டமிடமாட்டேன்!



கர்னல் ஸ்டிவர்டின் நிலைமை என்ன என்று கண்டறியச் செல்கிறேன்-!
ஓகே-வரட்டுமா!
!
என்ன நினைக்கிறீர்கள் காப்டன்?
சமர்த்தன்!
ஆனால் சட்டத்திற்கு எதிர் அணியில் இருப்பதுதான் துரதிர்ஷ்டம்!
உங்கள் கருத்து தவறு!
அவருடைய வழிமுறை மரபுக்கு முரணானதாக இருக்கலாம்-ஆனால் அவருடைய இலட்சியம் நீதியை நிலைக்கச் செய்வதேயாகும்!
ட்ரவுட் சுனையிலிருந்து பத்து மைல் தொலைவில்
ஆவ்-வ்!
!
விழுந்து தொலைந்து விட்டது-சனியன்!
வேண்டுமானால் என்னுடைய குதிரையை வைத்துக் கொள்ளுங்கள் ஸார்!
கொஞ்சம் ஓய்வெடுத்து விட்டு போகலாமா-ஸார்!
நோ-! அதில் அர்த்தமேயில்லை! உன்னுடையதும் இப்பவோ பிறகோ என்று தானே இருக்கிறது!



படை நிற்கட்டும்! கீழே இறங்குங்கள்!
ஓ.கே.-ஒரு மணி நேர ஓய்வு அனுமதிக்கிறேன்!
நின்று விட்டார்கள்.
இரண்டு மைல் தள்ளி பச்சை புல்வெளியும், தண்ணீரும் தாராளமாக இருக்கிற உண்மை அவர்களுக்குத் தெரியாது. பாவம்!
எல்லோருமே மயங்கி விழும் நிலையில் இருக்கிறார்கள்-
பிணம் போல் அவர்கள் சரிவதை கவனி!
நாம் உடனடியாக ஏதாவது செய்யத் தவறினால் மீண்டும் அவர்கள் ஒரு போதும் எழப் போவதில்லை!
என்ன செய்யலாம் சொல்?
எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது!
நேற்றிரவு நாம் பிடித்த அவர்களுடைய குதிரைகளில் ஒன்றை கொண்டு வா-தண்ணீர் பாட்டில்களை அதில் கட்டித் தொங்கவிட்டு அங்கே அனுப்பி வைப்போம்.
!
நல்ல யோசனையாக படவில்லையே!
பொறுத்திருந்து தான் பாரேன்!



சரியோ, தவறோ அவர்கள் தாகத்தால் மடிவது கூடாது!
பத்து நிமிடங்களுக்குப் பின்-
காப்டன்!
என்ன ஸார்?
அங்கே ஒரு குதிரை நம்மை நோக்கி ஓடி வருகிறது!
நிறைய தண்ணீர் பாட்டில்களை சுமந்துகொண்டு!
ஒரு குதிரை வருகிறது இங்கே-
?
தண்ணீர்!
மறு நிமிடம், வெறிபிடித்தவர்கள் போல் அந்தக் குதிரையை நோக்கி ஓடினார்கள் வீரர்கள் அனைவரும்-
ஹீ-ஹீ-ஈ-
தண்ணீர்-
போ-விலகி!
விலகு ஒதுங்கு-
வழியை விடுடா-
அட அநியாயமே-அடித்துக் கொண்டு செத்துப்போவார்கள் போலிருக்கிறதே!
டைகர்-ஏறு குதிரையில்
ஓ!


விடு அதை!
பிடுங்காதேடா!
எனக்கு கொடு!
ம்-புறப்படுங்கள்!
யாஹீ ஈ ஈ ஈ-!
இது என்னுடையது!
அதோ நவஹோக்கள் வருகிறார்களடா-முண்டங்களா!
?
அணிவகுத்து நில்லுங்கள் சீக்கிரம்!
அந்த மடையர்கள் நம்மை சுடப் போகிறார்கள்!
வேறெதை அவர்களிடம் நீ எதிர்பார்த்தாய்?
டுமீல்
டுமீல்
விலகிப் பரவி அவர்களை வளையுங்கள்!


தோட்டாக்கள் சரமாரியாக பறந்தன - வீரர்களிடம் இருந்த தோட்டாக்கள் தீரும்வரை அந்த பட்டாசு வேடிக்கை தொடர்ந்தது-
இத்தோடு தீர்ந்துபோயின தோட்டாக்கள்!
கத்தியை எடுத்துக் கொள்ளுங்கள்!
கிட் - சுடுவது நின்று விட்டது! தோட்டா தீர்ந்து விட்டது போலும்!
இதைத்தான் நான் எதிர்பார்த் தேன்!
நெருங்கி வளையுங்கள்-!
யாஹீ-ஈ-ஈ-!
தாக்க வருகிறார்கள் - ஆண்டவன்தான் நம்மை காப்பாற்ற வேண்டும்!
ஆனால் இருபது கஜ தொலைவில் செவ்விந்தியப் படை வீரர்கள் நின்றுவிட்டனர். கிட் மட்டும் தனித்து முன்னேறி வந்தான்-
சரணடைந்தீர்கள் என்றால் உங்களை துன்புறுத்த மாட்டோம்!
சரணடைய கர்னல் ஸ்டீவர்ட் ஒன்றும் கோழையல்ல. இதுதானடா என் பதில்.
டுமீல்


டுமீல்
ஆ-!
நில்லுடா-
பைத்தியக்காரா!
டுமீல்
!
ஐயோ கிட்டை கொன்று
வீட்டார்கள்!
யாயாஹிஹி-
கொல்லுங்கள்!
விடாதீர்கள்!
வேண்டாம்!
நிறுத்துங்கள்!
நில்லுங்கள்! இரவுக்
கழுகின் ஆணையை
மறந்து விடாதீர்கள்!
பிஸ்டலை
கீழே போடு சைத்தானே!
சதக்
ஆ



அந்த கிராதகர்களுக்கு ஈவு இரக்கம் காட்டத் தேவையில்லை-
அப்படியில்லை!
சமரசம் பேச முன் வந்தவனை குறி வைத்த அயோக்கிய சிகாமணி மட்டுமே தண்டிக்கப்பட வேண்டியவன்-
வீரர்களே! உங்களுடைய நிலைமை பரிதாபத்திற்குரியதாகிவிட்டது கண்கூடு-மரணத்தின் நிழல் உங்கள் மீது படிந்துவிட்ட நிலையில் சரணடைவதால் இழிவு ஏதுமில்லை-கடைசி முறையாக கேட்டுக்கொள்கிறேன்-உங்களுடைய ஆயுதங்களை கீழே போடுங்கள்!
வெளிறிய முகத்தோடு, வீரர்களை விலக்கிக் கொண்டு கிட்டை நோக்கி மெள்ள நடந்து வந்தார் காப்டன் நார்போக்-
நீ-டெக்ஸ் வில்லரின் மகன் கிட்தானே?
ஆமாம் காப்டன்-உங்களை இந்நிலையில் சந்திக்க நேரிட்டமைக்கு வருந்துகிறேன்-
வருத்தம் எனக்கும்தான்! சரணடைந்தால் என் வீரர்களின் கதி என்னவாகும் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?
பிடிபட்ட மற்ற வீரர்கள் இருக்கும் பள்ளத்தாக்கிற்கு கொண்டு செல்லப்படுவர். இந்த தேவையற்ற மடத்தனமான யுத்தம் முடியும் வரை அங்கே இருப்பார்கள்.
போதும்! வேறு எதுவும் எனக்குத் தெரிய வேண்டியதில்லை!


இந்தா-என் கத்தி!
நீங்களே வைத்திருங்கள்!
மரியாதைக்குரிய நபர் நீங்கள், அத்தோடு நடைமுறை நியாயம் தெரிந்த உங்களை ஒரு வீர புருஷனுக்குரிய கௌரவத்தோடு நடத்துவதுதான் நியாயம்-உங்களுடைய வீரர்கள் மட்டும் ஆயுதங்களை கீழே போடுங்கள் போதும்!
நன்றி! கர்னல் ஸ்டிவர்ட்?
உங்களுடைய அனுமதியோடு உரிய முறையில் அவருக்கு 'மரியாதை' நடத்தப் போகிறேன்.
அவரை நீ-
அப்படியெல்லாம் இல்லை-கவலை வேண்டாம்!
தண்ணீர்-ப்ளீஸ் தாகம்
இங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் தண்ணீரும் குதிரைகளுக்கு புல்லும் தாராளமாக உண்டு!
தண்ணீர்!
டைகர்! எல்லோரும் நிராயுதபாணிகள்தானு என்று சோதித்துவிட்டு சுனைக்கு வழி நடத்திச் செல்!
ஓ-!
இவர்தான் சமர்த்து கர்னலா?
என்ன ஆயிற்று? பயத்தில் உயிரை விட்டுவிட்டாரா என்ன?
இவருடைய முட்டாள்தனமான செயல்கள் மேலும் தொடராமலிருக்க நான்தான் அடித்து வீழ்த்தினேன்.



சாவின் பிடியிலிருந்து காப்பாற்ற வரும் ஆசாமியை சுடுவது வெறும் முட்டாள்தனம்தானு?
ஸாரீ-அரக்கத் தனமானது!
இரண்டு மணி நேரம் கழித்து-பாலோ பிண்ட்டோ சுனையருகே-
டுமீல்
?
யாரது-டெக்ஸின் தூதுவனு?
?
தூதுவனல்ல-வருவது டாடியேதான்!
சில நிமிடங் களுக்குப் பின்-
செமத்தியான வேட்டை போலிருக்கிறது!
ம்ம்-மோசமில்லே!
பிரச்னே ஏதும் இருந்ததா?
ஊஹூம்-இல்லவே இல்லே!
ஆனுல் உன் தலேயில் நீள மாக காயம் பட்டிருக்கிற தே? என்ன நடந்தது?
கர்னல்.ஸ்டுவர்டின் அன்புப் பரிசு இது!
சரியான குள்ளநரிப் பயல்,
நடந்ததை விரிவாக எடுத்துரைத் தான் டைகர்-
ஒகோ! அப்படியா விஷயம்?


எழுந்து நில்லடா-மடையா!
?
மறந்துவிடாதே-நான் ஒரு கர்னல்-அத்தோடு, நான் உன் கைதியாக இருந்தாலும் என் உரிமைகள்-ஆஹ்!
கும்!
உரிமை பற்றிப் பேச உனக்கு அருகதைஏதடா?
!
உன்னைப் போன்ற மடையன்களால் நீ அணிந்திருக்கும் அந்த இராணுவச் சீருடைக்கே இழிவு! நீ தலைக்கனம் பிடித்தவன் மட்டுமல்ல தரம் கெட்ட கோழையும் கூட!
பட்!
பிஸ்டலை வைத்துக்கொண்டு வெறியாட்டம் போட நினைக்கிற நீ-தைரியமிருந்தால் 'ஒற்றைக்கு ஒற்றை' என்னோடு மோத வாயேன்-
கர்னல்! தன் இனத்துக்கே துரோகம் செய்யும் ரௌடியோடு! சண்டையிட மாட்டான் இந்த கர்னல்
ஐயோ கர்னல் தன் வாயால் கெட்டார்! டெக்ஸ் கொல்லாமல் விடமாட்டார்!
இவனை தூக்கி நிறுத்துங்கள்!
இரு வீரர்கள் உத்தரவை உடனே நிறைவேற்றினர்-
சாவுக்கு பயந்தவனில்லை நான்!



சும்மா பெரிய ஹீரோ மதிரி நாடகம் ஆடாதே!
?
உன்னைப் போன்றவர்கள் ஒரு சுத்த வீரனைப் போல் மடியவோ, கௌரவ மான பிரஜையைப் போல் வாழவோ அனுமதிக்க கூடாது! எனவே, இங்கே தொடங்கி-
நாசமாகப் போகிறவனே-
இதை எல்லாம் எப்படி நீ சம்பாதித்தாயோ-தெரியவில்லை! ஆனால் இவற்றை அணியும் தகுதி உனக்கு இல்லை என்று உறுதியாக நம்புகிறேன்!
இவனை மொட்டையடித்து, ஆடைகளை களைந்து, பின்னர் இஷ்டத்திற்கு எங்கேயும் போகட்டும் என்று விட்டுவிடுங்கள்!
சண்டாளன்!
கொடுமை!
நடைபிணம் தான் இனி!
இரு தினங்களுக்குப் பின்-வின்கேட் கோட்டையில் இருந்து புறப்பட்டிருந்த படைப் பிரிவு சேதத்தை கோட்டமிட்டுக் கொண்டிருந்த போது-
இங்கேயும் ஒன்றுகூட மிச்சமில்லாமல் எரிந்து சாம்பலாகி கிடக்கிறது-
மோசம் போனோம்!
காப்டன்-அங்கே யாரோ வருகிறார்கள்!
யாரது? கர்னல் ஸ்டுவர்டின் தூதுவனாக இருக்கலாம்!
ம்ம்-அப்படித் தானிருக்கும்-
வடக்கே இருந்து வருகிறான்-எனவே-அடக் கடவுளே-குற்றுயிராக வருகிறான்!



காயமடைந்தவனாக தெரியவில்லை- ஆனால் அரை நிர்வாணமாக, சேண மில்லாத குதிரையில் வருகிறான்.
அட அநியாயமே!
ஒரிரு நிமிடங்களுக்குப் பின்-
த ண்-ணீர்!
அடக் கடவுளே! கர்னல் ஸ்டுவர்ட்!
த-ண்-
சீக்கிரம்- பிடியுங்கள் அவரை!
கோழி ரோஸ்ட் மாதிரி வெந்து போயிருக்கிறார்!
மொட்டைத் தலையோடு இந்த கொதிக்கும் வெய் யிலில்-இப்படி மோசமாக சவாரி வந்திருக்கிறவர் 'ஸ்ட்ரோக்' வராமல் தப்பி யது ஆச்சரியம்தான்!
பத்து நிமிடங்களுக்குப் பின்-
அந்த நாய்களை துரத்திச் சென்று பிடியுங்கள்- ட்ராண்ட் நீரூற்றுக்கு சற்றுத் தொலைவில் தான் இருக்கிறது அந்தக் கும்பல்!
?
பெரிய கும்பலோ?
சுமார் இருபது நவ ஜோக்கள்- அந்த சண்டாளன் வில்ல ரின் தலைமையின் கீழ்!
உங்களுடைய வீரர்கள்-கர்னல்? காப்டன் நார்போக்கின் வீரர்கள்? அவர்கள் உங்களோடு தொடர்பு கொண்டிருப்பார்கள் அல்லவா?
எதிர் கேள்வியா போடுகிறாய்?
நான் உங்களுடைய மேலதிகாரி- என் உத்தரவின்படி நடக்க கடமைப்பட்டவர்கள் நீங்கள்-


அந்த பச்சோந்திப் பயலை பிடித்து வாருங்கள்-இது என் ஆணை-ஆமாம்-என் ஆணை-
கஷ்ட காலம்!
மீண்டும் சுயநினை விழந்து விட்டார்-
கர்னலின் நிலைமை படுமோசம்!
வின்கேட் கோட்டைக்கு உடனே எடுத்துச் செல்வது நல்லது!
சார்ஜண்ட்! கர்னலுக்கு துணையாக நான்குபேர் செல்லட்டும்! மற்றவர்கள் ட்ராண்ட் நீரூற்று நோக்கி குதிரையில் விரைவோம்!
இரு தினங்களுக்குப் பின்-
சே! மொத்த இடமும் தீயில் கருகிக் கிடக்கிறது. ஒரு புல் பூண்டு கிடையாது-சொட்டுத் தண்ணீர் இல்லை!
உணவுப் பொருள் நிலைமை எப்படியிருக்கிறது?
இன்னும் ஒரே ஒரு நாளுக்குத்தான் வரும்!
ஊஹூம்-இன்று இரவுக்குள் உணவு, தண்ணீர் சேகரிக்க முடியாவிடில்-
அங்கே பார்!



நடுநிசித் தாக்குதல்!
யுத்த சமிக்ஞை!
நம்மை பார்த்திருப்பார்கள் இன்றிரவுக்குள் மோதல் நிச்சயம்!
அதுவரை நம் குதிரைகள் மயங்கி விழாதிருந்தால் ஆச்சரியம்தான்!
போருத வேளை!
படை நிற்கட்டும்!
குதிரைகளுக்கு கொஞ்சம் ஓய்வு தேவை!
நிலைமையை ஆராய்ந்து வர ஒற்றர்களை அனுப்பி வைப்போமா?
செல்லட்டும்-ஆனால் குன்று பகுதி யினுள் அதிகம் ஊடுருவ வேண்டாம்-ஒரு வீரனைக்கூட இழக்க எனக்கு இஷ்டமில்லை-
ஆல்ரைட்!
இதற்கிடையே-
நின்றுவிட்டார்கள்! மூன்று ஒற்றர்கள் கிளம்பி இத் திசையில் வருகின்றனர்-
நல்லது! அம்மூவரையும் திரும்பிச் செல்ல அனுமதிக்கலாகாது என்று டைகரிடம் சொல்!
ஆகட்டும்!



சுமார் ஒரு மணி நேரம் கழித்து-
நாம் விழிப்போடிருக்க வேண்டும்-நாம் கொஞ்சமும் எதிர்பாராத வகையில் எங்கிருந்தாவது திடீரென்று நம்மீது பாய்ந்துவிடுவார்கள் செவ்விந்திய குரங்குகள்!
நாம் குன்றுப் பகுதியினுள் ஆழமாக ஊடுருவிச் செல்லலாகாது என்று லெப்டினெண்ட் எச்சரித்தார்-
அந்தப் பாறை வரை ஏறிவிட்டு திரும்பி வருவோம்!
அந்த மேட்டுப் பகுதியிலிருந்து நோட்டம் விட்டால்-
?
ஆ ஆ!
ஏய்ய்-நீ-
யாயாஹாஹா!
யோவ்!
இரண்டு மணி நேரம் கழித்து-
இன்னமும் அவர்கள் திரும்பி வரவில்லையா?
இல்லே!
அப்போதே அவர்கள் திரும்பி வந்திருக்க வேண்டும் இல்லையா? ஏதோ விபரீதம்!
என் கருத்து என்னவென்றால்-


உன் கருத்தை கேட்க நான் தயாரில்லை- மூடு வாயை!
இன்னும் அரைமணி நேரத்திற்குள் அவர்கள் திரும்பி வந்து சேராவிட்டால்-
மூடு வாயை! எரிச்சலை கிளப்பாதே!
எல்லோரும்தான் நொந்து போயிருக்கிறோம் காப்டன்!
அதே சமயம்-
ஓ! சார்லியா! சார்ஜண்ட்டின் பதக்கங்களை உன்னிடமிருந்து அவர்கள் பறித்தெடுத்த சமாச்சாரம் எனக்குத் தெரியாது!
சாகப் போகிற வேளையில் பதக்கங்கள் அற்பமானவை!
சாவைப் பற்றி இப்போது என்ன பேச்சு? உயர் அதிகாரிகளின் முட்டாள்தனங்களுக்கு வீரர்கள் ஏன் விலை கொடுக்க வேண்டும் என்று கருதுபவன் நான்!
சும்மா கட்டுக்கதை வேண்டாம்! முழு படைப்பிரிவில் எஞ்சிய ஒரே ஆசாமியான கர்னல் ஸ்டூவர்ட்டைத்தான் நான் பார்த்தேனே-!
ஓ-அவரை நீ பார்த்தாயா என்ன?
அந்த நீசன் கழுகுகளுக்கு இரையாகாமல் தப்பிப் பிழைத்த விஷயம் சுவாரஸ்யமான சங்கதிதான், அவன் என்ன சொன்னான்?
உங்கள் இருப்பிடத்தை சொல்லிவிட்டு மயக்க மடைந்து விட்டார்-
என்னதான் நடந்தது என்று அவர் சொல்லவில்லையா? பரவாயில்லை நான் சொல்கிறேன்-இப்போது!
நடந்ததைவிரிவாகஎடுத்துரைத்தார்டெக்ஸ். முடிவில்-
ஸ்டூவர்டின் படைக்கு என்ன நேர்ந்தது என்று இப்போது புரிந்ததா உனக்கு! இன்னொன்றையும் தெரிந்து கொள்-நீங்கள் மூவர் மட்டுமல்ல கீழே சரிவில் உள்ள அத்தனை பேரும் மூன் பள்ளத்தாக்கை நோக்கி பயணமாகப் போகிறீர்கள்.


பெரிதாக மனக்கோட்டை கட்டாதீங்க, வில்லர்! நீங்கள் தந்திரக்காரராக இருக்கலாம். ஆனால் காப்டன் ரானல்டும் சளைத்தவரல்ல!
பொறுத்திருந்து பார்-சார்லி!
இதற்கிடையே-
ஒற்றர்கள் இன்னமும் தென்படவில்லையா?
இல்லை-இல்லை-
அப்படியானால்-அதற்கு ஒரே ஒரு விளக்கம் தான் உண்டு!
ஆமாம்-அவர்களை மீண்டும் நாம் பார்க்கவே முடியாது!
தந்திரக்கார நவஜோக்களை துரத்திச் செல்வதை நாம் கைவிட்டால் கர்னல் போல்டர் ஒத்துக்கொள்ள மாட்டார் என்று நீ நினைக்கிறாயா?
ம்ம்-!
ஆனால் கர்னல் ஸ்டுவர்டின் படைக்கு நேரிட்டகதியையும்; நம் இப்போதைய பரிதாப நிலையையும் கருத்தில் கொண்டு வயதில் மூத்த போல்டர் நாம் பின் வாங்குவதை விவேகமான செயல் என்று ஏற்றுக் கொள்ளக்கூடும்!
ம்ம்-!..
வீரர்கள் களைப்பினால் உருக்குலைத்து போயிருக்கிறார்கள். குதிரைகளும் அப்படித்தான்-இந்நிலையில் ஒரு மோதல் நிகழ்ந்தால் அது தற்கொலைக்கு ஒப்பானதாக இருக்கும்!
நான் தீர்மானித்திட்டேன்!
பின்னிரவு வரை நாம் இங்கே தங்கி ஓய்வெடுப்போம்-குதிரைகள் மீண்டும் நெடிய பயணத்திற்கு தகுதியுடையவையாகிவிடும்-இருள் பிரியுமுன் எழுந்து பயணத்தை துவங்குவோம்-வெளிச்சம் பரவும்போது நாம் இங்கிருந்து பல மைல் தொலைவில் போய்க்கொண்டிருப்போம்-
சரி-!
மரணப் பிடியிலிருந்து கிடைத்த விடுதலையை வீரர்கள் உற்சாகமாக வரவேற்கக் கூடும்!
உத்தரவை பிரகடனப்படுத்து!



வழியில் கொலராடோ நதி சொட்டுத் தண்ணீர்கூட கிடைக்காதாகையால் இருப்பில் உள்ள தண்ணீரை முறையாக பங்கீடு செய்ய வேண்டியது அவசியம்!
அங்கே போய்ச் சேர்வது நியாயம் தானு?
நிச்சயமாக சென்றடைவோம்! மனம் தளராதே லெப்டினெண்ட்! இன்னும் இரண்டே நாளில் நம் பிரச்னைகள் அத்தனையும் தீர்ந்து போய்விடும்!
உம்ம்-ஃ அப்படியே நம்புவோமாக!
ஆனல்-அதே வேளையில் வேருேரிடத்தில் டெக்ஸ் தன் செவ்விந்திய வீரர்களுக்கு பிறப்பித்துக் கொண்டிருந்த உத்தரவுகளை காப்டன் ரெனல்ட் கேட்க நேரிட்டிருந்தால் இவ்வளவு நம்பிக்கையோடு பேசியிருக்கவே மாட்டான்-
இன்னும் ஒரு மணி நேரத்தில் நன்ருக இருட்டியதும் நாம் பயணத்தை தொடங்குவோம். குதிரைகளை இங்கேயே விட்டுச் செல்வோம். கனமான ஆயுதங்கள் எதையும் எடுத்துச் செல்லவேண்டியதில்லை-கத்திகள் மட்டும் கைவசம் இருந்தால் போதுமானது.
மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன்-இரு தரப்பிலும் உயிரிழப்பு ஏற்படவே கூடாது-நீங்கள் ஓசைப்படாமல் மின்னல் வேகத்தில் செயல்பட்டால் சுலபமாக வெற்றி ஈட்டி விடலாம்-புரிந்ததா?
ஒவ்-!
ஒவ்-!
சரி, புறப்பட ஆயத்தமாகுங்கள் கைதிகளை பார்த்துக்கொள்ள உங்களில் யாரேனும் ஒருவர் மட்டுமே இங்கே இருந்தால் போதுமானது-
ஒவ்-!
ஒரு மணி நேரம் கழித்து-
காவலை பலப்படுத்த வேண்டுமா?
அவசியமில்லை! செவ்விந்தியர்கள் ஒரு போதும் இரவில் தாக்க மாட்டார்கள்!
குதிரைகளுக்கு மட்டும் காவலாக இரண்டு பேரை நிறுத்திஞல் போதும்!
ஆல்ரைட்!


இரண்டு மணி நேரம் கழித்து-
அதோ-குதிரைகள்! இரண்டு வீரர்கள் காவல் நிற்கிறார்கள்!
அடுத்த இரண்டாவது நிமிடம் அவர்கள் அங்கே நிற்கமாட்டார்கள்!
இரண்டு நிமிடம் கழித்து-
?
!
?
ஹே!
ம்-சீக்கிரம்!
யாஹீஈ!
செவ்விந்தியர்கள்!
சைத்தான்கள்!


அபாய அறிவிப்பு செய்!
அஹ்!
?
யாஹீஈஈ-
சுட்டுத் தள்ளுங்கள்!
ஐயோ- குதிரைகள்!
நம் குதிரைகள் அனைத்தும் கடத்திச் சென்றுவிட்டார்கள்!
நாம் தொலைந்தோம்!
யாஹீஈஈ-
யியி- யாயா-
பல நிமிடங்களுக்கு அங்கே துப்பாக்கி முழக்கம் விடாது எதிரொலித்துக் கொண்டிருந்தது-பீதியடைந்த வீரர்கள், கண்ணில்பட்ட எந்த ஒரு நிழலையும் விடாது மிரட்சியோடு குறி வைத்து சுட்டுக் கொண்டிருந்தார்கள், திடீரென்று ஒரு உத்தரவு கேட்டது,
சுடுவதை நிறுத்துங்கள்!
டுமீல்
டுமீல்
நம் குதிரைகளை கவர்ந்து செல்லவே வந்திருக்கிறார்கள்!
ஆமாம்- அப்படித்தான் தோன்றுகிறது!


'ரோல்கால்' எடுங்கள்! நாம் எத்தனை பேரை இழந்தோம் என்றறிய விரும்புகிறேன்!
இதோ-!
ரோல்கால் எடுத்த போது வெளிப்பட்ட உண்மை அவர்களை ரொம்பவும் குழப்பியது-
காயமடைந்தவர்கள் எவரும் இலர் காப்டன்-ஆனால் பத்து வீரர்களை காணோம்-பதினைந்து துப்பாக்கிகளும் காணவில்லை!
?
ஒரேயடியாக குழப்புகிறதே!
இன்னொரு உண்மையையும் நான் கண்டுபிடித்தேன்-
என்ன அது?
நவஜோக்கள் ஒரு முறை கூட சுடவில்லை! எல்லோரையும் கேட்டுவிட்டேன். இதைத்தான் உறுதிப் படுத்துகிறார்கள்!
நாம் சுதாரித்துக் கொண்டு உடனடியாக பதிலடி கொடுக்க முற்பட்டதால் ஓட்டம் பிடித்து விட்டார்களோ என்னவோ-
நான் அப்படி நினைக்கவில்லை-
அவர்கள் வந்திருப்பது நமக்கு தெரிய வந்த போது ஏற்கனவே காவலர்களை அப்புறப் படுத்திவிட்டு குதிரைகளையும் கொண்டு சென்று விட்டார்கள் எனவே அவர்கள் விரும்பியிருந்தால் நம்மை ஒருவர் பாக்கி யில்லாமல் கொன்றிருக்கலாம்!
அதே வேளையில்-ரேஞ்சர்களின் கமாண்ட் அலுவலகத்தில்-
என்ன இது-என்னால் நம்பவே முடியவில்லையே!
அதை நான் உறுதிப் படுத்தாமலா உன்னை தூக்கத்திலிருந்து உடனே எழுப்பி வரும்படி ஆளை அனுப்பி யிருப்பேன்!



அதிரடிச் செய்தி!
நம்ப முடியாத செய்தியைத் தாங்கி அத்தக்கூடிதம் வந்து சேர்ந்ததும் உடனே கோட்டையோடு தொடர்பு கொண்டு செய்தியை உறுதிபடுத்தக்கோரினேன், இதோ இருக்கிறது அவர்களிடமிருந்து தந்தியில் வந்த மறுமொழி!
?
கர்னல் மெர்ரிவல் ரேஞ்சர்கள் தலைமையகம் போனிக்ஸ்! முந்தைய செய்தியை ஊர்ஜிதப் படுத்துகிறேன். டெக்ஸ் வில்லரின் தலைமையில் நவஜோக்கள் புரட்சி செய்து வருகிறார்கள். டெபியன்ஸ் கோட்டையை அழித்து தரைமட்டமாக்கிவிட்டதோடு அவர்களை துரத்திச் சென்ற படையையும்சின்னாபின்னப்படுத்திட்டார்கள். ஹாப்மேன் பண்ணையும் தாக்கப்பட்டிருக்கிறது. அபாச்சே, விப்பிள், ராக்கோட்டைகளிலிருந்துபடைப்பிரிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன- திறமையான ஒற்றர்களை உடனே அனுப்பவும்.
கர்னல் வில்ஸன்.
என்றால் கொஞ்சமும் நம்ப முடியவில்லையே!
ஆனால் இதுதான் நிஜம்- கார்ஸன்!
உன் ஆத்ம நண்பன் வில்லர் தூக்கு மேடை செல்வதை நீ தவிர்க்க விரும்பினால் இந்த நிமிடமே நீ பயணத்தை தொடங்கு!
தனியாகவா?
ஆம்! பத்துப் பதினைந்து ஒற்றர்களை அனுப்புவதால் என்ன பயன் விளையப்போகிறது சொல்!
இங்கே அதிகாரத்தில் உள்ளவர்களில் செவ்விந்திய பிராந்தியத்தை தெளிவாக தெரிந்து வைத்திருக்கும் ஒரே நபர் நீதான்!
ஆம்-!
ஒவ்வொரு மூலை முடுக்கும் எனக்கு அத்துபடி!
வேறொரு அம்சத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்!


டெக்ஸ் வில்லர் உன் நண்பன்! அவன் உன் குரல்வளையை அறுக்க முற்படுமுன், பேச உனக்கு ஒரு வாய்ப்பை நிச்சயமாகக் கொடுப்பான்!
ம்ம்-
உன் வாதத்தை அவன் காது கொடுத்துக் கேட்டால் நிச்சயமாக தன் அடாத செயலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பான். மாருக வீரும் கிறுக்குத் தனமும் அவனை ஆட்டிப் படைத்தால்-
-என் குரல் வளையை அறுப்பான்!
கரெக்ட்! அதனால்தான் உன்னை அனுப்பத் தீர்மானித்தேன்- இந்த விவகாரத்தில் நிறையப் பேருடைய உயிரை பணயம் வைக்க நான் விரும்பவில்லை!
வாஸ்தவம்தான்! மோதல் என்று வந்துவிட்டால் நாங்கள் பத்து பேராக இருந்தாலும் ஒருவர் கூட உயிரோடு திரும்பப் போவதில்லைதான்!
என்னை நீ புரிந்து கொண்டதற்கு மகிழ்ச்சி!
உடனே புறப்படு! இந்த பித்துக்குளித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு உன் நட்பை பிரயோகித்து வில்லரை சரிக்கட்டு!
முயற்சிக்கிறேன்!
போய் வா- ஜாக்கிரதை!
உயிரோடு திரும்ப முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது!
சற்றைக்கெல்லாம் கார்ஸனின் பயணம் தொடங்கியது-
சே-இப்படியொரு நெருக்கடி விளையும் என்று நான் கனவில் கூட நினைத்ததில்லை,
இராணுவத்திற்கு எதிராக நவஜோக்களை டெக்ஸ் முடுக்கி விட்டிருப்பது ஏதோ ஒரு கெட்ட கனவு என்றே எண்ணத் தோன்றுகிறது!



இதற்கிடையே ஸாண்டர்ஸ் இரயில்வே ஸ்டேஷனில்-
ஏய் டிக்-எழுந்திரு! குதிரைகளின் குழம்பொலி கேட்கிறது-துப்பாக்கியை எடு-இந்த அகால வேளையில் ரயிலைப்பிடிக்க அல்லது தந்தி அனுப்ப எந்தப் பயலும்-வரப்போவதில்லை!
வருவது-யாராக இருக்கும்?
செவ்விந்தியர்கள்!
நீசர்கள்! என்னதான் நினைத்துக்-
நிறுத்து! சுடாதே!
அவர்களிடையே ஒரு வெள்ளையனும் இருக்கிறான்!
ஹே-யார்-ஸ்டேஷனில்?
நான் மார்ட்டின் ப்ளாயிட்-'கால்லப் டெஸ்பாட்ச்' சின் ஆசிரியர்! உடனடியாக ஒரு அவசர செய்தி அனுப்ப வேண்டும்!
அவனை நான் ஏற்கனவே அறிவேன்!
உள்ளே வா ப்ளாயிட்-ஆனால்-தனியாக வா! இது ஒரு முன்னெச்சரிக்கை வேண்டுகோள்!
ஓ-கே!
நாங்கள் இங்கே காத்திருக்கிறோம்!
அதையடுத்து-
துணைக்கு நவஜோக்களா-நம்பவே முடியவில்லையே!
நான் அவர்களுடைய கைதி, என்னை பிணையாக வைத்து சூழ்ச்சி நாடகம்போடுகிறார்கள் என்றெல்லாம் நினைத்து விட்டீர்களா?
அப்படித்தான் நினைத்தோம்!
தவறு! அந்த நால்வரும் என் பாதுகாப்புக்காக டெக்ஸிலுல் அனுப்பப் பட்டவர்கள்!



நிஜம்தானு நீ சொல்வது!
ஆம்!
இதே வேளையில் அங்கே டெக்ஸ் வேறொரு திட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டிருக்கிறார்! விபரமாக சொன்னால்தான் உங்களுக்கு புரியும்!
!
!
டெபியன்ஸ் கோட்டை அழிக்கப்பட்டு-அங்கிருந்த வீரர்கள் இப்போது நவ ஜோக்களின் வசத்தில். அத்தோடு வின்கேட் கோட்டையை சேர்ந்த ஒரு படைப்பிரிவுக்கும் அதே கதிதான்.
ஹாப் மூன் பண்ணை தீக்கரையாக்கப் பட்டு அங்கிருந்த கால்நடைகள் நவ-ஜோக்களின் புல்வெளிப் பிரதேசத் திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன-
பிரமிப்பூட்டு கிறது!
கேட்க நன்ருக இல்லையே!
டெபியன்ஸ் கோட்டை அழிந்து விட்ட தென்ருல் இப்பகுதி மொத்தமும் பாது காப்பிழந்த நிலையில் உள்ளது என்ரு கிறது. இந்நிலையில் நவஜோக்கள்-
பதருதீர்கள்-
தங்களுடைய பிராந்திய வரம்புக்கு அப் பால் உள்ள ஒரு புல் பூண்டு மீது கூட நவஜோக்கள் கை வைக்க மாடார்கள், டெக்ஸ் வில்லரின் உத்தரவு அப்படி!
ஆனல் சற்று முன் தானே சொன்னுய்-ஹாப் மூன் பண்ணை தீக்கிரையாக்கப் பட்டதாக!
ஹாப மூன் பண்ணை ஸாம் ஹோப்புக்குச் சொந்தமானது, செவ்விந்திய இளைஞர்கள் சிலரை அரக்கத்தனமாக சுட்டு கொன்ற இருவரில் ஹோப்பும் ஒருவன்.
ஆமாம்-வாஸ் தவம்தான்!
டெக்ஸ் வில்லர் சார்பில் இப்போது நான் ஓரிரு விஷயங்களை உங்களுக்கு சொல்லப் போகிறேன். நவஜோக்கள் இராணுவத் திற்கு எதிராக புரட்சியில் இறங்கியிருக் கிருர்களேயன்றி, சாதாரண பிரஜைகள் எவருக்கும், அவர்கள் வரம்பு மீறி செல் லாத வரை, எந்த ஒரு சிறு தீங்கும் இழைக்கமாட்டார்கள்.
TELEGRAPH OFFICE


இந்த விஷயத்தை அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள். நவஜோக்களை குறி வைத்து துப்பாக்கியை உயர்த்தும் தப்பை யாரும் செய்யக்கூடாது. மீறினால் இந்தப் பகுதி சுடுகாடாகிவிடும் என்று எச்சரியுங்கள்-
?
ஆல்ரைட்-இதில் உள்ள செய்தியை உடனே தந்தியில் அனுப்புங்கள்.
இவ்வளவையுமா? ஏகப்பட்ட பணம் ஆகுமே!
அதைப்பற்றி நீங்கள் அலட்டிக் கொள்ள வேண்டாம். நவஜோக்களின் தங்கம் நிறைய இருக்கிறது என்னிடம்!
!
டெக்ஸ் வில்லரிடம் பெட்டி பெட்டியாக தங்கம் இருக்கிறது. இதை இன்னமும் அவர் பயன்படுத்தவில்லை-அரசு மேலதிகாரிகள் தொடர்ந்து அசட்டையாகவே இருப்பார்களேயானால் தேவையான யுத்த தளவாடங்களை வாங்க டெக்ஸ் அந்த தங்கத்தை உபயோகிக்கக் கூடும்!
அப்படியொரு நெருக்கடி வரக்கூடாது என்று இறைவனை பிரார்த்தியுங்கள்! வந்துவிட்டால் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் நாசமடைவார்கள்.
!
சரி-நீ செய்தியை அனுப்பு!
"பீட்டே நோரிஸ்-வாஷிங்டன் போஸ்ட் ஆசிரியர். வடக்கு அரிஸோனா பிராந்தியத்தில் இராணுவத்தினருக்கும் நவஜோக்களுக்குமிடையே இடையே நடக்கும் கொரில்லா யுத்தம் பற்றிய முழு விபரங்களையும் உங்களுடைய பத்திரிக்கைகள் அனைத்திலும் உடனடியாக பிரசுரிக்கவும்-"
டக்! டக்! டக்!
விடிகாலையில் பீட்டே நோரிஸின் வீட்டில்-
ஸார்-அவசரச் செய்தி ஒன்று சற்று முன்னர் தான் கிடைத்தது-
?
அரிஸோனாவிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து தந்தியில் வந்தது.
அடேயப்பா-நாவல் மாதிரி அல்லவோ இருக்கிறது!


இவ்வளவு நீள தந்தியை அனுப்பிய பித்துக்குளி யார் என்று பார்ப்போம் முதலில்!
ஓவ்! மார்ட்டின் ப்ளாயிட்!
Martin Lloyd
ம்ம்- அப்படி என்ன செய்தி!
செய்தியை படித்த வாஷிங்டன் போஸ்ட் எடிட்டர் புயலென வெளியே ஓடலானார்-
ஸார்! ஷேவிங் பாதியில-
?
மிச்சத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம்! ஓர் அரசை கவிழ்க்கக்கூடிய; இராணுவ தலைமை அதிகாரிகளை விலாசமிழந்து போகச் செய்யக்கூடிய செய்தி இது!
ஹலோ! ரண்டால்! நான் நேரில் பேசுகிறேன்-அதிரடி செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது-உடனடியாக ஒரு விசேஷ பதிப்பு வெளியிட ஏற்பாடு செய்!
ப்ளாயிட்டின் சாதனை-முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் தலைப்புச் செய்தியாக வரவேண்டும்!
விசேஷ பதிப்பு எப்போது வெளி வர வேண்டும் ஸார்!-
மதியம்! விற்பனையாளர்களுக்கும் முன்கூட்டியே தகவல் கொடுத்து விடு!
சரி-ஸார்!
இன்னொரு விஷயம்! 'நியூயார்க் டைம்ஸ்' 'பால்டிமோர் எக்ஸ்பிரஸ்' 'கன்சர்ஸ் கொரியர்' 'ஸான்டா பே எக்ஸாமினர்' 'போனிக்ஸ் போஸ்ட்' பத்திரிகைகளோடு உடனே தொடர்பு கொண்டு பேசு! பிறகு இந்த செய்தியின் பிரதியை அவர்கள் அனைவருக்கும் அனுப்பிவை - பிரம்மாண்டமான அளவில் தடாலடி செய்தியாக இது பரபரப்பை ஏற்படுத்த வேண்டும்!



எதிர்கட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு நாளை காலை ஒன்பது மணிக்கு ஒரு பேட்டிக்கு ஏற்பாடு செய்-தேர்தல் இன்னும் இரண்டே மாதத்தில் நடக்கவிருப்பதால் எதிரிகள் மீது தாக்குதல் தொடுக்க கிடைக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் அவர் நழுவ விடமாட்டார்-
டைனமைட்டுக்கு வைக்கும் தீயாக இந்தச் செய்தி விளைவை ஏற்படுத்தக்கூடும்-
மிஸ் நோரா! எல்லா எடிட்டர்களையும் இங்கே வரவழை-ஐந்தே நிமிடத்தில்!
?
அதே சமயம் அங்கே காப்டன் ரேனால்டின் முகாமில்-
சொன்னேனில்லையா? நம்மை தாக்குவதற்கு விடியும்வரை காத்திருப்பார்கள் என்று?
ஐயோ-தெய்வமே! நம்மை சர்வ நாசம் செய்யப் போகிறார்கள்!
ஆனால்-நவஜோ படை வீரர்கள் ஐம்பது கஜ தொலைவில் சட்டென்று நின்றுவிட டெக்ஸ் மட்டும் தன்னந்தனியாக முன்னேறி வந்தார்-
யாரது-வருவது!
டெக்ஸ் வில்லர்-சுடாதே!
பேச்சு வார்த்தை நடத்த வரும் நபரை நீங்கள் சுடாதது மகிழ்ச்சியளிக்கிறது. உங்களுக்கு என் பாராட்டுக்கள்!
நாங்கள் இராணுவத்தினர்-காட்டு மிராண்டிகள் அல்ல!
ஆனால் வீரதீர புருஷர் கர்னல் ஸ்டீவர்டும் ஒரு இராணுவ அதிகாரி தானே? பின்னே ஏன் இதுபோல் பேச்சுவார்த்தை நடத்த வந்த என் மகனை நோக்கிச் சுட்டார் சொல்லுங்கள்!
!
?



ஓகோ- அதனால்தான் கர்னல் ஸ்டீவர்டின் படை மொத்தத்தையும் அழித்து நிர்மூலம் ஆக்கினாயா?
அழித்தேனா?
யார் சொன்னது அப்படி? அவர்மட்டும் கொடுமைப்படுத்தப்பட்டார்! அதுவும் எப்படி? பில்லியர்ட்ஸ் பந்து போல் மழுங்க மொட்டையடிக்கப்பட்டார்_என் பதை தவிர மற்ற கஷ்டம் எல்லாம் தற்காலிகமானவைதான்!
அவரை தவிர மற்றவர்கள் எல்லோரும் எங்கள் பகுதியில்சுதந்திரமாக உலவிக் கொண்டு பத்திரமாக இருக்கிறார்கள். இராணுவ நடவடிக்கையை விட்டொழிக்கும் தீர்மானம் உனக்கும் இருக்குமேயானால் நீங்கள் எல்லோருமே அங்கே போய் மற்றவர்களோடு சேர்ந்து கொள்ளலாம்!
வேறு வழியில்லை உனக்கு! சுற்றிலும் கண்ணெட்டிய மட்டும் பாலைவனம்-உங்களிடம் குதிரைகள் இல்லை-குடிக்க சொட்டுத் தண்ணீர் அகப்படாது.இங்கே. இங்நிலையில் சரணடைவதுதான் விவேகம், முரண்டு பண்ணினால் உன் வீரர்களை மரணத்தின் பாதையில் நீ இட்டுச் செல்கிறாய் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்!
அந்த மரணமும் படை வீரனுக்குரிய கௌரவமான மரணமாக இராது-நவஜோக்கள் ஒருதோட்டாவைக்கூட செலவழிக்க தேவையிராது.மரணம்பயங்கரரூபத்தில் வந்து உங்களை அரவணைக்கும்-ஆம்-தாகம் தாளாமல் கொஞ்சம் கொஞ்சமாக சித்திரவதைப் பட்டு மரணத்தை நீங்கள் சந்திப்பீர்கள்!
சிந்தித்து ஒரு நல்ல முடிவுககு வர பதினைந்து நிமிட அவகாசம் தருகிறேன், அதன்பிறகு-
?
பொன்னான பதினைந்து நிமிடங்களை வீணடிக்க விரும்பவில்லை நான்-வில்லர்!
இதோ-என் பதில்!
டக்
குட்! சரியான முடிவு இது! இதற்காக நீ ஒரு போதும் வருந்த வேண்டி வராது!
நன்றி!


சமாதானப் புறா!
இதற்கிடையே, வாஷிங்டனில்-மதியத்திற்கு சற்று முன்னதாக-
விசேஷ பதிப்பு!
அரிஸோனாவில் யுத்தம். நவஜோக்கள் கோட்டையை அழித்தனர்! விசேஷ பதிப்பு!
இதென்ன புது விவகாரம்?
விசேஷ பதிப்பு நவஜோக்களின் அதிரடி புரட்சி!
பாதுகாப்புத்துறை அலுவலகம்-ஒன்றில்-
அப்புறம்?
இதோ-நீங்கள் படித்துப் பாருங்கள் ஜெனரல்!
நவஜோக்களின் புரட்சி-கவர்னர் பிளிஸ்டரின் தரம்கெட்ட நடவடிக்கை-
திடீர் இடியாக அல்லவோ இருக்கிறது!
நவஜோக்களின் புரட்சி!
டெபியன்ஸ் கோட்டை தரைமட்ட மாகியது!
டெக்ஸின் தலைமையின் கீழ்!
ஆத்திரத்தோடு, மனக் குமுறலோடும் வேகமாக செய்தி முழுவதையும் படித்து முடித்த ஜெனரல் பின்னர் அந்த அதிகாரியோடு பேசலானார்.
கில்பர்ட்-செவ்விந்தியர் நலத் துறையினரோடு தொடர்பு கொண்டு, நான் அவர்களை சந்திக்க ஏற்பாடு செய்!
உத்தரவு ஸார்!
ஜெனரல்கள் மார்ட்டைமர், ஷெரிடன் இருவரையும் உடனே இங்கே வரச் சொல்-மிக அவசரம்!
யெஸ்-ஸார்!


அதே சமயம் வின்கேட் கோட்டையில்-
என்னோடு ஒரு படைப்பிரிவை அனுப்புங்கள் ஸார்-சாதித்துகாட்டுகிறேன்!
முடியாது-ஸ்டுவர்ட்
கோட்டையின் பாதுகாப்புக்கு கேடு விளையாமல் நான் ஒதுக்கமுடிந்தபடைப் பிரிவை ஏற்கனவே காப்டன்ரெனல்டின் தலைமையின் கீழ் அனுப்பி விட்டேன்-
நவஜோக்கள் இங்கே வந்துவிடுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
வாய்ப்பில்லை தான்! ஆனாலும் முன் எச்சரிக்கை அவசியம் என்று படுகிறது!
டெபியன்ஸ் கோட்டைக்கு நேரிட்ட கதி இந்தக் கோட்டைக்கும் ஏற்படுமே யானால் அத்தோடு நான் தொலைந்தேன்!
உங்களுடைய எதிர் காலத்தைப் பற்றி கருத்தில்கொள்ள இதுவா நேரம்?
அங்கேதான் நீ தவறு செய்கிறாய்!
இல்லை-இல்லவே இல்லை
என் கீழ் இருந்தவர்கள் ஒரு உதவாக்கரை கும்பல்-அது என் துரதிர்ஷ்டம். புத்திசாலி வீரர்களை என்னோடு அனுப்புங்கள்-அந்தநவஜோக்களுக்கு ஒரு பாடம் புகட்டிவிட்டு வருகிறேன்!
சற்று அமைதியாக இரு ஸ்டுவர்ட்
உன் போதாத வேளை! உன் மனோநிலை எனக்குப் புரிகிறது- ஆனால் இப்போது நீ கொதித்து எழுவதால் எந்த் பயனும் விளையப் போவதில்லை-
நான் என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்கள்?
பொறுமையாக காத்திருக்க வேண்டும் என்று-
டக் டக்
உள்ளே வரலாமா?



என்ன விஷயம்-லெப்டினென்ட்?
வாஷிங்டனிலிருந்து அவசர செய்தி!
ம்ம்- உன் முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறது வந்திருக்கிற செய்தி! நல்லதில்லே என்று-சரிதானு?
சரிதான்-கர்னல் ஸார்!
வின்கேட் கோட்டை கமாண்டிங் ஆபீஸருக்கு 'இரகசியம்'
நவஜோக்கள் விவகாரம் பற்றி உடனடியாக விவரமான அறிக்கை அனுப்பவும்-எல்லா இராணுவ நடவடிக்கைகளேயும் உடனே நிறுத்தவும், நவஜோக்கள் சார்பில் பத்திரிக்கைகள் விரிவாக செய்திகளே வெளியிட்டிருக்கின்றன-விவகாரமாக எதுவும் நடந்திடலாகாது-கார்ரணமான நபர்களே இராணுவ விசாரணை குழு விரைவில் அழைத்து விசாரிக்கும்-
ஜெனரல் பாஸ்வெல்.
என்ன ஸார் சேதி?
ஸாரி ஸ்குவர்ட் ஜெனரல் பாஸ்வெல்லிடமிருந்து இரகசிய உத்தரவுகள்!
ஆனல் உனக்கு நான் ஒரு உருப்படியான ஆலோசனே கூற விழைகிறேன்-செல்வாக்குள்ள நண்பர்கள் யாரேனும் உனக்கு வாஷிங்டனில் உண்டு என்றல் நொடிப் பொழுதையும் வீணுக்காமல் உடனே போய் அவர்களேப் பார்-
என்ன-என்ன ஸார் சொல்கிறீர்கள்?
உனக்கு இன்னுமா புரியவில்லே! நவஜோக்கள் விவகாரம் பற்றி இராணுவவிசாரணே நடக்கப் போகிறது. சம்பந்தப்பட்டவர்களே கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்!
இராணுவ விசாரணையா?
வெளியில் அனுப்பப்பட்ட படைப்பிரிவுகள் அனைத்தும் திரும்ப வேண்டும் என்று உடனே அபாச்சே, விப்பிள், ராக் கோட்டை கமாண்டிங் ஆபீஸர்களுக்கு அவசரச் செய்தி அனுப்பு லெப்டினென்ட்!
FORT WINGATE
இரண்டு தினங்களுக்குப் பின், ட்ராண்ட் நீரூற்றுக்கு அருகாமையில்-
சமாதான சமிக்ஞையை காட்டினர் கிட் கார்ஸன் அதைத் தொடர்ந்து-


அதோ-! அட-என்னடா இன்னமும் கண்ணில் படவில்லையே என்று திகைத்துக் கொண்டிருந்தேன்!
ஓ-வெள்ளி
வணக்கங்கள்! "இரவுக் கழுகு"! எங்கே இருக்கிறார்!
மூன் பள்ளத்தாக்கில்! அவர் இருக்குமிடம் செல்ல நீங்கள் விரும்பினால் துணைக்கு இரு வீரர்களை அனுப்பி வைக்கிறேன்.
நன்றி!
அதே நாளில்-
அந்த இராணுவ வீரர்களுக்கு இங்கே என்ன வேலை?
இந்த வீதத்தில் போனால் விரைவிலேயே இராணுவத்தில் பாதி டெக்ஸ் வசமாகிவிடும்!
ஹே! அங்கே பார் கார்ஸன் வருகிறார்!
ஓவ்!
ஹலோ - மின்னல் வீரரே-
ஹே-குட்டிச் சாத்தான்! டெக்ஸ் எங்கே!
உள்ளே இருக்கிறார்! யுத்த ஆலோசனை கூட்டம் நடக்கிறது!
?



ஓ - இதுதான் யுத்த ஆலோசனைக் கூட்டமா?
அடடே-நீயா?
அந்தச் சண்டாளன் கர்னல் மெர்ரிவல் ஏதோ கொள்ளை போகிறது என்று நல்ல தூக்கத்திலிருந்து என்னை எழுப்பி, ஏறுடா குதிரையிலே-போடா என்று
துரத்தியடித்தார். இரண்டு தினங்கள் எலும்பெல்லாம் நோவெடுக்க, ஓய்வே இல்லாமல் லொங்கு லொங்கு என்று ஓடிவந்து இங்கே பார்த்தால்-வீரர்கள் உல்லாசமாக சுற்றியலைந்து கொண்டிருக்கிருர்கள்-
-நீயானுல் ஜாலியாக சீட்டு ஆடிக் கொண்டிருக்கிருய்!
அமைதியாக உட்கார்-கார்ஸன்!
இவர்கள் என் யுத்தக் கைதிகள்-காப்டன் ராஸ்வெல்-காப்டன் நார்போக்-காப்டன் ரெனல்ட்!
சந்தோஷம்!
உன்னை சந்திப்பதில் மகிழ்ச்சி-கார்ஸன்! நீயும் யுத்தக் கைதி தான்-இல்லையா?
இல்லை! செய்தி கொண்டு வந்திருக்கும் தூதுவன்-அவ்வளவுதான்.
இங்கே உள்ள நடப்பை பார்த்தால் கிழவன் மெர்ரிவலின் கிறுக்குத் தனமான
போதும்-பிதற்ருதே!
கர்னல் மெர்ரிவல் உன்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிருர் என்ருல் நெருக்கடி தீவிரமடைந்திருக்க வேண்டும்-உட்கார்ந்து விபரமாகக் கூறு-


சொல்ல என்ன இருக்கிறது? டெபியன்ஸ் கோட்டை விவகாரம் இராணுவ மேலதிகாரிகளை நிமிர்ந்து உட்கார வைத்திருக்கிறது-ஏறத்தாழ பாதி இராணுவம் இப்போது இங்கே வந்து கொண்டிருக்கிறது.
உனக்கு மறை கழன்றுவிட்டிருப்பதாக நினைக்கிறார் மெர்ரிவல்-காலம் கடந்துவிடுமுன் வம்பு விவகாரத்திற்கு நீ முற்றுப் புள்ளி வைக்குமாறு உனக்கு யோசனை கூறி வலியுறுத்த என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்!
காலம் கடந்து விடுமுன்? யாருக்கு?
உனக்குத்தான்! உன்னை-எதிர் பார்த்து அங்கே தூக்கு மேடை காத்திருக்கிறது-தெரியுமா உனக்கு?
நோ! யார் இதை உனக்கு சொன்னார்கள்?
மெர்ரிவல்! அவர் இன்னும் சொன்னார்-
மேலே நீ எதுவும் கூற வேண்டாம்! தூக்கு மேடை அது இது என்று எனக்கு பூச்சாண்டிகாட்ட மெர்ரிவில் நினைத்தார் என்றால் அது சுத்த பைத்தியக்காரத்தனம்!
நிஜத்தைக் கூறு-கார்ஸன்! செவ்விந்திய பிராந்தியத்தை நன்றாக அறிந்தவன் நீ, இராணுவத்தை கட்டுக்குள் வைக்கவேண்டிய அவசியத்தையும் நீ அறிவாய்! என்னை பிடிப்பது அவ்வளவு சுலபமா?
வடக்கே அங்கங்கேசிலகணவாய்களோடு அரணாக நிற்கிறது நீண்ட மலைத் தொடர்-சில நூறு வீரர்கள் காத்து நின்றால் போதும் கணவாய்களின் வழியே இராணுவம் நுழையவே முடியாது! மேற்கே க்ராண்ட் கன்யான்-கடக்க முடியாத பாலைப்பிரதேசம்! கிழக்கே எண்பது மைல் தொலைவுக்கு தண்ணீரோ, புல்லோ இல்லாத பொட்டல்-
தெற்கிலிருந்து மட்டுமே இராணுவம் வர வாய்ப்புண்டு-ஆனால் வரவேற்பு ரொம்ப மாறுதலாக இருக்கும் நீ அறியாததல்ல!
வாஸ்தவம்தான்!
இராணுவ மேல் மட்டத்தினரின் போக்கு பித்துக்குளித்தனமானது என்று எனக்குத் தெரியாது என்றா நீ நினைக்கிறாய்? இருந்தாலும் இந்த நெருக்கடிக்கு நீ எப்படியாவது முடிவு க... ஒரு வழி
ஒரு வழி இருக்கிறது!


வழி இதுதான்:- மண்டைக்கனம்பிடித்த கவர்னர் பிளிஸ்டர்என்னதான் நடந்தது என்று கண்டறிந்து நீதி வழங்க ஒரு விசாரணைக் குழுவை உடனடியாக நியமிக்க வேண்டும். குழுவின் தீர்ப்புக்காக காத்திராமல் ஹோப்பையும் பார்லோவையும் இப்போதே சிறையினுள் தள்ள வேண்டும்!
இது நிறைவேற்றப்படுமேயானால், கைதிகளை உடனே விடுவிப்பதோடு, வம்பு விவகாரத்தை இத்தோடு நிறுத்திக்கொள்வேன்!
நடக்காது! கவர்னர் ஒரு போதும் இதற்குச் சம்மதிக்க மாட்டார்!
அவருடைய பதவி பறி போய்விடும் அபாயமுண்டு! வாக்காளர்கள்-
ஆமாம்! நெறிகெட்ட அரசியல் பிரமுகர்களில் ஒருவர் பிளிஸ்டர் என்பதை மறந்து விட்டேன்!
இப்படியே வள வள என்று பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை! உன் குதிரை போதிய ஓய்வெடுத்துக் கொண்டதும், செவ்விந்திய பிராந்திய எல்லை வரை உன்னோடு வர துணைக்கு ஆள் அனுப்புகிறேன்-உன் கீர்த்தி மிக்க கர்னலிடம் போய்ச் சேர்!
இங்கே நீ பார்த்தவற்றை எல்லாம் அவரிடம் கூறு. அத்தோடு, படை வீரர்கள் இனியும் வம்புக்கு வந்தால் 'சுடவேண்டாம்' என்று நான் என் வீரர்களுக்கு இட்டிருக்கும் தடையை ரத்து செய்து விடுவேன் என்பதையும் சொல்!
அதே சமயம்-ஸாண்டா:பேயிலுள்ள கவர்னரின் அலுவலகத்தில்-
நாசமாகப் போக-எல்லா பத்திரிக்கைகளும் ஒட்டு மொத்தமாக எனக்கு எதிராக எழுதியுள்ளன-என்னை நாசம் பண்ண எதிரிகள் செய்யும் சதிவேலை இது!
ஸார்-உள்ளே வரலாமா?
நீ என்ன புதிதாக கொண்டு வந்திருக்கிறாய்-சொல்லித் தொலை!
தலைநகரிலிருந்து ஓர் அவசர செய்தி-ஸார்!
செய்தியை வாங்கி வேகமாக பார்வையை ஓட்டினார் கவர்னர்-
கவர்னர் பிளிஸ்டருக்கு—
அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று அவசரமாகக் கூடி, விவாதித்து, உள்துறை அமைச்சகத்தின் கருத்தையும் கணக்கில் கொண்டுஎடுத்த தீர்மானத்தின் படி, உடனடியாக ஒரு நீதி விசாரணை குழுவை நியமித்து, நவஜோ இளைஞர்கள் சுடப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தி பிரச்னைக்கு ஒரு நல்ல, நியாயமான தீர்வு காணுமாறு உமக்கு உத்தரவிடப்படுகிறது-



கொடுமை! இதில் கையெழுத்திட்டிருக்கிறவன் உள்துறை அமைச்சகத்திலிருக்கும் உதவி செயலாளர் ப்ரெடெரிக் நார்ட்டன்-என் அருமை நண்பன்!
வழக்கமான கதைதானே ஸார்!
எவராவது சிக்கலில் மாட்டிக்கொண்டு தவித்தால் அவருடைய நண்பர்களும் சேர்ந்து காலை வாருவது என்பது சகஜமாகி விட்டது ஸார்-அரசியலில்!
சரி-நானும் அதே காரியத்தை செய்கிறேன்!
அந்த இரு எருமைகளையும்காப்பாற்ற நான் துணை போனால் என் பதவி பறிபோவது நிச்சயம்!
ஹோப்பையும, பார்லோவையும் குறிப்பிடுகிறீர்களா?
வேறு யார்? கால்லப் நகர ஷெரீப்புக்கு நான் அனுப்பும் அவசர தந்தி இது-கொண்டு போ-மில்லர்!
விவேகமான காரியம் ஸார்!
அதே வேளையில் மார்ட்டின் ப்ளாயிட்கால்லப்நகரினுள் பிரவேசித்தான். தன் கட்டுரை பொதுமக்களிடையே எப்படியொரு கருத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை கண்டறியும் நோக்கோடு ஷெரீப்பை சந்திக்க போய்க் கொண்டிருந்தான். அப்போது-
அந்தக் கட்டுரை பொதுமக்களிடையே தூண்டிவிட்டிருக்கும் சிந்தனை எத்தகைய விளைவை ஏற்படுத்துமோ? மரியாதையாக நாம் எங்கேயாவது ஓடிப்போய் விடுவதுதான் உத்தமம்!
?
நீ-பயப்படுவதில் அர்த்தமேயில்லை!
கவர்னர் நம்முடைய நண்பர்-நம்மை ஒரு போதும் கைவிட்டு விட மாட்டார்!
இருக்கலாம்!
ஆனால் பிரச்னை ஓயும் வரை குபேரோ சுரங்கப் பகுதிக்கு சென்றுவிட தீர்மானித்திருக்கிறேன்-
சண்டாளன்! ஸாம் அங்கே பார்-போகிறது யார் என்று!



இறுதித் தவறு!
நம்மைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் எழுதிய அயோக்கியன்!
விடு அவனை-நான் பார்த்துக் கொள்கிறேன்!
டுமீல்
அவன்களுக்கு புத்தி பேதலித்து விட்டது போலும்! ஓட்டம் பிடிடா-ராஜா!
டுமீல்
டுமீல்
டுமீல்
ஆஆ-!
டுமீல்
டுமீல்
?!
அச்சச்சோ!
பதறாதே! யாரும் கவனிக்கவில்லை!



கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாக என்னோடு வா!
?
ஹே-பில்! யார் சுட்டது?
எனக்கு தெரியாது-பார்லோ!
உண்மையை சொல்வதானால்-உங்களுடைய அறையிலிருந்துதான் தோட்டா முழக்கம் வந்ததாக முதலில் நான் நினைத்தேன்!
தப்பான யூகம்!
தெரிவிலிருந்து வந்தது தோட்டா முழக்கம்! யாரும் கேட்டால் அப்படித்தான் நீ சொல்ல வேண்டும்! இந்தா-
ச-சரி-மிஸ்டர் பார்லோ!
தோட்டா முழக்கம்-தெருவில் சந்து முனையிலிருந்து கேட்டது-சரிதானா?
குட்!
மறுநிமிடம் ஹோப்பும், பார்லோவும் பிரதான தெருவில் இருந்தார்கள்-
என்ன நடந்தது?
யாரோ மார்ட்டின் ப்ளாயிடை சுட்டு விட்டார்கள்!
டாக்டரை கூப்பிடுங்கள்!
ஊஹூம் பிரயோஜனமில்லே! உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது!
செத்து விட்டானா?
இன்னும் இல்லே! ஆனால் பிழைப்பது அரிது!



ம்ம் - ஒதுங்கி வழி விடுங்கள்!
அடக் கடவுளே-ப்ளாயிட்! யார் இதை செய்தது?
எங்களுக்குத் தெரியாது-ஷெரீப்!
அதெப்படி? யாருமே, எதையுமே பார்க்கவில்லையா?
இல்லை ஸார்! ப்ளாயிட் தன் குதிரையில் தெரு முனையில் வருவதைக் கண்டோம்.
திடீரென்று தோட்டா முழக்கம் இரண்டு, மூன்று முறை கேட்டது-அதைத் தொடர்ந்து ப்ளாயிட் சரிந்து கீழே விழுந்தார். டெட்டும்நானும் அருகில்தான் இருந்தோம்
சந்து முனையிலிருந்து தோட்டா முழக்கம் வந்தது போலிருந்தது-
தொலைகிறது! இவனை தூக்கிச் செல்ல கொஞ்சம் ஒத்தாசை செய்யுங்கள்!
இனி?
நீ உன் இஷ்டப்படி செய்! ஆனல் நான் இனியும் இங்கே நிற்கப்போவதில்லை!
பயலை பழிவாங்கி விட்டோம்-சரிதான்! ஆனல் இது எவ்வகையான விளைவை தோற்றுவிக்குமோ? எல்லாம் ஓய்ந்து சகஜ நிலை திரும்பும் வரை வேறு எங்கேயாவது-
நானும் உன்னோடு வந்துவிடுகிறேன்!
பத்து நிமிடங்களுக்குப் பின்-
டாக்டர்! பிழைத்து விடுவேனா?
மயிரிழை அளவு வாய்ப்புத்தான்!
ப்ளாயிட் மாதிரி ஒரு கண்ணிய மானவனுக்கா இப்படியொரு துர் மரணம்?
கனவான், கயவன் என்றெல்லாம் மரணம் பாகுபடுத்திப் பார்ப்பதில்லையே-ஷெரீப்!


இதற்கிடையே, ஷெரீப்பின் அலுவலகத்தில்-
ஹோப்பையும், பார்லோவையும் உடன் கைதுசெய்ய கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார்!
தந்தி ஆபரேட்டர் பதைபதைத்தது ஏனென்று இப்போது புரிகிறது!
வா · உடனே போய் ஷெரீப்பிடம் தெரிவிப்போம்!
கிளம்பு!
அதே வேளையில், மனக் கசப்போடும், துயரோடும் கால்லப் நோக்கி வந்து கொண்டிருந்தார் கிட் கார்ஸன்-
சனியன் பிடித்த வேலை!
புரட்சியை தூண்டிவிட்ட சம்பவத்தைப் பற்றிய சரியானவிபரத்தை இப்போது நான் தெரிந்துகொண்டேன். டெக்ஸின் போக்கு தவறு என்று சொல்லமாட்டேன். ஆனால் இராணுவத்தை முறியடிக்க முடியும் என்று எப்படி அவன் நம்புகிறானோ விளங்கவில்லை!
இராணுவத்தின்பக்கம்கணிசமான இழப்பு ஏற்படலாம்! ஆனால் இறுதி வெற்றியை ஈட்ட டெக்ஸுக்கு வாய்ப்பிருக்காது!
இந்த படு மோசமான சிக்கலை தீர்க்க நான் ஒரு வழி காண வேண்டும். கால்லப் சென்றடைந்ததும் ஜெனரல் ஷெரிடனுக்கு ஒரு தந்திகொடுத்துப் பார்ப்போமே?
ஷெரிடன் ஒரு நல்ல நண்பர் என்பதோடு, மதியூகியும்கூட! இந்தகொரில்லா யுத்தத்துக்கு முடிவுகாண அவரை நான் திடமாக நம்பலாம்!
சூரியன் அஸ்தமித்த ஒரு சில நிமிடங்களுக்குப் பின் கால்லப் வந்தடைந்த கார்ஸன் சாலையில் ஜனங்கள் அங்கங்கே கூட்டம் கூட்டமாக நிற்பதைக் கண்டு அதிர்ந்தார்-
?



என்ன வகையான அசம்பாவிதமோ? எல்லோரிடமும் ஒரு விதமான இறுக் கம் தென்படுகிறது!
ஹே! யாரது- கிட் கார்ஸனா- வருவது?
?
வா-கார்ஸன்! உன் னைப் பார்த்து நெடு நாளாகி விட்டது!
சௌக்கியமா ஷெரீப்!
வா-ஏதாவது பரு கிக் கொண்டே பேசலாம்!
என்ன கலாட்டா? ஏன் ஜனங்கள் கூட்டமாக நிற்கி றார்கள்?
லேட்டஸ்ட் நியூஸை நீ கேள்விப்பட வில்லையா என்ன? நவஜோ இளை ஞர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்த கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார்!
?
அதற்கு ஒரு தொடக்கமாக, செவ்விந்தி யர்களின் இப்போதைய புரட்சிக்கு மூல காரணமான ஹோப்பையும், பார்லோ வையும் உடனடியாக கைது செய்யவும் உத்தரவிட்டிருக்கிறார்!
அப்படியா சமாச்சாரம்!
நான் வேறு மாதிரியான-
ஹே-! நவஜோ புரட்சி பற்றி உனக்கு தெரியாது என்று சொல்லி விடுவாயா என்ன?
இல்லை! ஆனால் அந்தப் பிரச்னைக்கு தீர்வு இங்கே கிடைக்கும் என்று நான் கனவி லும் நினைத்ததில்லை!
வா - உள்ளே போய் விபரமாக பேசுவோம்!


பத்து நிமிடங்களுக்குப் பின்-
இதில் ஒரே ஒரு சிக்கல் என்னவென்றால் ஹோப்பும், பார்லோவும் திடீரென்று மாயமாக மறைந்துவிட்டது தான்!
அது ஒன்றும் பெரிய சிக்கலே அல்ல!
ஷெரீப்-ஷெரீப்!
என்ன விஷயம்-டாம்?
ப்ளாயிடுக்கு நினைவு திரும்பி விட்டது-உங்களோடு பேச வேண்டுமாம்!
குட்-! கார்ஸன்-நீயும் வா என்னோடு!
ப்ளாயிட்-பத்திரிக்கை நிருபரா? வில்லரோடு சேர்ந்து-
அவனேதான்! அவன் இன்று நகருக்குள் நுழைந்தபோது யாரோ சுட்டு விட்டார்கள்!
பத்து நிமிடங்களுக்குப் பின்-
வாருங்கள் ஷெரீப்! ப்ளாயிட் உங்களோடு பேச வேண்டுமாம் ஜுரம் அதிகமாக இருக்கிறது! சுருக்கமாக பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்!
சரி-டாக்டர்!
பிழைத்துக் கொள்வானா?
நம்பிக்கை இருக்கிறது! மீண்டும் சொல்கிறேன் அவனை களைப்படையச் செய்யாதீர்கள்!
உள்ளே போனதும் ப்ளாயிடை நோக்கிக் குனிந்தார் ஷெரீப்-
என்னோடு பேச வேண்டும் என்றாயாமே?
ஆமாம்! என்னை சுட்டது-ஹோப்பும், பார்லோவும்!
குபேரோ சுரங்கப் பகுதிக்கு ஓடிவிடப் போவதாக அவர்கள் பேசிக் கொண்டது காதில் விழுந்தது-
சாம் ஹோப்புக்கு சொந்தமானது அந்தச் சுரங்கம்!



டெக்ஸுக்கு தகவல் கொடுங்கள்- அத்தோடு!
உடனே செய்கிறேன் ப்ளாயிட்!
'பத்திரிக்கை செய்திகள் எவ்வளவு பரபரப்பை ஏற்படுத்தி விட்டன தெரியுமா? விசாரணை கமிஷன் அமைக்க உத்தரவாகியிருக்கிறது, அதுமட்டுமல்ல ஹோப்பையும், பார்லோவையும் உடனே கைது செய்யவும் கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார்!
ஆண்டவனுக்கு நன்றி! உடனே-டெக்ஸுக்கு தெரிவியுங்கள்-
டாக்டர் - நான் என்ன நினைக்-
போதும்! தயவு செய்து வெளியே போங்கள்-ப்ளீஸ்!
ஆக, மற்ற குற்றச்சாட்டுக்களோடு ப்ளாயிடை சுட்டுக்கொல்ல முயன்ற குற்றமும் ஹோப், பார்லோ மீது விழுந்திருக்கிறது இப்போது!
சிறு ஆலோசனை ஒன்று சொல்லட்டுமா!
அந்த இரண்டு கயவர்களையும் தேடிப் பிடிக்கும்பொறுப்பைடெக்ஸிடம்விட்டு விடுங்கள். அதற்காக அவன் ஓராயிரம் நன்றி சொல்வான் உங்களுக்கு! அப்படியே, எனக்கும் இரண்டுநல்லகுதிரைகளை ஏற்பாடு செய்து கொடுத்தீர்கள் என்றால் அந்த உதவியை என்றென்றும் மறக்க மாட்டேன்!
ஏன்-டெக்ஸ் இருக்குமிடம் போகவா?
ஆம்-முடிந்தவரை காலதாமதமின்றி!
அரை மணி நேரம் கழித்து கார்ஸன் கால்லப்பை விட்டு புறப்பட்டார்-


மறுநாள்-மாலைப் பொழுதின் தொடக்கத்தில் - செல்லே கணவாயின் மறு எல்லையை சென்றடைந்த கார்ஸன் புகை சமிக்ஞை அனுப்ப முற்பட்டார்-
குதிரைகள் களைத்து விட்டன-டெக்ஸிடம் போய்ச் சேர இன்னும் குறைந்தது ,பன்னிரண்டு மணி நேரம் பிடிக்கும்!
அதோ பார்!
?
இரவுக் கழுகுக்கு செய்தி: அரசாங்கத்தினர் சமாதானத்தை நாடுகின்றனர். நவஜோ இளைஞர்களை பலி கொண்ட கயவர்கள் தண்டிக்கப்படுவார்கள்
ப்ளாயிட் படுகாயமடைந்துள்ளான். 'இரவுக் கழுகு' உடனடியாக கால்லப் வந்து சேரவேண்டும்.
ஓவ்-! இந்தச் செய்தியை உடனே இரவுக்கழுகுக்கு அனுப்ப வேண்டும்!
அடுத்தடுத்து ஒவ்வொரு அவுட் போஸ்ட்டாக கார்ஸனின் செய்தி அஞ்சல் செய்யப்பட்டு டெக்ஸை சென்றடைந்தது. நொடிப் பொழுதையும் வீணாக்காமல் மளமளவென்று தேவையான உத்தரவுகளை பிறப்பித்தார் டெக்ஸ்-
டைகர்! அவரவர் படைப் பிரிவு வீரர்களை பயணத்திற்கு ஆயத்தம் செய்யுமாறு காப்டன்களுக்கு சொல்! இனியும் அவர்கள் நம் கைதிகள் அல்ல! ஆளுக்கு ஒரு குதிரையும், அருகிலுள்ள ஏதாவது கோட்டையை சென்றடையும்வரை போதுமான தண்ணீர், உணவுப் பொருட்களும் ஏற்பாடு செய்து விட்டு வந்து என்னோடு சேர்ந்து கொள்!
ஓவ்வ்!
அரை மணி நேரம் கழித்து-
கார்ஸனின் செய்தியில் ஒரு அம்சம் என்னை கலக்குகிறது! அதாவது ப்ளாயிட் காயமடைந்த விஷயம்! நாம் உடனே கால்லப் சென்றடைய கார்ஸன் விரும்புகிறான் என்றால் அங்கே நமக்கு ஏதோ ஒருமுக்கிய பணி காத்திருக்கிறது என்று அர்த்தம்!



தர்மம் வெல்லும்!
கார்ஸன் இன்னும் கொஞ்சம் விபரமாக செய்தி அனுப்பியிருக்கலாம்!
என் கணிப்பு சரியாக இருக்குமேயானல் மிச்சத்தை நாம் அவனுடைய வாய் வழியாக கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும்!
அந்தக் கிழவன் நம்மை எதிர் பார்த்து வழியில் காத்துக் கிடப்பார் என்று நினைக்கிறீர்கள்?
உறுதியாக நம்புகிறேன்
பத்து மணி நேரம் கழித்து-விடியும் வேளையில்-
அதோ வந்துவிட்டார்கள்! எமன்கள்! இரவு முழுக்க ஓய்வின்றி பயணம் செய்திருப்பார்கள் போலும்!
ஓ.கே! குதிரைகள் ஓய்வெடுக்கும் வேளையில் சூடாக காப்பி பருகுவதை அவர்கள் வரவேற்கக்கூடும்!
சற்றைக்கெல்லாம்-
ஹலோ-நணபர்களே! முதலில் என்ன வேண்டும் சூடாக காப்பியா-அல்லது லேட்டஸ்ட் நியூஸா!
இரண்டும்!
உட்காருங்கள்! காப்பியை குடித்துக் கொண்டே செய்தியை கேளுங்கள்!
எந்த ஒரு சிறு தகவலையும் வெட்டாமல் நடந்த அனைத்தையும் விபரமாக வெளியிட்டார் கார்ஸன்-
-எனவே, நவஜோ இளைஞர்களின் கொலைக்கு மட்டுமின்றி பிளாயிடை கொல்ல முயன்ற குற்றத்திற்கும் ஹோப்பும், பார்லோவும் பதில் சொல்ல வேண்டி வந்துவிட்டது!


ப்ளாயிட் எப்படியிருக்கிருன்?
பாவம் அவனுடைய நிலைமை கவலைக் கிடமாக உள்ளது!
பிழைத்துக் கொள்வான் என்று டாக்டர் சொல்கிருர். ஆனல் எனக்கென்னவோ நம்பிக்கையில்லை!
அப்படி அசம்பாவிதமாக ஏதேனும் நிகழ்ந்தால் ஹோப்பையும், பார்லோவையும் கண்ட துண்டமாக வெட்டி போட்டு விடுவேன்;
அவர்களை கைது செய்ய ஷெரீப் விரும்பினர், அந்தப் பொறுப்பை உன்னிடம் விட்டுவிடுமாறு சொல்லியிருக்கிறேன்.
நல்ல காரியம் செய்தாய்!
அந்த கோட்டான்களின் கழுத்தில் நான் கை வைக்கும்போது வேருெரு நபர் அங்கே ஆஜராகியிருந்தால் நன்ருக இருக்கும்!
யாரது- பிக் எல்க்கா?
அவரேதான்! கொல்லப்பட்ட நவஜோ இளைஞர்கள் பிக் எல்க்கின் பிரிவை சேர்ந்தவர்கள். எனவே, அவர்களுக்குரிய தண்டனையை தீர்மானிக்கும் உரிமை அவருக்கே உரியது!
உன் கூற்றில் நியாயம் இருக்கிறது! ஆனல் கவர்னர்-
அவர் கிடக்கிருர். ஹோப்புக்கும், பார்லோக்கும் அடுத்தபடியாக இங்கே நடந்த அத்தனை அநியாயங்களுக்கும் அவர்தான் மூல காரணம்!
எனவே, அவர் விரும்புகிருரோ இல்லையோ, இந்த விஷயம் என் போக்கில் தான் தீர்மானிக்கப்படும். இதில் புதிதாக வேறு சிக்கல் எதுவும் எழாது என்பது என் கணிப்பு!
என் நம்பிக்கையும் அதுதான்!
டைகர்-நீ போய் பிக் எல்க்கிடம் நாளை காலையில் குபேரோ சுரங்கத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில், கறுப்பு குன்றின் அடிவாரத்தில் அவர்களை நான் எதிர்பார்ப்பதாகச் சொல்!
ஓவ்!


அதே நாளில்-காலப்பில்-
நோ-நோ-எனக்கென்னவோ நீ சொல்வது சரியாகப்படவில்லை-
அமைதியாக கேளுங்கள் ஷெரீப்-சட்டத்திற்கு முரண்படாத வகையில் பிரச்னைக்கு தீர்வு காண ஒரு வழி இருக்கிறது!
எங்களை உங்களுடைய உதவியாளர்களாக பிரமாணம் எடுத்துக் கொள்ளச் செய்யுங்கள். பின்னர் ஹோப்பையும், பார்லோவையும் கைது செய்யும் பொறுப்பை எங்களிடம் ஒப்படையுங்கள், இவ்வாறாக, எங்களுக்கு சட்டபூர்வமான அதிகாரம் கிடைக்கும்.
ஹோப்பையும் பார்லோவையும் கொல்லவா?
இல்லை ஷெரீப்! அவர்கள் இழைத்த கொடுமைக்கு நூறு தடவை தூக்கிலிடவேண்டும் அவர்களை, சட்டபூர்வமாக அவர்களுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்பதே என் விருப்பமும்!
வில்லர் சொல்வது சரிதான்-ஷெரீப்!
அந்த இரு கயவர்களையும் கைது செய்யும் பொறுப்பை இவர்களிடமே விட்டுவிடலாம்!
ஆல்ரைட்-டாம்!
இப்படி வாருங்கள்! இந்த பாட்ஜை அணிந்துகொண்டு நான் சொல்லும் பிரமாணத்தை திருப்பிச் சொல்லுங்கள்-
DEPUTY SHERIFF
டெக்ஸ், கிட் மற்றும் கார்ஸன் மூவரும் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.
நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நானும் உங்களோடு வரப்போகிறேன்-எல்லாமே சட்டரீதியாகத்தான் நடக்கிறது என்பதை உறுதிசெய்து கொள்ள!
ஹோப்பையும், பார்லோவையும் உயிரோடு எரித்துவிடுவேன் என்ற பயமா?
இல்லை! என் பயம் இதே வேளையில் சுரங்கத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் நவஜோ வீரர்கள் பற்றியது!
கெட்டது போ! இந்த விஷயத்தைப் போய் சொன்னால் ஏகப்பட்ட டாலர்கள் வெகுமதியாகக் கிடைக்கும் எனக்கு!


அன்று மாலை குபேரோ சுரங்கப் பகுதியில்-
யாரோ வருகிறார்கள்!
மிஸ்டர் ஹோப் எங்கே?
பெரிய கூடாரத்தினுள்!
ஏதோ கெட்ட சேதியோடு வந்தவன் போல் அல்லவோ இருக்கிறது அவனுடைய முஞ்சி!
வாருங்கள்-நாமும் போய் கேட்போம்!
சற்றைக்கெல்லாம்-
ஆமாம்! நவஜோ வீரர்கள் பெரும் கூட்டமாக இங்கே வந்துகொண்டிருக்கிறார்கள். கூடவே டெக்ஸ் வில்லரும் அவரது சகாக்களும் வருகிறார்கள்-
!
?
மிக்க நன்றி கோனி! இந்தா-இதை அட்வான்ஸாக வைத்துககொள்-நாங்கள் நவஜோக்களை விரட்டியடித்த பிறகு-
ஒரு நிமிடம்! நான் இங்கே நிற்கப் போவதில்லை.
கோடிகோடியாக நீங்கள் கொட்டிக் கொடுப்பதானாலும் ஒரு விநாடிகூட இங்கே தாமதிக்க மாட்டேன், நவஜோக்கள் தங்களுடைய கைதிகளை என்ன செய்வார்கள் என்றறிவேன், நாளை விடிகாலையில் பழி வாங்கும் ஆவேசத்தோடு பல நூறு நவஜோக்கள் இங்கே வந்து சேரப் போகிறார்கள்.
நான் வந்து சொன்னதும் உடனே குதிரையிலேறி கண்காணாமல் ஓடிப் போவீர்கள் என்று எதிர்பார்த்தேன். மாறாக, வலிய வம்பில் மாட்டிக்கொள்ள துணிந்து விட்டீர்கள். ஆல்ரைட், நீங்கள் எக்கேடும் கெட்டுப் போங்கள்-நான் போகிறேன்!
கேட்டாயல்லவா?
செத்துப்போக இஷ்டமில்லை எனக்கு-போய்விடப் போகிறேன்!
போ! நாங்களும் வருகிறோம்!


ஐந்து நிமிடங்களுக்குப் பின்-
அங்கே என்ன நடக்கிறது?
தெரியவில்லையா? எல்லோரும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓட்டம் பிடிக்கிருர்கள்!
அவர்கள் புத்திசாலிகள்! நானும்தான்! - இதோ கிளம்பிவிட்டேன்!
!
!
பத்து நிமிடங்களுக்குப் பின் அந்தப் பிராந்தியத்தில் தாங்கள் மட்டுமே தனித்து இருப்பதை தெரிந்து கொண்டார்கள் ஹோப்பும், பார்லோவும். அங்கே இனியும் இருப்பது மரணத்திற்கு வலிய அழைப்பு விடுவதாகும் என்ற விவேகம் தாமதமாகவே அவர்களுக்கு உறைத்தது-
வேறு வழியில்லை சாம்-வா-நாமும் போய் விடுவோம் இங்கிருந்து!
எங்கேதான் போவது!
ஸல்ஃபர் நீரூற்று இங்கிருந்து முப்பத்தைந்தாவது மைலில் உள்ளது. அதிர்ஷ்டமிருந்தால் நாம் அங்கே பத்திரமாக போய்ச் சேர்ந்து விடலாம்!
அந்தோ பரிதாபம்-அதிர்ஷ்டம் வெகு சீக்கிரமே அவர்களை கைவிட்டுவிட்டது. புறப்பட்ட மூன்ருவது மைல் தொலைவில் ஒரு குதிரை முடமாகி விட்டது-
நானும் உன்னோடு ஏறிக் கொள்வதை தவிர வேறு வழியில்லை!
புரியாமல் பேசுகிருய்!
மறுநிமிடம் கொஞ்சமும் எதிர்பாராத சம்பவம் திடீரென்று நிகழ்ந்தது-
பிஸ்டலை தூர எறி பார்லோ! ஒரு குதிரையில் இரண்டு பேர் ஏறி சல்ஃபர் நீரூற்றை சென்றடைய முடியாது எனவே-தூர எறி!
ார்லோ! ஒருவர் தப்பிக்க வாய்ப்பிருக்கையில் இருவரும் மரணமடைவது என்பது மடத்தனம்!
டுமீல்
ஆனால் பார்லோ தன் இடையில் ஒளித்து வைத்திருந்த துப்பாக்கியை சரேலென உருவி தனக்கு முதுகை காட்டியவாறு குதிரையில் விரைந்த ஹோப்பை சாமாரியாக சுட்டான்-
?
டுமீல்


ஓ-சைத்தானே!
உனக்கு இங்கேதான் சமாதி, ஸாம்!
டுமீல்!
பார்லோ! நான் உன்னைக் கொல்லாமல் விட்டது தப்பாகி விட்டது! இப்போதும் ஒன்றும் மோசம் போய் விடவில்லை!
வரவிருந்த ஆபத்தை உணர்ந்த பார்லோ டெர்ரிஞ்சரில் தோட்டா காலியாகி விட்டதால் தான் முன்பு கீழே போட்ட பிஸ்டலை எடுக்க முன்னால் பாய்ந்தான்-
ஆனால் ஹோப் முந்திக் கொண்டு விட்டான்-
டுமீல்
டுமீல்
தோட்டாக்கள் சீறிக்கொண்டு வந்தன-
வா-சேர்ந்தே போகலாம்-நரகத்திற்கு!
பின்னர்-சில மணி நேரம் கழித்து-
இதோ-அவர்கள் சென்ற தடம் இதுவாகத் தானிருக்கும்! முன்னேறுங்கள்.


டெக்ஸ் அங்கே கீழே கவனி!
கழுகுக் கூட்டம்.
கழுகுகள்வட்டமடித்த இடத்தைநோக்கி படு வேகத்தில் குதிரையை விரட்டிக் கொண்டு போய்ச் சேர்ந்தார்கள் டெக்ஸும் மற்றவர்களும்!
அவர்கள் கொஞ்சமும் எதிர்பாராத காட்சியை அங்கே கண்டனர்.
இன்னதான் நடந்தது என்பது தெளிவு!
ஐயத்திற்கு இடமே இல்லை!
கடவுளின் தீர்ப்பு இது-டெக்ஸ்!
ஆம்!
ஓவ்-நவஜோ இளைஞர்களின் இரத்தம் சிந்தக் காரணமான பாவிகளை தெய்வத்தின் சீற்றம் பலிகொண்டு விட்டது!
சவக்குழி தோண்டுங்கள்!
இது நடந்து ஒரு மாத காலம் கழித்து காலப்பில்-
வரலாம்!
டக் டக்
ஹலோ-பனாமி!
டெக்ஸ்! வந்துவிட்டீர்களா? என்னடா கண்ணிலேயே காணோமேஎன்று எண்ணிக் கொண்டிருந்தேன்.
எப்போது நீ முழுமையாக குணமடைந்து முன் போல் நடமாடுவாய் என்ற சிந்தனை எனக்கு! அது சரி-இன்று என்ன விசேஷம் தெரியுமோ உனக்கு?
ஏன் தெரியாது?




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும்,
ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி.
போன்: 21159 அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி-626 123. வெளியீடு எண்: 81

அறிமுகம்!

# லயன் புக் க்ளப்!

## ★ புக் க்ளப் என்றால் என்ன?

மாதந்தோறும் நமது நிறுவனத்திலிருந்து நான்கு காமிக்ஸ்கள் வெளிவருகின்றன. (லயன், திகில், மினிலயன் & முத்து காமிக்ஸ்) உங்கள் ஊரில் சரியான சமயத்தில் நமது புத்தகங்கள் கிடைக்காவிட்டாலோ-சீக்கிரமே விற்றுத் தீர்ந்து விடுவதாலோ உங்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு!

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இது தான்! ரூ. 10/- கட்டி க்ளப் மெம்பராக சேர்ந்துவிட்டால் மாதா மாதம் உங்கள் வீடு தேடி-4 புக்குகளும் V. P. P.ல் வரும். போஸ்ட் மேனிடம் பணம் செலுத்தி பார்சலை நீங்கள் பெற்றுக் கொண்டால் போதும்!

இனி புத்தகங்களைத் தேடி கால் கடுக்க கடைகளுக்கு அலைய வேண்டியதில்லை! அதே போல் சந்தா மூலம் பிரதிகளைப் பெற்று வரும் வாசகர்களுக்கும் புக்குகள் தபாலில் தொலைந்து போகும் தலைவலி இனி கிடையாது!

ஆகையால் இன்றே ரூ. 10/- செலுத்தி புக் க்ளப்பின் மெம்பராக பதிவு செய்துகொள்ளுங்கள்! உங்கள் அபிமான கதாநாயகர்கள் உங்கள் வீடு தேடி வருவார்கள்!

ஆமாம்! லயன் புக் க்ளப்பின் மெம்பராக சேர நான் விரும்புகிறேன், மாதந்தோறும் எனக்கு அனுப்பப்படும் V. P. பார்சல்களை ஏற்றுக் கொள்ள உறுதியளிக்கிறேன்.

பெயர் : ______________________

முகவரி : ______________________

______________________

______________________

தபால் நிலையம் : ____________ பின்கோடு நம்பர் ____________

இக்கூப்பனுடன் ரூ. 10/-க்கான மணி ஆர்டர்/ஸ்டாம்புகள் அனுப்பியுள்ளேன்.

____________

கையெழுத்து.



# எழுந்து வந்த எலும்புக்கூடு!

மினி லயன்



ரூ.3/-